வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆடி திங்கள் 5-ம் நாள் (21—7—1963) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 29 | இதழ் 8

# சிம்மாசனப் பிரசங்கத்தில் திடீர் மாற்றம்

## 'சுதந்திரன்' வெளியிட்ட செய்தியின் எதிரொலி

சிம்மாசனப் பிரசங்கத்தில் சிங்களத்தைத் தேசிய மொழியாக்குவது என்று பிரகடனம் செய்யப்படவிருந்தது திடீரென நிறுத்தப்பட்டது. அரசாங்கத்தின் அந்தரங்கத்திலிருந்த இச் செய்தி சுதந்திரனில் அம்பலமாக்கப்பட்டதைத் தொடர்ந்தே இத்திடீர் மாற்றம் ஏற்பட்டதாக நம்பகமாகச் செய்தி கிடைத்துள்ளது.

சுதந்திரனின் செய்தியுடன் சில தமிழ்ப் "பிரமுகர்கள்" அலரிமாளிகைக்குச் சென்று அழுது புலம்பினார்களாம். மாவட்ட சபைகள் பற்றி அவர்களுக்குக் கொடுத்த வாக்கும் காற்றில் பறக்க விடப்பட்டு விட்டதை அறிந்தும் அறியாதவர்போல் இவர்கள் வேடம் போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சிம்மாசனப் பிரசங்கத்தில் சிங்களமே இந்நாட்டின் தேசிய மொழி என்று பிரகடனப் படுத்தப்படவிருந்தது கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது. பலவகையாலும் ஆட்டங் கண்டுள்ள அரசாங்கத்துக்கு இப்பிரகடனத்தின் மூலம் மேலும் பல சிக்கல்கள் தோன்றக் கூடும் என்று சிலர் வற்புறுத்தியதன் பேரில் தான் தேசிய மொழிபற்றி பேச்சே சிம்மாசனப் பிரசங்கத்தில் சேர்க்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

### சுதந்திரனின் சேவை

சிம்மாசனப் பிரசங்கத்தில் சிங்களத்தை மட்டும் தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தப்படவிருந்தும் கடைசிநேரத்தில் அந்த நிலை மாற்றப்பட்டது. இதற்குக் காரணம் அரசாங்கத்தின் எதேச்சாதிகாரமான திட்டத்தை 'சுதந்திரன்' சென்ற வாரம் அம்பலப் படுத்தியதுதான் என்று இப்பொழுது தெரியவருகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)



இலங்கையிலுள்ள உலக விவகார ஸ்தாபனத்தினரின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்திருந்த இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் பேராசிரியர் ஜோன் கென்னத் கால்பிரெய்த் அவர்கள் டாக்டர் இ. எம். வி. நாகநாதனின் பேச்சை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார். நீதி அமைச்சர் திரு. சாம். பி. சி. பெர்னாண்டோவும், திரு. வில்மட் பெரேராவும், டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் (பின்புறமாக இருப்பவர்) காணப்படுகின்றனர்.

# சிங்கள அமுலை ஒத்திவைப்பதில்லை என அரசாங்கத்தின் முடிவு

## நீதி மந்திரியின் திருத்தம் வாக்கெடுப்பு வரை கிடையாது

1964-ம் ஆண்டு ஜனவரி முதலாம்திகதி அமுலுக்குக் கொண்டு வரப்படவிருக்கும் சிங்களம் மட்டும் சட்டத்தை எந்தக் காரணம் கொண்டும் பின்போடுவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

புதன்கிழமையன்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் நீதி மந்திரி திரு. சாம். பி. சி. பெர்னாண்டோ சமர்ப்பித்த அறிக்கை ஒன்றை மந்திரி சபை கவனத்துக்கெடுத்துக்கொண்டதென்றும் ஆனால் அதுபற்றிய முடிவை சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்பு முடியும் வரையில் எடுத்துக்கொள்வதில்லையென விட்டிருக்கிறது எனவும் தெரிகிறது.

திரு. சாம். பி. சி பெர்னாண்டோவின் குறிப்பைப்பற்றி மந்திரி ஒருவர் "குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்ளக்கூடாது" என்று வர்ணித்ததாக கூறப்படுகிறது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு சிங்களத் திணிப்புச் சட்டத்தைப் பின்போடுங்கள் என்று கேட்டுக் கொண்ட கோரிக்கைகள் எல்லாவற்றையும் அரசாங்கம் சென்ற வாரத்திலேயே நிராகரித்திருந்தது.

இதற்குக் காரணம், சர்க்கார் கட்சிக்குள்ளிருக்கும் முக்கியஸ்தர்களில் பலர் அப்படியான மாற்றம் எதையும் விரும்பவில்லை என்றும், பிரதமரிடம் படையெடுத்துச் சென்று மாற்றம் செய்யக்கூடாதென்று கேட்டுக் கொண்டதாகவும் பாராளுமன்றவட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

சிங்கள அமுலை மேற்கொண்டு நீடிக்கக் கூடாதென வற்புறுத்தும் கோஷ்டிக்குள் பிரபல்யமான மந்திரி ஒருவருடைய பெயரும் அடிபடுகிறது. இவர் தான் சிங்கள அமுலுக்குத் தூண்டுகோலாக இருக்கிறாராம்.

### இரகசியக் கூட்டம்

சமீபத்தில், குறிப்பிட்ட மந்திரிக்கும் அவரது ஆதரவாளர்கள் சிலருக்குமிடையே கொழும்புக்குச் சுமார் இருபது மைல்களுக்குள்

(9-ம் பக்கம் பார்க்க)

## நாம் சிங்களவர் இயக்கம்

இங்குள்ள சிங்களவர்களுக்கும், பௌத்தர்களுக்கும், சிங்களக் கலை,கலாச்சாரம் முதலிய அனைத்துக்குமே பேரபாயத்தை விளைவிக்க வல்ல நாம் தமிழர் இயக்கம் இலங்கையில் மும்முரமாகப் பரவி வருகிறதாம். இந்த அபாயத்தைத் தடுக்கவே கந்தளாயில் நாம்-சிங்களவர் இயக்கத்தைச் சிலர் ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

# இன வெறியைத் தூண்டும் இயக்கத்தின் தீவிரம்

## சிங்கள ஜாதிக சங்கமயத்தின் சுவரொட்டிப் பிரச்சாரம்

சிங்கள மொழி வெறியைத் தூண்டி விடுவதற்காக சிங்கள ஜாதிக சங்கமய தீவிர வகுப்புவாதப் பிரச்சார இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளது. மொழி வெறியைக் கிளறிவிடும் சுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்பட்டுள்ளன. நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்தவும் சங்கமய ஏற்பாடு செய்துள்ளது.

சிங்கள வகுப்புவாதம் மீண்டும் தலைதூக்குகிறது. கடந்த பொதுத் தேர்தலின் போது குழிதோண்டிப் புதைக்கப்பட்ட வகுப்புவாத ஸ்தாபனமான சிங்கள ஜாதிக சங்கமய மறுபடியும் தலைதூக்கி மொழிவெறிக்குத் தூபமிடத் தொடங்கியுள்ளது.

நகரெங்கும் சுவரொட்

(9-ம் பக்கம் பார்க்க)




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

# பாரதி கண்ட பொருளாதாரம்

## பாரத மக்களுக்கு ஏற்றது

—o—

## கவிஞனின் உள்ளத்தை உணராதோரின் கருத்தற்ற காட்டுக் கூச்சல்

—"மணிமொழியாளன்"—

மகா கவி பாரதிக்கு முற்பட்ட கவிஞர்கள் அரசியலின் பணிப் பெண்ணுகிய பொருளாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அன்றைய அறச் சார்பான நோக்கமும் பொருளாதார நிலையுமே அதற்குக் காரணமாகும். "செல்வமா? வாழ்க்கையைத் தவிர வேறு செல்வமில்லை" என்ற மேனுட்டு அறிஞனின் கூற்றிற்கிசைய வாழ்ந்த பாரதி பொருளாதாரம் பேசுவதேன்? பொருளாதாரத்தின் மையம் செல்வமல்ல, மனிதன்தான் என்பதை அறிந்து கொண்டால் இம்மயக்கம் ஏற்படாது.

குடிப்பதற்குக் கஞ்சியில்லாத மக்கள் அதன் காரணத்தை அறியாது பஞ்சம் பஞ்சம் என்று துஞ்சி மடிவதைக் கண்ட கவி, பஞ்சமும், நோயுமின்றி மக்கள் வாழ வேண்டின் அரசியல் சுதந்திரத்துடன் பொருளாதார சுதந்திரமும் ஏற்பட வேண்டும் என்று விரும்பினர்.

அரசர்களும், செல்வர்களும் ஆதரித்து வந்த தொழில்கள் வெள்ளையர் ஆட்சி வந்ததும் ஆதரிப்பார் இல்லாது மறைந்ததும் வெள்ளையரும், இந்தியரும் வெளி நாட்டுப் பொருட்களை விரும்பியதும், வெள்ளையர் இந்தியத் தொழில்களை அழித்ததும், தொழிற் புரட்சி இங்கிலாந்து இந்தியாவைக் கச்சாப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடாகவும் வினைமுற்றிய பொருட்களை விற்பனை செய்யும் அங்காடியாகப் பாவித்ததும், நீராவிக் கப்பல் ரயில்வண்டி முதலியவற்றின் உதவியுடன் கழுத்தறுப்புப் போட்டியில் ஈடுபட்டதும் ஆகிய விடயங்களைக் கண்ட தீவிர தேசியவாதிகள் கொதித்தெழுந்தனர். இத் தீவிரக் குழுவைச் சேர்ந்த பாரதி ஏகாதிபத்தியவாதிகள் "பொழுதெலாம்......செல்வம் கொண்டு போக" விடாது தடுக்கவே பொருளாதாரக் கருத்துக்களை வெளியிட்டார் எனலாம்.

### பொருளாதார தீர்க்கதரிசனம்

உலகத்தில் எங்குமே இல்லாதபடி இந்தியாவில் மட்டும் பஞ்சம் தோன்றியிருக்க அதை நீக்க வழி தேடாது வாய் வேதாந்தம் பேசுவதில் பயனில்லை என்பதை அறிந்த பாரதி "சோறில்லாமல் சோர்ந்துகிடக்கும் ஜனக்கூட்டத்தாருக்குத் தர்மோபதேசங்கள் பண்ணுவதிலே எனக்குச் சந்தோசமில்லை" என்று கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

பணம் என்னும் விஷத்தைச் சாடும் பாரதி ஓரிடத்தில் பணம் நல்லது, ஆனுல் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல் என்றதும், இன்று பொருளாதார இயலில்கூறப்படும் பேரளவு உற்பத்தி பற்றிப்பேசுவதும், கர்ம விதியில் நம்பிக்கையுள்ளவராயிருந்தும் ஏழ்மைக்கும் செல்வத்திற்கும் காரணம் தெரிய வேண்டுமாயின் பொருள் நூல் பார்க்க வேண்டும் அல்லாது, ஜன்மாந்தர விஷயங்களைக் கொண்டு வருதல் வீண் பேச்சு என்றதும், உலகத்து வியாபார நிலையையும் பொருள் வழங்கும் முறைகளையும் மனித தந்திரத்தால் மாற்றி வறுமையை விரட்டி விடலாம் என்றதும் அவரின் பொருளாதார அறிவுக்கு நல்ல உதாரணங்களாகும்.

மேலும் ருஷ்யாவுடன் இங்கிலாந்து வியாபாரஞ் செய்யக் கூடாதென்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று எழுதியிருந்ததை மறுத்து நாளை அல்லது மறுநாள், அல்லது அதற்கடுத்த நாள் ருஷ்யாவுடன் வியாபாரம் தொடங்கல் இன்றியமையாததாய் விடும் என்று பாரதி எழுதியிருப்பது அவரின் அரசியல் பொருளாதாரத் திர்க்கதரிசனத்தைக் காட்டுகிறதென்பதை மறுக்க முடியாது.

பாரதி தன் சொந்த வாழ்வில் வறுமையின் எல்லையைக் கண்டவர். பாரதத்தின் தீராத, மாருத வறுமையையும் கண்டவர். எனவே அவரின் பொருளாதாரக் கருத்துக்களை வெறுங் கற்பனை என்று தள்ளிவிடுவதற்கில்லை. பணமில்லாதவன் பிணம் என்பது முது மொழி. ஆகவே "பொருளிலார்க்கினமில்லை, துணையில்லை, பொழுதெலாம் இடர் வந்தெற்றுமால் பொருளிலார் பொருள் செய்தல் முதற் கடன்" என்று பாரதி புத்தி புகட்டுவதில் வியப்பில்லை.

வறுமையைப் பற்றிய உண்மை அனுபவமே "கூடுந் திரவியத்தின் குவைகள்—திறல் கொள்ளுங் கோடி வகைத் தொழில்கள் இவை நாடும் படிக்கு வினைசெய்து இந்த நாட்டோர் கீர்த்தி யெங்குமோங்க—கலி சாடுந் திறனெனக்குத் தருவாய்" என்று வரங் கேட்கவும் செய்தது. ஒரு நாடு அரசியல் சுதந்திரம் மட்டும் பெற்றிருப்பதால் தேனும் பாலும் ஓடும் நாடாகி விடாது. பல்லாண்டு காலமாக சுதந்திர நாடுகளாகத் திகழும் பெரு, பொலிவியா போன்ற நாடுகள் பொருளாதாரத்தில் மிக மிகத் தாழ்ந்த நிலையிலிருப்பதே இதற்குச் சான்ருகும். எனவே அரசியல் சுதந்திரத்துடன் பொருளாதாரச் சுதந்திரமும்வேண்டும் என்று பாடிய பாரதியைப் போற்ருது விட முடியாது.


பாரதியின் 'பாரத தேசம்' "தொழில்" என்ற இரு கவிதைகளும், பொருளாதாரக் கருத்துக்களைக் கொண்ட உரைச் சித்திரங்களும் இருபதாம் நூற்ருண்டின் மனோவேகத்தைக் காட்டுகின்றன என்பது மிகையாகாது.

பொருளாதாரம் பேசிய பாரதி முதலாளித்துவப் பொருளாதாரம் பற்றிப் பேசினுரா அல்லது கம்யூனிசம் பற்றிப் பேசினுரா என்று இன்று கேட்கப்படுகிறது.

பாரதியின் தீவிர தேசியவாதத் தன்மையையும் பொருளாதாரக் கருத்துக்களையும் ஒன்று சேர்த்து அவர் ஒரு சமதர்மவாதி என்று பலர் வாதிப்பர். பாரதியைக் கவி என்ற கோதாவில் பாராது, அறிவாராய்ச்சி செய்யப் புகுதல் தவறு என்பர் சிலர். ஆனுல் வேதாந்தத்திற்கும் சமதர்மத்திற்குமுள்ள தொடர்பை நன்கு அறிந்தோர் முன்னவர் கூற்றில் சிறு உண்மை இருப்பதை மறைக்கமாட்டார்கள்.

வேதாந்தியாகிய பாரதி பார்த்ததெல்லாம்

(15-ம் பக்கம் பார்க்க)


# ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

# ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.


## கவிதைப் பூங்கா

### 'அண்ணல் ஒருகால் வருவாயே'

—செவ்வேள்—

ஈழத் தாயின் திருமகனே,
இன்பத் தமிழுக் கொருமகனே,
ஆழக் கடல்நேர் அறிவோனே,
அருளே உருவாந் துறவோனே,
வாழத் தமிழைப் பலவகையால்
வளர்த்துச் சிறப்புச் செய்தோனே,
யாழைப் புதுக்கித் தந்தோனே,
யாரே யுன்னை யொப்பாரே!

செம்மை யழகு நலமென்னும்
தெய்வப் பண்பைத் தெரிவிக்கும்
மும்மைத் தமிழின் துறையெல்லாம்
மூழ்கித் திளைத்த புலவோனே,
இம்மைப் பிறவிப் பயனெல்லாம்
இன்பத் தமிழின் பணியென்ற
அம்மெய்ப் பொருளை அறிவுறுத்தி
அழியா வாழ்வைப் பெற்ருயே!

பண்டைத் தமிழர் கலைமாண்பைப்
பாரோர் அறியப் பன்முறையும்
பண்டைப் பனுவற் கடல்படிந்து
பாழில் மறைந்த பொருளாய்ந்து
விண்டு விரித்தாய் யாழ்நூலை
விபுலா நந்தா நீசெய்த
தொண்டுக் குவமை சொலப்போமோ,
சொல்லிற் படுமோ நின்புகழே!

இதங்கொள் கலையாம் நாடகத்தை
இழந்தார் இற்றைத் தமிழரென
விதங்கொள் வடநூல் ஆங்கிலத்தில்
விளங்குஞ் செம்மைப் பொருடேர்ந்து
மதங்க சூளா மணியென்னும்
மங்காத் தமிழ் நூல் செய்தோய்,நின்
பதங்கள் மனத்தில் இருத்தியுனைப்
பரவிப் பணிவோம் பத்தியொடே.

சொல்லின் கிழத்தி யொருத்தியவள்
தோன்றுங் கோலம் மொழிவகையாற்
பல்ல வாகு மெனுமெய்ம்மை
பாங்கா யுணர்த்த ஆங்கிலத்தின்
மல்லற் கவிதை வளந்தேர்ந்து
மாணத் தமிழில் வழங்கினையால்,
இல்லைப் புலவர் எம்மிடையே
இன்னும் ஒருகால் வாராயே.

முறையாய்த் தமிழைக் கல்லாதோர்,
முழுதும் அறிந்தார் போல்நடிப்போர்,
நிறையாப் போலிக் கல்வியினோர்
நெஞ்சில் நேர்மை யில்லாதோர்
கறையே மலிந்த நூலியற்றிக்
கன்னித் தமிழைச் சிதைக்கின்ருர்;
அறைபோ யவருக் கறிவுறுத்த
அண்ணல் ஒருகால் வருவாயே.

—o—

## கவிதை நெஞ்சம்

—யூ. எல். தாவூத்—

கருணையுறை உளவேந்தே! இனிமேலும் நான்
கஜ்னவி பதிநாடி ஏக மாட்டேன்
அருமையிலா அவ்வண்ணல் நாட்டி லென்றும்
அடிவையேன் எனமறுத்தார் பிர்தவ்சு.

அருமையுடை பாமன்ன; வேந்தர் மஹ்மூத்
அளித்திட்ட உறுதியினைக் காப்ப தற்கு
மறுபடியுஞ் சந்தர்ப்ப மொன்றை ஈவோம்
மறுக்காது நீரங்கு செல்ல வேண்டும்;

ஒருநூறு பாடலுக்கே நான ளிக்கும்
ஒருலட்சம் பொன்பரிசில்; அந்த வேந்தன்
அறுபதி னுயிரம்பொன் னளிப்பா னென்று
அறைந்திட்டார் தப்ரிஸ்தான் நாட்டுக்கோமான்

(தொடரும்)




இ. பத்மநாதன்,
திருகோணமலை.

கே: சீன இந்தியா மீது மறுபடியும் படை எடுத்தால் அதன் முடிவு என்னவாகும்?

ப: முதற் படையெடுப்பில் நேர்ந்த கதிதான் ஏற்படும்—அதுதான் தோல்வி.

ஃ

எஸ். கே. வி., லஸ்சேனை
தோட்டம், தெரனியகலை.

கே: இலங்கை தொழிலாளர் கழகத்தில் அங்கத்தினராக இருக்கும் ஒருவருக்கு தோட்டத் துரையாலோ, இடது சாரிக் கட்சிக்காரர்களாலோ தொந்தரவுகள் ஏற்பட்டால் அந்த அங்கத்தினர் முதலாவது என்ன செய்ய வேண்டும்?

ப: உடனே அண்மையிலுள்ள இ. தொ. கழகக் கிளைக் காரியாலயத்தில் தெரிவிக்க வேண்டும். அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள்.

ஃ

சூ. மரியதாசன், உருத்திரபுரம்.

கே: சிங்களம் படித்தால் உத்தியோகம் கிடைக்குமா?

ப: கிடைக்கும் சிங்கள பௌத்தர்களுக்கு—தமிழர்களுக்கல்ல.

ஃ

தமிழரசு அபிமானி,
இராமநாதபுரம்.

கே: கச்சேரி முறையை அரசாங்கம் ஒழித்து மாவட்ட சபை மூலம் கருமங்களை நிர்வகித்தாலும் தமிழ மாகாணங்களில் தமிழால் அலுவல்கள் நடக்குமென்பது என்ன உறுதி?

ப: வட, கிழ் இலங்கையில் மாவட்ட சபையின் அலுவல்கள் அனைத்தும் தமிழில் நடத்த அனுமதிக்கப்படவில்லையேல், அச்சபையும் ஒரு கண்துடைப்பாகிவிடும்.

ஃ

செல்வி பாப்பா சரவணமுத்து,
யாழ்ப்பாணம்.

கே: குயுக்தி மாமா, உங்கள் விலாசத்தை தவிர கொழும்பிற்கு தமிழிலே போடும் கடிதம் ஒன்றும் உரியவரிடம் போய்ச் சேருகிறதில்லையே. அப்படியானல் நாம் பிற மொழியை நாட வேண்டியிருக்கிறதே. என்ன செய்யலாம்?

ப: எந்த மொழியை நாடினலும் இந்த ஆட்சியில் கடிதம் விலாசதாரரிடம் போய் சேருவது அதிர்ஷ்டத்தை பொறுத்த விஷயமாகி விட்டது. கையால் கூட தொடாமல் சுமார் 10 இலட்சம் கடிதங்கள் பெரிய தபால் கந்தோரில் தேங்கிக் கிடக்கின்றனவாம்!

ஃ

வி. ஆர். கிருஷ்ணகுமார்,
போபிட்டிய பஜார்.

கே: உண்ணு விரதம் மேற்கொண்ட தாதியரில் ஒருவர் தன் உயிரையே அர்ப்பணித்து விட்டாரே, இவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவரைத் தியாகி என்கின்றன தொழிற்சங்கங்கள். ஒரு பெண்ணின் ஆட்சியிலே இளம் பெண்களின் கதி இது தானு?

ஃ

சி. சற்குணம், பனை.

கே: சதா சண்டை போடும் மனைவியால் கணவரின் இரத்த ஓட்டம் பாதிக்கப்படுவதாகவும் அதனுல் இருதய நோய் வந்து விடுவதாகவும் பிரான்க் நோலன் என்ற வைத்திய நிபுணர் கண்டு பிடித்திருக்கிறாராமே. கணவன் சதா சண்டை போட்டால் மனைவிக்கு இருதய நோய் வராதா?

ப: கண்டிப்பாக வரும். காரணம் மனைவிக்கும் இரத்த ஓட்டமும் இருதயமும் இருப்பதே.

ஃ

நா. நடராசா, சங்கானை.

கே: ஊர்காவற்றுறையில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகிய திரு. வே. நவரத்தினத்துடன் போட்டியிடுபவர்கள் கட்டுப் பணத்தைப் பெறுவார்களா?

ப: கட்டுப் பணத்தை இழக்கத் தயாராகவே அவர்கள் போட்டியிடுகிருர்கள். எனவே அதனை மீண்டும் பெறுவார்களா என்ற பிரச்சினையே எழ முடியாது.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் விளுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ஃ

பெ. சிவசுப்பிரமணியம்,
டாட்டன்பீல்ட்.

கே: இலங்கையில் "நாடற்ற" இந்திய வம்சாவளிகளைப் பற்றி இலங்கைப் பிரதமரும் இந்தியப் பிரதமரும் என்ன தீர்மானம் செய்திருக்கிறுர்கள்?

ப: எந்தத் தீர்மானமும் செய்யவில்லை. நாடற்றவர்கள் எந்த நாட்டுக்கும் உரியவர்களல்ல. எனவே அவர்களின் பிரச்சினையும் எந்த நாட்டுக்கும் உரியதல்ல. அப்படியானுல் எந்த நாடுதான் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்?

ஃ

ஆ. சரவணமுத்து,
இரணை.இலுப்பைக்குளம்.

கே: ஒருவர் நற்கருமங்களுக்குச் செல்லும் போது கணவனை இழந்த பெண்கள் எதிர் வந்தால், துர்ச் சகுனம் என்கிருர்களே, அப்படியானுல் இலங்கைப் பிரதமர் இராச்சிய பாரத்தைத் தாங்குதல் தகுதியா?

ப: கைம்பெண் இராச்சிய பாரம் தாங்கக் கூடாதென்று யாரும் கூறவில்லையே! அவர் எதிரில் வரும் போது நீங்கள் சற்று விலகிக் கொண்டால் சகுனப் பிழை ஏற்படாது.

ஜி. ரா. அச்சுதன்,
எவிங்டன் தோட்டம்.

கே: ஒரு பெண் ஒரு ஆணிடமிருந்து எதை எதிர்பார்க்கிருள்?

ப: 'மணிபர்ஸி'ன் நிறைவை.

ஃ

எஸ். குழந்தை வேலு,
கொடிகாமம்.

கே: தன்னலக் கட்சித் தலைவர் ஜீ. ஜீயின் வருங்காலம் எப்படியிருக்கும்?

ப: யாழ்ப்பாணத்தில் அவர் நினைவுச் சின்னமாகச் சிலை எழுப்பப் போகிருர்களாம்! இதிலிருந்து வருங்காலம் முடிந்துவிட்டதென்பது புலனுகிறதல்லவா?

ஃ

வை. கு. மூர்த்தி, சரவணை.

கே: "தீவுப் பகுதி இடைத் தேர்தலில் சிவஞானத்துக்கு பதில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் போட்டியிட முன் வந்தால்..."

ப: யார் முன்வந்தாலும் அரசாங்கத்துக்கு இலாபமே! 'டிபாஸிட்' தொகை அரசாங்க கஜனுவுக்குப் போய்ச் சேருமல்லவா?

ஃ

அ. கமூர்தீன், திருகோணமலை.

கே: சுதந்திரனை முதன் முதல் அச்சிட்டு வெளியாக்கியது எந்த ஆண்டில்?

ப: 1947-ல். "16 ஆண்டுகளுக்குமுன் சுதந்திரனில்..." என்ற ஒரு சுவையான அம்சம் இவ்வாரச் சுதந்திரனில் ஆரம்பமாகியுள்ளது.

ஃ

'ரத்னு', தெல்லிப்பளை.

கே: தலைவிதி என்பார்களே, அதை நீர் நம்புகிறீரா? தலைவிதி என்ருல் என்ன?

ப: ஆம்—தலைக்கு ஏற்பட்டுள்ள விதி—அதுதான் மூளை, கண், காது, மூக்கு, வாய் ஆகியவற்றைச் சுமந்து திரியும் விதி.

ஃ

எஸ். அப்துல்காதர்,
உடபுசல்லாவ.

கே: இந்திய—சீன எல்லைச் சண்டை முடிவென்ன?

ப: முடிவு மற்ருெரு போர் என்பது இருதரப்பினரும் செய்யும் ஏற்பாடுகளிலிருந்து தெரிகிறது.

தமிழரசு, இராமநாதபுரம்.

கே: தமிழ் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஒரே நாளில் ஒரே முகமாகத் தமது பதவிகளைத் துறந்துவிட்டால்......?

ப: பதவி துறத்தலை அநீதியை எதிர்க்கும் எதிர்ப்பு நடவடிக்கையாக்கலாம் என்று கருதுகிருர்களா? சத்தியாக்கிரக முறைக்கமைய அப்படியிருப்பினும், அது இன்றைய நிலைமையில் சாத்தியமன்று. ஒரே நாளில் ஒரே முகமாகப் பதவி துறப்பதைவிட, ஒரே நாளில் ஒரே முகமாக வேலை நிறுத்தம் செய்தல் சுலபமல்லவா?

கே: நாட்டுக்காகத் தியாகம் செய்யும்படி எம்மைக் கேட்டுக் கொள்ளும் பிரதமர் நாட்டுக்காகத் தாம் செய்யும தியாகம் என்ன?

ப: தன்னுல் தியாகம் செய்ய முடியாதபடியினுல் தானே உங்களைத் தியாகம் செய்யச் சொல்லுகிருர்.

கே: திரு. பொன்னம்பலத்துக்குச் சிலை அமைக்க வேண்டுமெனச் சில யாழ். நகரசபை உறுப்பினர் ஒரு தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். உயிரோடிருக்கும் ஒருவருக்குச் சிலை அமைப்பது எதன் பொருட்டெனத் தெரியுமா குயுக்தியாரே?

ப: அவர் உயிரோடிருந்தாலும் அவரது அரசியல் வாழ்வு இறந்து பட்டதென்பதை நினைவூட்டும் சின்னமாகச் சிலை எழுப்பப் போகிருர்களோ?

ஃ

செல்வி செல்லம், மடுல்சீமை.

கே: நான் விரும்பாத ஒரு மாப்பிள்ளையைத் திருமணம் செய்யும்படி பல பேர்கள் என்னை வற்புறுத்துகிருர்கள்.

ப: விருப்பமில்லையேல் திட்ட வட்டமாக மறுத்து விடுங்கள். யாரும் உங்களை அசைக்க முடியாது.

ஃ

'ஈழத்தரசன்'
செம்பியன்பற்று.

கே: பொறுத்தார் அரசாள்வார் என்பது முதுமொழி. ஆனுல் தமிழ் மக்கள் இனியும் பொறுமையுடன் இராது, சிங்களத் திணிப்பை எதிர்க்க நேரடி நடவடிக்கையில் இறங்கினுல் என்ன?

ப: நேரடி நடவடிக்கை எடுக்கச் சந்தர்ப்பம் சரியாக இருத்தல் வேண்டும். எதிரியின் நடவடிக்கைகளையும் கவனிக்க வேண்டும். அத்தோடு அரசியற் சம்பவங்கள் உருவாகும் தன்மையையும், அரசியற் போக்கையும் மனதிற் கொள்ள வேண்டும். "சம்பவங்களே அரசியலை உருவாக்குகின்றன" என்ற உண்மையை மறந்து விடாதீர்கள்.

## முத்தமிழ் முனிவா!

—எருவில் மூர்த்தி—

முத்தமிழ் முனிவா! ஈழம்
முகிழ்த்தநற் சுடரே! ஞாலம்
சத்திய வழியே வாழச்
சகலமும் துறந்தே ஞானச்
சித்தனுய்த் திகழ்ந்தே வேதம்
செழிப்புறச் செய்த சீலா!
வித்தகா! விபுலா நந்தா!
விண்ணவா!பணிந்தோம், ஐயா!

செந்தமிழ்க் கடலுள் மூழ்கிச்
செழுங்கவி முத்தம் சேர்த்துத்
தந்தனை 'யாழ்நூல்' யாத்து;
தமிழ்ப் பெரும் புலவா! நின்னை
நந்தமிழ்க் குலத்தோர் வாழும்
நற்பதி காரை தீவு
தந்ததோர் 'இளங்கோ' என்றே
தலைநிமிர்ந் துரைப்போம், ஐயா!

பூரணை மதியஞ் சிந்தும்
பொன்னெளி குளித்தே மின்னும்
கார்வளம் செறியும் மட்டுக்
களப்புடை வாவி வாழும்
நீரா மகளிர் பாட்டில்
நின்குரல் கேட்போர், நாட்டின்
பேரருட் புதல்வா! உன்றன்
பெருமையை உணர்வோர்; ஐயா!

காவியை அணிந்தாய்; ஆனுல்
கவிசெய மறந்தாய் இல்லை!
சாவினை அடைந்தாய்; ஆனுல்
தமிழரின், இந்து மார்க்கம்
மேவிடும் அகத்தே எல்லாம்
மிளிர்கிருய்! புவிமேல் வாழ்ந்த
தேவனுய் ஆனுய்! உன்றன்
திருப் பதம் மறவோம்; ஐயா!

கரவினுல் எம்மை வாட்டிக்
கசக்கிடும் ஒற்றை ஆட்சி
அரசினர் செய்யுஞ் சூதால்
ஐயகோ! துடிக்கும் நாங்கள்;
தரணியைத் துறந்த போதும்
தமிழ்ப்பணி துறவா நீர்எம்
அருகினில் வாழ்ந்தால், சற்றே
ஆறுதல் அடைவோம்; ஐயா!

"வெள்ளை மா மலரோ; இல்லை
வேறு எப் பூவோ அல்ல
வெள்ளி மா மலைவாழ் ஈசன்
விரும்புதல்; இதயம் என்ற
நல்ல மா மலரே!,, என்று
நவின்றனை, அதனுல், எங்கள்
உள்ளமா மலர்கள் தந்தே
உன்னையும் துதிப்போம்; ஐயா!


### உங்கள் வியாதி எதுவானுலும் தீர்த்துத் தருகிறேம்



நரம்பு பெலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும சூதகக் கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# அரசாங்க எம். பி. கள் மீது மூன்று குற்றச்சாட்டுகள்

"ஆஸ்பத்திரி தாதிகளுடன் உல்லாசப் பிரயாணம் போவது, தொடர்பு வைத்துக்கொள்வது, மக்கள் மத்தியில் சந்தேகம் ஏற்படும்படி நடந்துகொள்வது ஆகிய முக்கோணக் குற்றச்சாட்டுகளை அரசாங்கக் கட்சி எம். பி களில் சிலருக்கு எதிராக அடுத்த அரசாங்கப் பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தில் கொண்டு வர அரசாங்க எம். பி. கள் கோஷ்டியொன்று தயாராகிறது."

இவ்வாறு "சம சமாஜய" பத்திரிகை (12-7-63) முதற் பக்கத்தில் ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் "சிங்களே" வாரப் பத்திகை வாரா வாரம் யூ. என். பி.யைத் தாக்குவதைக் காட்டிலும் இரு மடங்கு வேகத்துடன் இடதுசாரிகளைத் தாக்கிவருகிறது.

## புரட்சி ஏற்படலாம்

"பாட்டாளி மக்கள் எந்த நாட்டிலும் பாராளுமன்றத்தின் மூலம் அரசாங்கத்தைக் கைப்பற்றியதாக உலக வரலாற்றில் கிடையாது. பலாத்காரமாக ஆட்சியைக் கைப்பற்ற உழைப்பாளர்களைத் திரட்ட வேண்டும்" என்று கொம்யூனிஸ்ட் கட்சியில் சீன ஆதரவாளர் கோஷ்டியின் தலைவர் திரு. சண்முகதாசன் கூறியுள்ளார். மற்றும் இரண்டொரு இடதுசாரித் தலைவர்களும் இதே கருத்தை வெளியிட்டுள்ளனர். இக் கூற்றிலிருந்து ஓர் இரகசியத் திட்டத்திற்கேற்ப எந்த நேரத்திலும் ஒரு புரட்சியைத் தோற்றுவிக்க இடதுசாரிப் புரட்சிக்காரர்கள் தயாராகின்றனர் என்பது தெளிவாகிறது" என்று "சிங்களே" (11-7-63) "அண்மையில் ஒரு புரட்சி" என்ற 8 பத்தி தலைப்பின் கீழ் ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

## "கண்ணில் மண் தூவும் முயற்சி

இடதுசாரிக் கட்சிகள் ஓர் ஐக்கிய முன்னணி அமைப்பது அரசாங்கத்தைக் கைப்பற்றுவதற்கு யூ. என். பி.க்கு உதவி செய்வதற்கே என்று "சிங்களே" சீறுகிறது.

இப்பத்திரிகை இது பற்றி மேலும் கூறுவதாவது:,

"அடுத்த பொதுத் தேர்தலில் சிங்கள—பௌத்தர்களின் கண்ணில் மண்ணைத் தூவும் பொருட்டு சமசமாஜத் தலைவர் என். எம். பெரேரா தமது மொழிக் கொள்கையை மாற்றப் போவதாக அறியப்படுகிறது. 'சமசமாஜக் கட்சி அழிந்து போனாலும், மொழிக் கொள்கையில் ஒரெழுத்துக் கூட மாற்றமாட்டோம்' என்று சத்தியம் செய்து மக்களுக்கு உறுதி கூறிய டாக்டர் பெரேரா

# சிங்கள இதழ்களில் . . .

இப்பொழுது வாக்குறுதியை மீறுவதேன் என்று சிங்கள மக்கள் இரு கண்களையும் திறந்து பார்த்துக் கொண்டிருக்கின்றனர்."

## மாவட்டச் சபைகளும் சிங்களவர்களும்

"லங்காதிப" (சிங்களத் தினசரி) அரசியல் நிருபரான "சந்திரகுப்தா" 13-7-63ம் திகதி இதழில் எழுதுவதாவது:

"பண்டாரநாயக்கா—செல்வநாயகம் உடன்படிக்கையின் மூலம் வாக்குறுதியளிக்கப்பட்டு, பின்னர் சிங்கள மக்களின் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்ட பிராந்திய சபை முறைக்குப் பதிலாக "மாவட்ட சபை" நிறுவ அரசாங்கம் உத்தேசித்துள்ளது. ஏகாதிபத்திய காலத்தைச் சேர்ந்த கச்சேரி முறைக்குப் பதிலாக மாவட்ட சபைகள் நிறுவப்படும் என மக்களிடம் கூறிக் கொள்ள அரசாங்கம் தயாராவதாகத் தெரிகிறது. மாவட்ட சபைகள் நிறுவப்பட்டால் அவற்றின் அலுவல்கள் பிராந்திய மொழியிலேயே நடைபெறும். இதனால் கிழக்கு மாகாணம் முழுவதும் தமிழ் பேசும் மக்களின் மாகாணமாகிவிட இடமேற்படும். திருகோணமலையும், மட்டக்களப்பும் மலைநாட்டுப் பிராந்தியத்துக்குச் சேர்ந்ததென்பதற்கு வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உண்டு. அப்படியாயின், வடமாகாணமும், கிழக்கு மாகாணமும் தமிழ் பேசும் மாகாணங்களெனச் சட்ட பூர்வமாக அங்கீகரித்த பிற்பாடு, ஏற்படும் நிலைமை என்ன? நூரளை, பதுளை, பண்டாரவளை, வவுனியா முதலிய பகுதிகளில் வசிக்கும் சிங்களவர்களின் கதி என்ன? திரு. சி. பி. டி. சில்வாவின் யோசனைக்கேற்ப அமுல் நடத்தப் போகும் இத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளை சிந்தித்துப் பார்ப்பதற்கு அரசாங்கத்துக்கு இன்னும் அவகாசம் உண்டு."

## இரகசியப் பேச்சாம்

"இலங்கை "நாம் தமிழர்" இயக்கத்தின் தலைவர்கள் நாட்டிலுள்ள இதர தமிழர் ஸ்தாபனங்களின் தலைவர்களுடன் மிக இரகசியமாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்றனரென்று அறியப்படுகிறது" என்று இம்மாதம் 16ம் திகதி "தவஸ" இதழ் கூறுகிறது.

## "உடனே வீட்டுக்கு அனுப்புக!"

"இலங்கையர் மயம்" என்ற மகுடமிட்டு "தவஸ" (16-7-63) எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

"இலங்கையில் வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்குவதற்கான எல்லா அம்சங்களும் நிறைந்த கொள்கையொன்றினை அரசாங்கம் வகுத்துக் கொண்டுள்ளது. இப்புதிய கொள்கையின்படி இலங்கையிலுள்ள இந்தியர்களை வீட்டுக்கு அனுப்ப வழி பிறந்துள்ளது.

ஆனால் அரசாங்கம் தயாரித்துள்ள திட்டத்தின்படி இன்று முதல் கணக்கெடுத்துப் பார்த்தால் அவர்களை

(13-ம் பக்கம் பார்க்க)

## தமிழில் விண்ணப்பங்கள்

வானொலி பாவிப்பதற்கான உத்தரவுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைக் கோருவோருக்கு இதுவரை சிங்களப் படிவங்களையே வினியோகித்து வந்தது தபால் இலாகா. தபால் அதிகாரிகளுக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய தமிழிலும் விண்ணப்பப் பத்திரங்கள் அச்சிடப்பட்டு வருவதாக அறிவிக்சப்பட்டுள்ளது.

சுண்ணாகம் தபால் நிலயத்தில் ஒருவருக்குச் சிங்கள வானொலி விண்ணப்பப்பத்திரம் கொடுக்கப்பட்டபோது, அவர் அதைத் திருப்பி அனுப்பித் தமிழ்ப் பத்திரம் பெற்றுக்கொண்டாராம்.

தமிழ்ப் பிரதேசங்களில் கடமை பார்க்கும் தபால் அதிகாரிகள் 'சிங்களம் மட்டும்' கொள்கைக்கு உதவுவதாகக் காட்டிக் கொள்ளுவதன் மூலம் தமிழ் பேசும் இனத்தின் சிற்சில உரிமைகளுக்கும் உலை வைக்காதிருக்க வேண்டும் என்று பொது மக்கள் விரும்புகின்றனர்.

## கிளிநொச்சியில் காணி

கிளிநொச்சித் தொகுதியில் இரண்டு குளங்கள் நீர்ப்பாசனத்துக்காகப் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இக் குளங்களை அண்டிய பகுதிகளில் படித்த வாலிபர்களுக்காக நிலம் விநியோகிக்கப்படவிருக்கிறது. இதற்கான ஆயத்தங்களை கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ. சிவசுந்தரம் செய்து வருகிறார். விரைவில் காணி வினியோகத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்படும். கிளிநொச்சிப் பகுதியிலிருக்கும் படித்த வாலிபர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

## அரசாங்க

# எழுது வினைஞர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆண்டுக் கூட்டம்

அரசாங்க எழுது வினைஞர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த ஆறும் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. பின் வருவோர் நடப்பு வருடப் பதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. பொ. பொன்னுத்துரை —(சுகாதாரம்), துணைத் தலைவர்கள்: திரு. இ. மயில்வாகனம்—(தொழில்), திரு. செ. சிவசிங்கம்—(கல்வி), செயலாளர்: திரு. ப. வித்தியானந்த சர்மா—(கல்வி), துணைச்செயலாளர்: திரு.க. தணிகாசலம்—(கச்சேரி), பொருளாளர்: திரு. வை. தேவராசா—(காணிப் பதிவகம்).

செயற் குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்: இ. காசிநாதன்—(மாவட்ட நீதி மன்றம்), ஏ. தருமரெத்தினம்—(பொது வேலைப் பகுதி), சி. கே. நடராசா— (உள்ளூராட்சி), இ. நமசிவாயம்—(சுகாதாரம்), எம். பாலசுப்பிரமணியம்—(கச்சேரி), த. இராசரத்தினம்- (கூட்டுறவு) ரி. பரராஜசிங்கம்—(காணிப் பதிவகம், பருத்தித்துறை), செ. சபாபதிப்பிள்ளை — (கச்சேரி), பீ. ஜே. பீற்றர்—(கல்வி).

கணக்காய்வாளர்: திரு. சி. இரத்தினகுமார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பொதுச் செயலாளர் திரு இ. பாலசுப்பிரமணியமும், மன்னார் செயற்குழு உறுப்பினர் திரு. க. கந்தசாமியும் சமுகமளித்து சொற்பொழிவாற்றினர்.

நன்றியுரை கூறிய திரு. ப. வித்தியானந்த சர்மா யாழ்ப்பாணக் கிளை செயலிலே தனது நன்றியைத் தெரிவித்துக் காட்டுமென்றும், பேச்சைக் குறைத்துச் செயலைக் கூட்ட வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் கூறினார்.

## சந்தியில்...

தபால் இலாகாவில் மொழியியற் துறையில் பணிபுரியும் ஒருவரின் மானம் பறிபோன சம்பவம் பற்றிய செய்தி அம்மானுக்குக் கிடைத்துள்ளது.

சிங்கள வெறியுடன் இயங்கும் 'லிபிகறு சேவைய சங்கமய' என்ற சங்கத்துக்கு, தன் நிலை மறந்து, தாழ் பணிந்து இந்தப் பிரமுகர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். இந்த வேண்டுகோளும், அதற்குச் சங்கம் அளித்த பதிலும் அம்மான் வசம் கிடைத்து விட்டன.

யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுக் கொண்டு போக வேண்டும் என்ற காரணத்தினால் வெட்கங்கெட்ட முறையில் தன்னைத் 'தமிழ்த் துரோகி' என்று கூட வர்ணித்துள்ளார். "1957லும், அதன் பின்னரும் நடைபெற்ற வேலை நிறுத்தங்களில் பங்கு கொள்ளாமல், பின் கதவால் சென்று கடமை பார்த்தேன். 1958ம் ஆண்டுக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் சென்றுவிட்ட பலருக்காக மேலதிக வேலை செய்தேன். அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் ஆகிய சங்கங்களில் சேர்ந்தும் ஒரே வாரத்தில் விலகிக் கொண்டேன். ஆகவே என்னையும் உங்கள் சங்கத்தில் உறுப்பினனாக்கி யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் எடுத்துக் கொடுத்தால், அங்கே சிங்களத் திணிப்புக்கானவற்றைச் செய்வேன்," என்று தமது விண்ணப்பத்தில் கூறியுள்ளார்.

"சொந்த இனத்தைக் காட்டிக் கொடுப்பதன் மூலம் துரோகச் செயலில் ஈடுபட்டுத் தன்னலந் தேடும் நீர் எம்மையும் காட்டிக் கொடுக்கத் தயங்கமாட்டீர். ஆகவே உம்மை எம்முடன் சேர்க்கவே முடியாது," என்று விண்ணப்பத்தை லிபிகறு சங்கம் திருப்பி அனுப்பி விட்டதாம்.

●

உத்தியோக மொழி இலாகா என்றொரு இலாகா இருக்கிறது. இந்த இலாகா இருப்பது எந்தவிதமான பலனையும் அளிப்பதாக வில்லை. ஆகவே அதை மூடிவிட வேண்டுமென ஒரு கோஷ்டி மும்முரமாக முனைந்துகொண்டுள்ளது.

●

திரு. ஆர். ஜி. சேனநாயக்காவும், முன்னாள் சிலாபம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜே. முனசிங்க ஆகிய இருவரும் ஜனநாயக சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் ஒரு புதிய அரசியல் கட்சியை ஸ்தாபிக்கப் போகின்றனராம்.

●

ஆளும் கட்சிக்குள்ளிருந்து இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறி இடது சாரிகளின் பக்கம் சேர்ந்துவிடப் போகிறார்களாம். இந் நிகழ்ச்சியை அடுத்தவாரம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

●

மந்திரி ஏ. பி. ஜெயசூரியா மறுமணம் புரிந்து கொண்டார். அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா திருமணம் புரிந்து இரண்டு வாரங்களின் பின்னர் அமைச்சர் ஜெயசூரியா இரகசியமாகக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாராம்.

—அம்மான்

சென்ற். அந்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ்

இலங்கையில் தங்கள் சொந்தத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றோர் உற்பத்தி சாமானை அறிமுகப் படுத்துவதில் பெருமிதமடைகிறார்கள்.

கல்வனைஸ்ட் வாளிகள்

கல்வனைஸ்ட் வாளிகள் உற்பத்தி செய்யும் பிரமாண்டமான இயந்திரங்களின் அநுசரணையுடனும் அயல் நாட்டு தொழில் நுட்ப உதவியுடனும் முதன் முதலாக இலங்கையில் இயங்கும் தொழிற்சாலை இதுவே.

சென்ற். அந்தனீஸ் இன்டஸ்ட்ரீஸ்,
752, பேஸ்லைன் ரோடு,
கொழும்பு-9.

# இலங்கைத் தொழிலாளர் கழகம் ஒழுங்காகச் செயற்பட்டு வருகிறது

## இனத்தை அழிக்கும் முயற்சிக்கு நாம் உடந்தையாவதா?

## சிங்கள வகுப்புக்கு மலைநாட்டு மக்கள் எதிர்ப்பு

**சிங்கள மாணவர்கள் இரு மொழிகளை இலகுவில் கற்று கல்வியில் முன்னேற்றமடையும் பொழுது நமது பிள்ளைகள் மூன்று மொழிகள் கற்பதிலேயே அறிவையும் ஆற்றலையும் வீணுகச் செலவு செய்ய வேண்டியவர்களாவார்கள். இதனுல் நமது மாணவர்களுக்கு மற்றைய மாணவர்களுடன் சம வாய்ப்புக்கிடைக்காது போய்விடும்.**

இவ்வாறு அட்டன் புனித யோன் பொஸ்கோவின் கல்லூரியில் தமிழ் பேசும் மாணவர்களுக்கு நடைபெறவிருக்கும் சிங்கள வகுப்பு சம்பந்தமாக பெற்றோர்களுக்கு வித்தியாதரிசியின் வேண்டுகோளின்படி அதிபர் எழுதிய கடிதத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துவெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்று கூறுகிறது.

திருவாளர்கள்: க. கந்தையா, மா. இளையதம்பி, பொ. விஜயரத்தினம், க. வடிவேல், டாக்டர் நா. நடராஜன், ஆ. இராமலிங்கம், செ. வன்னிமுத்து, ந. செ. சிவலிங்கம் ஆகியோர் அப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளார்கள்,

மேலும் அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

### அறிவில் குறைவார்கள்

சிங்கள மொழி கற்றுக் கொடுப்பதற்குச் சம்மதித்தால் உங்கள் பிள்ளைகள் ஏதேனும் ஒரு பாடத்தை இழந்துதான் சிங்களம் கற்க வேண்டும். இதனுல் உங்கள் பிள்ளைகள் சிங்களம் கற்பதற்காக வேறு ஒரு பாடத்தை இழந்து கல்வியறிவில் குறைந்தவர்களாவார்கள்.

### சிந்திக்க வேண்டும்

பெரும்பாலான நமது மக்களுக்கு குடியுரிமை கொடுக்க மறுக்கும் அரசாங்

(9-ம் பக்கம் பார்க்க)

## மாற்றுச் சங்கங்களின் துர்ப்பிரசாரத்தை நம்பாதீர்

## மட்டுக்கொல்லையில் தமிழரசுத் தந்தை

**"நமது தலைமையில் இயங்கி வரும் இலங்கைத் தொழிலாளர் கழகம் இன்று முறையாகவும் ஒழுங்காகவும் செயல்பட்டு வருகிறது. நமது கழகத்தைப் பற்றி நடைபெறுவதாகச் சொல்லப்படும் துர்ப் பிரச்சாரங்களை நம்ப வேண்டாம் என நான் எச்சரிக்கை செய்கிறேன். மலையகம் பூராவுமுள்ள தமிழ் பேசும் மக்களை எமது கொடியின் கீழ்க் கொண்டு வருவதற்காக நாம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம். இந்த இலட்சியத்தை நாம் அடையும்போது மலையக தமிழ் பேசும் தொழிலாளர்களின் இழந்த உரிமைகளையும் பொருளாதார கோரிக்கைகளையும் நிச்சயம் வென்றெடுப்போம்."**

**இவ்வாறு தலவாக்கொல்லையைச் சேர்ந்த பெரிய மட்டுக்கொல்லை தோட்டத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தோட்டக் குழு தேர்தல் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய தமிழரசுத் தந்தையும் கழகத்தின் போஷகருமான திரு. சா. ஜே. வி. செல்வநாயகம் கூறினர்.**

கூட்டத்திற்கு கழகத் துணைத் தலைவர் திரு. ரெ. ம. ராமய்யா தலைமை வகித்தார்.

மூவர்ணக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

அடுத்து செல்வன் கணேச பெருமாள், செல்விகள் பரமேஸ்வரி, சந்திரகாந்தி ஆகிய மூவரும் 'வீரத்தமிழ் மகனே' என்ற கீதம் பாடி தலைவர்களுக்கு வரவேற்பு அளித்தனர்.




கூட்டத்திற்கு சமுகமளித்திருந்த தந்தை செல்வநாயகம், தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. கதிரவேற்பிள்ளை, திரு. நாகேந்திரம் தம்பதிகள், கழகத் துணைத் தலைவர் திரு. ரெ. ம. ராமய்யா, கழகத் துணைச் செயலாளர் திரு. மு. எல்லாளன், செயற்குழு உறுப்பினர் திரு. எம். எஸ். துரைசாமி ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன், இந்து மதச் சம்பிரதாயப்படி சடங்குகள் செய்யப்பட்டு, தந்தை செல்வநாயகம் அவர்களால்

திருமதி நாகேந்திரம் அவர்களின் நாட்டு வணக்கப் பாடலுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்டத்திற்கு ஏராளமான பெண்மணிகள் சமுகமளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தந்தை செல்வநாயகம் அவர்கள் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

"இந்த நாட்டில் தமிழ் பேசும் இனத்தின் பெரும் பகுதியினரான மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்களின் நிலை மோசத்திலிருந்து, படுமோசத்திற்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களின் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு பல வருடங்கள் உருண்டோடி விட்டன. அரசியல் அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ள இவர்களின் மொழி உரிமை, கல்வி உரிமை, தொழில் உரிமை ஆகிய சகல உரிமைகளை

(9-ம் பக்கம் பார்க்க)

### இ. தொ. கழகம் மட்டுகொல்லை தோட்டக்குழு

தலைவர்: திரு. கே. வி. பிறமன், உபதலைவர்: திரு. கே. வி. கந்தன், இணைக் காரியதரிசிகள்: திரு. பி.எஸ். பிச்சபிள்ளை, திரு. பி. எஸ். வேல்சாமி, பொருளாளர்: திரு. கே. பெருமாள், நிதி வசூலிப்போர்: திரு. எஸ். ராமன், திரு. எஸ் காமன்.

**குழு உறுப்பினர்கள்**

திருவாளர்கள் மதலமுத்து, அருணசலம். வி. முருகன், எம். பொன்னையா, மாரியப்பன், எஸ். பி. பெருமாள், எம். சோமாலை, எஸ். செல்லதுரை, எம். ஆறுமுகம், எம். பி. வேலு, எம். சுப்பிரமணியம், எம். வெங்கடாசலம், எம். மருதமுத்து, எம். சிதம்பரம்.

**வாலிப முன்னணி**

தலைவர்: எம். வீரையா, கெப்டன்: கே. கிருஷ்ணன், காரியதரிசி: எம் சந்தனம், பொருளாளர்: எம். தவசு.

**உறுப்பினர்**

திருவாளர்கள் அழகன், எஸ். ஆறுமுகம், வடிவேல், கணேசன், லா. கணபதி, அ. பிச்சையா, நாராயணன், பி. பிறமன், தங்கவேல், அண்ணமலை, காளிமுத்து, சீத்தாராம், எஸ். பெருமாள், சி. பழனியாண்டி.

**மாதர் குழு**

தலைவி: பச்சையம்மாள், காரியதரிசி: பாப்பாத்தி, உப காரியதரிசி: லெச்சுமி, உப தலைவி: சிந்தாமணி, பொருளாளர்: எம். காத்தாய்.

**குழு உறுப்பினர்கள்**

திருமதிகள் அங்கம்மாள், பெருமாயி, ஆர். பொன்னம்மாள், கையநாயகம், ஊர்துமரி, எம். காளியம்மாள், நாகு, தாயம்மாள், லெச்சுமி, முத்தாத்தாள், எஸ். அழகம்மாள்.

---

## சிம்மாசனப் பிரசங்கத்துக்கு இ. தொ. கழகத்துக்கு அழைப்பு

சிம்மாசனப் பிரசங்கத்தின் போது பார்வையாளராகக் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தொழிலாளர் கழகத்துக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. கழகத்தின் துணைத் தலைவர் திரு. ராமையாவும் திருமதி ராமையாவும் இந்த வைபவத்தில் கழகத்தின் சார்பில் பங்கு கொண்டனர். அவர்களுடன் துணைச் செயலாளர் திரு. எல்லாளனும் சிம்மாசனப் பிரசங்கத்தின் போது கலந்து கொண்டார்.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தை, தப்பபிப்பிராயங்களையும் பொய்யையும் பரப்புவதன் மூலம் பழி வாங்கலாம் என்று கருதுபவர்களுக்கு இது ஒரு நல்ல பாடமாகும்.

---

## மஸ்கெலியாவில் அஸீஸ் கோட்டை சரிந்தது

## லக்ஸபானைத் தோட்டத்தில் இ. தொ. கழகத்தின் வெற்றி

மஸ்கெலியாவைச் சேர்ந்த லக்சபனை தோட்டத்தில் கடந்த 28-6-63 திகதியில் அட்டன் உதவித் தொழில் அதிபர் நடத்திய வாக்கெடுப்பில் நமது இலங்கைத் தொழிலாளர் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

இத்தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் கழகத்தில் பெரும்பாலோர் கடந்த ஏப்ரல் மாதம் சேர்ந்தார்கள். தோட்ட நிர்வாகம் கழகத்தை அங்கீகரிக்க மறுத்தது. தொழிலாளர்கள் கழகத்தில் சேரவில்லையெனப் பிடிவாதம் செய்தது.

எனவே கழகம் ஒரு வாக்கெடுப்பு நடத்தும்படி அட்டன் உதவித் தொழில் அதிபரைக் கோரியது. இக் கோரிக்கைக் கிணங்கவே இந்த வாக்கெடுப்பு நடைபெற்றது. தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் கழகத்தில் சேர்ந்திருப்பது வாக்கெடுப்பின் மூலம் ருசுவாகியிருக்கின்றது.

**வாக்கெடுப்பின் முடிவு:-**

| | |
|---|---|
| இலங்கைத் தொழிலாளர் கழகம் | — 312 |
| லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் | — 36 |
| இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (தொண்டமான்) | — 25 |
| ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் (அஸீஸ்) | — 9 |

தொழிற் சங்க நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் லக்சபானைத் தோட்டம் மஸ்கெலியா பகுதியிலே பிரதானமான தோட்டமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. இத்தோட்டத் தொழிலாளர்கள் கடந்த பல வருடங்களாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் (அஸீஸ்) அங்கத்தினர்களாய் இருந்து வந்திருக்கிறார்கள். இப் பகுதியில் அஸீஸ் காங்கிரஸின் கோட்டையாக இத் தோட்டம் இருந்து வந்தது. இன்று கோட்டை சுக்கு நூருகி விட்டது.

நமது கழகத்தின் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. எஸ். நாராயணசாமி இத் தோட்டத்திலேயே தொழில் செய்து வருகிறார்.

எதிர்வரும் 21ம் திகதி இத் தோட்டத்தில் தோட்டக் குழுவை தெரிவு செய்வதற்காக தேர்தல் கூட்டம் நடத்த கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

---

மலையகத்தில்

## இலங்கைத் தொழிலாளர் கழக ஊர்வலங்களில் கிளம்பும் கோஷங்களிற் சில:

இலங்கைத் தொழிலாளர் கழகம் — வாழ்க!
தந்தை செல்வநாயகம் — வாழ்க!
தோட்டத் தொழிலாளர்களே — ஒன்றுபடுங்கள்!
மொழியுரிமை — எங்களுக்கு வேண்டும்!
குடியுரிமை — எங்களுக்கு வேண்டும்!
கல்வி உரிமைக்காக — போராடுவோம்!
அதிக சம்பளம் கோரி — போராடுவோம்!
எங்கள் கட்சி — தமிழரசு!
எங்கள் கொடி — மூவர்ணம்!
தமிழ் வாழ்ந்தால் — நாம் வாழ்வோம்!
தமிழ் அழிந்தால் — நாம் அழிவோம்!
வகுப்புவாதிகள் — நாங்களல்ல!
நாங்கள் கோருவது — சம உரிமை!
நாங்கள் கோருவது — ஜனநாயக உரிமை!
வடக்கும் கிழக்கும் — மலைநாடும் ஒன்றே!

# போருக்குப் புறப்பட்டார் விபுலாநந்தர்!

## நாட்டுக்குப் பணிபுரியும் வீரராக விரும்பினுர்

—அருள் செல்வநாயகம்—

காவியுடை தரித்து இசை ஆராய்ந்து உலகப்புகழ் கொண்ட விபுலாநந்தர் உலக யுத்தம் நடந்த வேளையிலே கொடிய போர்க் கருவிகளை ஏந்திப் போராடும் வீரளுக விரும்பினுர். அத்துறையில் அவர் செல்லாது தமிழ்த் தாய் தடுத்துவிட்டதனுல்தான் இன்று ஒப்பரிய 'யாழ் நூல்' நமக்குக் கிடைத்தது.

விபுலாநந்தரின் வாழ்க்கையையும் அவரது சேவைகளையும் நுணுகி ஆராய்ந்து பல இலக்கியங்களைப் படைத்தவரான எழுத்தாளர் அருள் செல்வநாயகம் அவர்கள் அடிகளார் மறைந்த 16-வது ஆண்டு பூர்த்தி யாகும் போது 'விபுலாநந்த வெள்ளத்தை' சுதந்திரனுக்காக எழுதுகிருர்.

ஈழத்திலே அறம் தழைத்து வளர்ந்த காலையிலே, தமிழை வளர்க்கத் தோன்றியவர்களுள் முதன்மையானவர் மட்டக்களப்புத் தந்த விபுலாநந்த நாவலர் ஆகும்.

விபுலாநந்த நாவலர் மட்டக்களப்பைச் சேர்ந்த காரைதீவிலே தோன்றினுர்...... சாமித்தம்பியாருக்கும் கண்ணம்மையாருக்கும் சுர ஆண்டு பங்குனித் திங்கள் இருபத்தேழாம் நாள் (27-3-1892) பிறந்தார்.

குழந்தையாகப் பிறந்தவருக்குப் பெற்றவர்கள் சூட்டிய பெயர் மயில்வாகனனுர்!... பிறப்பின் நியதிக்கிணங்க மயில்வாகனனுர் வளர்ந்தார். பிறந்த நாட்டு மொழியான தமிழைக் கற்ருர். கூடவே ஆங்கிலத்தையும் கற்ருர்... இரு மொழியிலும் திறமை பெற்றதனுல் மயில்வாகனனுர் பல பரீட்சைகள் தேறி ஆசிரியராகப் பணியாற்றினுர்.

உதவி ஆசிரியராக, வாழ்வில் புகுந்து தலைமை ஆசிரியராக, அதிபராக மயில்வாகனனுர் பணியாற்றினுர். மாணவர்களுக்கும் புதுப் புதுப் பாடங்களை மயில்வாகனனுர் புகட்டியதுடன், தானும் புதுப் புதுப் பாடங்களைப் படித்துப் பட்டதாரியாகினுர். விஞ்ஞானப் பண்டிதப் பட்டதாரியாகிப் பணிபுரிந்த மயில்வாகனனுர், உலகப் போர் எழவும், ஓர் வீரராகி நாட்டினுக்குப்பணி செய்ய முனைந்தார். மயில்வாகனனுர் போர் வீரராகச் சேர முனைந்து சென்ற போது உலக மக்களை ஆட்டிப்படைத்த மகாயுத்தமும் முடிந்தது.

போர் வீரராகப் பணியாற்ற முடியாது போனதைக் கண்ட மயில்வாகனனுர் தமிழினுக்காகத் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்ற வேண்டுமென்று கருதி



சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடாலயத்தினுக்குச் சென்ருர்.

மடாலயநியமநிஷ்டைகளை ஒழுங்காக மயில்வாகனனுர் அனுட்டித்துத் தேறியதனுல் சுவாமி சிவாநந்தா அவர்கள் முழுமதி தினத்தன்று ஞான உபதேசம் செய்து சுவாமி விபுலாநந்தர் என்ற பெயரினை வழங்கினுர்.

சுவாமி விபுலாநந்தாவாக அடிகளார் வெளியுலகை நோக்கியபோது, அவரது வருகையினை நோக்கித் தமிழ் கூறும்நல் லுலகமக்கள் காத்து நின்ருர்கள். ஆமாம்-தமது எழுத்திலும், பேச்சிலும் அளப்பரிய தமிழ்ப் பணியினை அடிகளார் செய்தமையால் தமிழ் கூறும் நல்லுலகம் அவரைக் கைகூப்பி வரவழைத்தது.

எங்கும் சென்ருர்!... அழகாகப் பேசினுர். அதேபோல் அழகாகவும் எழுதினுர்!... எழுத்தைப் போலவே ஆராய்ந்தார்... ஆராய்வும் எழுத்தும் எல்லாரையும் கவர்ந்தன... பேராசிரியராகச் சர்வகலாசாலைகளில் பணியாற்றினுலும் ஆராய்ந்து ஆராய்ந்து எழுதினுர். அவரது எழுத்தைத் தமிழ் கூறும் நல்லுலகம் கைகூப்பி வரவேற்றது......

எழுதிக்கொண்டே இருந்தார். ஆராய்ந்துகொண்டே இருந்தார். அதன் பயனுக மறைந்த யாழ்களைக் கொணரும் யாழ் நூல் கிடைக்கப் பெற்றது. எண்ணற்ற எழுத்து வெள்ளத்தை வழங்கிய அடிகளாரைக் காலன் இரக்கமே காட்டாது 1947ம் ஆண்டு ஜுலைமாதம் 19ம் திகதி (19-7-1947) கவர்ந்து சென்றுவிட்டான். மரணத்தை மனிதனுல் வெல்ல முடியாதே! பிறப்

(11-ம் பக்கம் பார்க்க)

## காவியுடையில் புகுந்து கல்விப் பணி புரிந்த சேவகனுர் நாமம் வாழ்க

—ரி. யோகநாதன்—

"மொட்டைத் தலையுடனும், காவியுடையுடனும், பூ மாலை தரித்து வந்த அந்தச் சாமியாரைக் கண்டதும், வெறுமனே வேடிக்கைபார்க்கச் சென்ற என்னையே நான் அவரிடம் அர்ப்பணித்தேன்," என்று சுவாமி விபுலாநந்தரையிட்டு திருக்கேதீஸ்வரம் கௌரியம்பாள் வித்தியாலத்தில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. ரி. யோகநாதன் இக்கட்டுரையில் கூறுகிருர்.

1925-ம் ஆண்டு பண்டிதர் மயில்வாகனுர் விபுலாநந்தர் என்ற நாமந் தாங்கி தனது பிறந்த நாடாகிய மட்டக்களப்புக்கு வந்தபோது அன்னுர்க்கு எங்கும் வரவேற்பு.

ஒரு நாள் எனது பிறந்த ஊராகிய பழுகாமத்தில் திரௌபதி அம்பாள் ஆலய முன்றிலில் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய பந்தர் ஒன்று காட்சியளித்தது. வழமைபோல் நானும் உடன் மாணவர்களுமாக ஆலயத்தின் மருங்கே உள்ள பெரிய ஆலமர நிழலில் விளையாடிக் கொண்டு நின்ருேம். சிறிது நேரத்தால் மேளத்தின் இனிய ஓசையும், திவ்விய பாடல்களும் காற்றில் மிதந்து வந்தன.

எங்கே என்று அங்கலாய்ப்போடு கூர்ந்து நோக்கினேம். வைத்த கண் வாங்காது பார்த்துக்கொண்டிருந்தோம். ஆலய முன்றிலை அடைந்த சனக் கூட்டத்தின் மத்தியில் ஒரு சுவாமியார் நிற்பதைக் கண்டேன். நண்பர்களையும் கவனியாது அவ்விடம் ஓடினேன்.

தலை மொட்டை—காவியாடை—கழுத்தில் பூமாலை இவ்வளவும் பொருந்த மக்கள் மத்தியில் நின்ற அந்தச் சுவாமியாரை, எமது உற்ருர் உறவினர் பலர் விழுந்து வணங்குவதைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கிட்டப் போனேன். வேடிக்கை பார்க்க வந்த என் கால்கள் அவர் முன்பு மண்டியிட்டன.

காட்சியைக் கண்டுகளித்த என் கண்கள் சுவாமியை உச்சி தொடக்கம் புறங்கால் வரை இடையீடின்றிப் பார்த்துக் கொண்டிருந்தன. சுவாமி அவர்கள் என்னைப் பார்த்து தலை அசைத்தது தான் தாமதம் அவர் பக்கவில் சங்கோசமின்றிப் போய் நின்றேன். எங்கும் அமைதி நிலவியது. இருக்கை விட்டெழுந்தார் சுவாமி. ஏதோ எல்லாம் பேசினுர். எனக்கு ஒன்றும் புரியவில்லை. சைவப் பாடசாலை என்ற சொல் பலமுறை எடுத்தாண்ட தொன்றே இன்றும் என் இதயத்தில் அழியாத ஓவியமாக நிலைத்துள்ளது.

இறந்தும் இறவாத போரைதீவுப் பற்று உடையார் திரு. வேலுப்பிள்ளை அவர்கள் அன்பளிப்பாக—உவந்தளித்த காணியில் சைவப் பாடசாலை கட்டுவ

(13-ம் பக்கம் பார்க்க)

## பர்மா மந்திரிகள் படுகொலை

### 16 ஆண்டுகளுக்கு முன்.........

'பர்மா சர்க்கார் மந்திரி சபையைச் சேர்ந்த 6 மந்திரிகள் இன்று மந்திரி சபைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது சதிக் கோஷ்டியினரால் படுகொலை செய்யப்பட்டனர். பர்மா மந்திரி சபைத் தலைவர் உ. ஆங் ஸான், வர்த்தக மந்திரி உ பாவின், கல்வி மந்திரி அப்துல் ரசாக், கைத்தொழில் மந்திரி மாங்பா கைங், நிதி மந்திரி தக்கின் மியா, போக்குவரத்து உதவிக் காரியதரிசி ஆங் மாங் ஆகியோரே இந்தக் கோரக் கொலைத் திட்டத்துக்குப் பலியானவர்கள். வேறு இரண்டு பேருக்குக் காயமும் ஏற்பட்டது.

மந்திரி சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, ஒரு ஜீப் காரில் வந்த ஐவர் சபைக்குள் இயந்திரப் துப்பாக்கி, சகிதம் நுழைந்தனர். தடுத்த காவலாளியையும் சுட்டுத் தள்ளினர்.

இயந்திரத் துப்பாக்கி வைத்திருந்த மூவர் மந்திரி சபை அறைக்குள் பிரவேசித்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு ஜீப் காரில் ஏறித் தப்பியோடிவிட்டார்கள்.

***

### இந்தியாவுக்குச் சுதந்திரம் ஆகஸ்ட் 15 விடுமுறை

புதுடில்லி, ஜுலை, 19. இன்று பிற்பகல் கூடிய காங்கிரஸ் கமிட்டி ஆகஸ்டு 15ம் தேதி சுதந்திர தினக் கொண்டாட்டம் நடத்துவது பற்றியும், அன்று ஏற்படும் அதிகார மாற்றத்துக்குத் தக்கபடி மாறுதல்களும் வசதிகளும் செய்வது பற்றியும் யோசித்தது.

அன்று இந்தியா வெங்கும் விடுமுறைதினமாகும். காலையில் கொடியேற்று விழாக்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெறும்.

கவர்னர் ஜெனரல் தமது மந்திரிகளின் ஆலோசனையின் பேரில் கவர்னர்களை நியமிக்க வேண்டும் என்றும் முடிவாக்கப்பட்டது.

***

### தமிழ்த் தாயின் தவப் புதல்வன்

#### சுவாமி விபுலாநந்தர் காலமானுர்

கொழும்பு, ஜுலை, 20. இலங்கை சர்வகலாசாலையின் தமிழ்ப் பேராசிரியரும், 'பிரபுத்த பாரதம்' பத்திரிகையின் மாஜி ஆசிரியரும், பண்டைத் தமிழ் இசை ஆராய்ச்சியாளருமாகிய உயர் திரு. ஸ்ரீமத் விபுலானந்தா அவர்கள் தம்மைப் பீடித்திருந்த நோய் காரணமாக நேற்றிரவு (19-7-47) 1-30 மணியளவில் காலமானுர். அவருக்கு இப்பொழுது 55 வயதாகிறது.

***

### தலையங்கம்

#### காட்டிக் கொடுத்தனர்

......யூ தாஸ் காரியேத் என்பவன் இயேசு நாதரின் சிஷ்யர்களுள் ஒருவன். அவன் முப்பது வெள்ளிக் காசுகளுக்காக இயேசு நாதரை யூத அதிகாரிகளிடம் காட்டிக் கொடுத்தான்.


...சிறுபான்மை மக்களாகிய இலங்கை—இந்தியத் தமிழர்களுக்காக அரசியல் உரிமையைப் பெற முற்பட்ட தமிழரின் தனிப் பெருந் தலைவளுகிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நிலையும் இத்தன்மைத்தாகவே இருக்கிறது.'

[சுதந்திரன் 1947 ஜுலை 21]


கலப்பற்ற உயர்தர அலுமினியம்

மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு

இவற்றிற்கு




டொலர்

அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோப்பரேசன்,

14, டாம் வீதி, கொழும்பு-12.

# ஊரடங்குச் சட்டத்தின் துணை கொண்டு பொலீசார் பேயாட்டம்

### அரங்கம் 21

கோக் மாவட்டத்திலுள்ள பொலீஸ் படை வீட்டைத் தொண்டர்கள் தாக்கியதைத் தொடர்ந்து மூன்று மாவட்டங்களில் இராணுவச் சட்டம் பிரகடனமாகியது; தேர்தலில் வேட்பாளரான ஒருவர் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார்; சின் பீனின் தேர்தல் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வளவு அடக்கு முறைகளும் சின் பீன் நிறுவனத்தின் அமைப்பு முறையைக் குலைக்கவில்லை. நாட்டிலே 18 வயதுக்கும் 25 வயதுக்

றெட்மண்டிடம் தகவல்கள் அனைத்தையும் கொடுப்பார்.

தகவல் கிடைத்ததும் றெட்மண்ட், கொளின்ஸைக் கொல்வதற்காகத் திட்டங்கள் தீட்டுவார். ஆனல் இந்தத் திட்டங்கள் அனைத்தும் உளவுத் திணைக்களத்தில் துப்பறியும் நிபுணராகப் பணிபுரியும் மக்நாமரா மூலம் கொளின்ஸுக்குக் கிட்டிவிடும். ஆனல் ஜேம்சன் ஒரு துப்பறியும் நிபுணர் என்பது மட்டும் இன்னும் புலனகவில்லை.

வில் தப்பமுடியவில்லை. 21-1-1920ல அவர் தொண்டர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே தினத்தில், அயர் கைத்தொழில்களுக்கான

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

மாக 68பேரே 31-1-1920ல் கைதாகினர். இவர்களில் ஒருவர் றெபட் பாற்றன். இவர் கைதாகியது சின் பீனுக்குப் பெரும் நட்டம் என எண்ணிய கொளின்ஸ் அவரை மீட்க முயற்சிகளை ஆரம்பித்தார்.

இராணுவ நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டுச் சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும் பொழுது காரை நிற்பாட்டி இராணுவத்தினரைப் பயப்படுத்தி பாற்றனை மீட்பதே கொளின்ஸின் திட்டம். ஆனல் பிழையான

தெரியவந்தன. 'ஸ்கொத்லாந்து யாட்' நிபுணர்களைப் பதம் பார்த்த தொண்டர்கள் இவரையும் 18-2-1920ல் தமது படைத்துப்பாக்கிக்கு இரையாக்கினர்.

தொண்டர் படையினர் 20-2-1920ல் டப்ளினில் பொலீஸ்காரர் ஒருவரைச் சுட்டுக் கொன்றனர். அதன் காரணமாக நள்ளிரவு முதல் காலை 5-00 மணி வரையான ஊரடங்குச் சட்டம் டப்ளினில் பிரகடனமாகியது. பகலில் பயந்து திரியும் பொலீஸ்காரர் இரவில் மது போதையில் வீட்டுக் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று கொள்ளையடிப்பதற்கும் பெண்கள் மீது பலாத்காரம் பிரயோகிப்பதற்கும் இது ஏதுவாக இருந்

## துப்பறியும் நிபுணர் துப்பாக்கிக்குப் பலி

கும் இடைப்பட்ட இளைஞர்கள் 1,00,000க்கும் 2,00,000 இடையில் இருந்தார்கள். முன்னைய காலத்தில் இவர்கள் அனைவரும் தொழில் தேடி இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் செல்வது வழக்கம். ஆனல் ஈஸ்ரர் வாரப் புரட்சிக்குப் பின் அவர்கள் தம் நாட்டிலேயே தங்கி இனத்தின் விடுதலைக்காக உழைக்கச் சங்கற்பம் பூண்டார்கள். அந்தவாலிபர்களின் பலத்தைக் கொண்டு இயங்கிய சின் பீன் 206 நகர, மாநகர சபைகளில் 172ல் வெற்றி பெற்றது. றெட்மண்ட் குடும்பத்தினரின் கோட்டையான வோட்டபட்டிலும் வெற்றியடைந்தது; அள்ஸ்ரர் மாகாணத்திலும் பல வெற்றிகள் பெற்றது. இந்த வெற்றிகள், அயர் மக்கள் ஈஸ்ரர் வாரப் புரட்சியையும் அயர் மன்றம் நிறுவப்பட்டதையும் சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டதையும் வரவேற்கிறர்கள் என்பதை எடுத்துக் காட்டியது.

பொலீஸ் நிலையங்களையும் இராணுவப் படைவீடுகளையும் தொண்டர்கள் தாக்குவது மைக்கேல் கொளின்ஸின் திட்டப்படியே என்று டப்ளின் மாளிகையிலிருந்த ஏகாதிபத்தியவாதிகள் முடிவு செய்து கொளின்ஸைக் கைது செய்வதற்குப் பல திட்டங்களை வகுத்தனர்; ஆனல் அவை அனைத்தும் பிசுபிசுத்துப் போயின. இதைக் கண்டு ஆங்கில ஆட்சியினர் ஸ்கொத்லாந்து யாட் என்று அழைக்கப்படும் உளவுப் பொலீஸ் படையைச் சேர்ந்த பேண் என்னும் ஒருவரை அயர் நாட்டுக்கு அனுப்பினர். இங்கிலாந்தின் சோசலிஸ்டுகள் மத்தியிலே ஜேம்சன் என்ற பெயரோடு உலாவி உளவு பார்த்த இவர் அயர்நாட்

அயர் தொண்டர்கள் 20-1-1920 காலை ஒரு பொலீஸ்காரரைச் சுட்டுக்கொன்றனர். இதற்குப் பழிவாங்கும் பொருட்டுப் பொலீஸாரும் இராணுவத்தினரும் அன்று இரவு அந்த வட்டாரத்திலுள்ள வீடுகளை நோக்கிக் கண்டபடி சுட்டனர்; எறிகுண்டுகளை வீசினர்.

வழிவகைகளை ஆராயும் பொருட்டு அயர் மன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு டப்ளினில் நகர மண்டபத்தில் கூடுவதாக இருந்தது. அயர் மன்றத்தில் பல திட்டங்களுள் ஒன்று கைத் தொழில்களை விருத்திசெய்வதாகும். அயர் மன்றம் நாட்டிலே மரங்கள் நடுவதற்குக் கூட ஊக்கம் அளித்தது. அதன் காரணமாகக் கடந்த சில மாதங்களில் 2½ லட்சம் மரங்கள் நடப்பட்டன.

குறிப்பிட்ட ஆணைக்குழு கூடுவதை ஆட்சியினர் விரும்பவில்லை. அதனல் அதைத் தடுக்கும்படி பொலீஸாருக்கு உத்தரவு இட்டனர். கூட்டங்கள்,

## தலைவர்களைக் கொல்ல ஆட்சியாளர் சதி

கார் நிறுத்தப்பட்டதால் திட்டம் நிறைவேறவில்லை.

கொளின்ஸைக் கொல்ல முற்பட்ட றெட்மண்ட், தொண்டர் படையினலே சுடப்பட்டதை அடுத்து சோசலிஸ்டாக நடமாடிய ஜேம்சன் இங்கிலாந்துக்குச் சென்று மேலதிகாரிகளிடம் எல்லாவற்றையும் விவரமா

தது. இவற்றைச்செய்த பொலீஸ்காரரை ஆட்சியினர் மெச்சித் தட்டிக் கொடுத்தனர்.

பொலீஸார் 27-2-1920ல் சின் பீன் அலுவலகத்தைச் சோதனையிட்ட பொழுது அகப்பட்ட 1,040 பவுண் பணத்தை எடுத்துக் கொண்டு போயினர். பொலீஸாரைப் போன்று தொண்டர்கள் இவ்வாறன தரங்கெட்ட செயல்களில் ஈடுபடுவதில்லை. அஞ்சல் பைகளைத் திறந்து கடிதங்களைச் சோதனை செய்யும் போது இராணுவத்தினருக்குச் சம்பளமாக அனுப்பப்படும் பணத்தைத் தொண்டர்கள் தொடுவதேயில்லை.

பொலீஸாரைத் தொண்டர்கள் சுட்டுத் தள்ளுவதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கலாம் என்று எண்ணி, கொலைக்காரக் குழுக்களை ஆட்சியினர் ஏற்படுத்தினர். இந்தக் குழுவினர் ஆட்சியினரின் ஆதரவோடு நாட்டிலுள்ள தலைவர்களைக் கொல்லத் திட்டமிட்டனர்.

தேள்ஸ் நகர சபை முதல்வருக்கும் கோக் மாநகர சபை முதல்வருக்கும் கொலைகாரக் குழு எச்சரிக்கை அனுப்பியது. அப்பொழுது தேள்ஸ் நகரசபை முதல்வர் மோர்கன் சிறைச்சாலையில் இருந்தார். 19-3-1920ல் கோக் நகரத்தில் பொலீஸ்காரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இதைச் சாட்டாக வைத்துக் கொண்டு அன்றிரவு 1-30 மணிக்கு கொலைகாரக் குழுவினர் கோக் மாநகர முதல்வர் மக்கேட்டனின் வீட்டுக்குச் சென்றனர். பொலீஸ் உடை அணிந்திருந்த அவர்கள் முகத்தில் கரி பூசப்பட்டிருந்தது.

நேரே படுக்கையறைக்குச் சென்ற கொலைகாரர்கள் மக்கேட்டனைச் சுட்டுக்

## பெற்ற பிள்ளையின் ஈமக்கிரியையில் கலந்து கொள்ள தந்தைக்குத் தடை

இவ்வாறுகத் தாக்கப்பட்ட வீடுகளில் தேள்ஸ் நகர சபை முதல்வர் தெனிஸ் மோர்கனின் வீடும் ஒன்று. அப்பொழுது வீட்டில் மோர்கனும் அவரது மனைவியாரும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் பிறந்த மகனும் இருந்தனர். துப்பாக்கிச் சத்தத்தின் காரணமாகச் சிறு பால

சந்தைகள், அயர் மொழி வகுப்புகள், நாடகங்கள், ஹேளிங் விளையாட்டுக்கள் ஆகியவற்றைத் தடை செய்வதிலும் வீடுகளைச் சோதனை செய்வதிலும் அச்சகங்களை மூடுவதிலும் பரிச்சயம் பெற்ற பொலீஸார் ஆணைக் குழுவின் கூட்டத்தைத் தடைசெய்தனர். எனினும் கூட்டம் வேறோர் இடத்தில்

கக் கூறினர். சில நாட்களில் அவர் திரும்பி வந்தார். அவர்மேல் தொண்டர்கள் சிலருக்குச் சந்தேகம் பிறந்தது. இந்தச் சந்தேகத்தைக் கேள்விப்பட்ட கொளின்ஸ், ஜேம்சனுக்கு ஒரு வலை விரித்தார். அதில் ஜேம்சன் அகப்பட்டு விட்டார். உடனே தொண்டர்கள் அவரைச் சுட்டுத் தீர்த்




களின் இருதயம் பலவீனம் அடைந்தது.

சில நாட்களுக்குப் பின் மோர்கன் கைது செய்யப்பட்டார். அவர் சிறையில் இருக்கும் பொழுது அவரது பாலகன், முன்னர் ஏற்பட்ட அதிர்ச்சியால் மரணமடைந்தான். அவனது அந்திமக் காலக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக மோர்கன்

நடைபெற்றது. இவ்வாறன அடக்கு முறைகளில் ஈடுபட்டிருந்த பொலீஸாருக்கு உதவி புரிவதற்காக அயர் நாட்டில் 43,000 பட்டாளத்தினர் இருந்தனர்.

### அரங்கம் 22

முன்னர், தலைவர்கள் அனைவரையும் ஓர் இரவில் கைது செய்தது போல் திரும்பவும் கைது செய்வதற்காக டப்ளின் மாளிகை திட்டமிட்டது. எனினும் கடைசி நேரத்தில் உளவுத் திணைக்களத்திலிருந்த நண்பர்கள் மூலம் திட்டங்கள் கொளின்ஸுக்கு எட்டின. கொளின்ஸ் தன்னல் இயன்ற வரை சின் பீன் தலைவர்களையும் தொண்டர்களையும் எச்சரித்தார். அதன் காரண

தனர். இதுவரையும் சோசலிஸ்டாகக் கள்ள வேடம் போட்டு வந்த ஜேம்சன் கொலை செய்யப்பட்டது இங்கிலாந்திலுள்ள சோசலிஸ்டுகளின் கண்களைத் திறக்க வைத்தது.

ஜேம்சனைத் தொடர்ந்து இன்னுமொரு 'ஸ்கொத்லாந்து யாட்' நிபுணர் கொளின்ஸுடன் நேசம் கொண்

## தொண்டர் படையில் துரோகிகள் நடமாட்டம்

டுக்கு அப் பெயருடனேயே வந்து சேர்ந்தார்.

அயர்நாட்டுக்கு வந்து சேர்ந்த ஜேம்சன், கொளின்ஸுடன் தொடர்பு கொண்டார். தான் ஒரு பொல்செவிக் எனவும் தனக்கு சோவியத் அரசாங்கத்துடன் தொடர்பு உண்டெனவும் கூறினர். அயர் நாட்டில் குடியேற்றவாதத்திற்குச் சாவு மணியடிப்பதற்கு சோவியத் ஒன்றகத்தின் ஆதரவு உண்டெனக் கூறினர். தன்னல் ஏந்திரத் துப்பாக்கிகள் பெற்றுத் தர முடியும் எனவும் கூறினர். கொளின்ஸிடம் இவற்றைக் கூறியபின் டப்ளின் மாளிகைக்குச் சென்று தனது மேலதிகாரியான பொலீஸ் ஆணையாளர்

கேட்ட அனுமதி மறுக்கப்பட்டது. என்னே ஆங்கிலேயரின் கொடுமை! பெற்ற மகனின் ஈமக்கிரியைகளில் கலந்து கொள்வதற்குக் கூட ஒரு தந்தைக்கு அனுமதியில்லை!!

கொளின்ஸைக் கொல்லத் திட்டமிட்ட பொலீஸ் ஆணையாளர் றெட்மண்ட், துப்பாக்கிச் சன்னங்கள் தாக்க முடியாத அணியை அணிந்து அதன் மேல்தான் சாதாரண உடைகளை அணிவார். எனினும் அவர் தொண்டர்களின் படைத் துப்பாக்கிகளிலிருந்து இலகு

**அடுத்த வாரம்**

★ கறுப்பர்—துவரர்

★ நீதவான் கொலை

★ கொரில்லாப் போர்

## விடுதலை இயக்கமும் கைத்தொழில் வளர்ச்சியும்

டார். ஆனல் அவரும் தொண்டர்களால் கண்டுபிடிக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வெளிநாட்டு உளவாளர்களைத் தவிர சின் பீனின் உறுப்பினர் ஒருவரும் டப்ளின் மாளிகைக்குத் தகவல் கொடுத்தார். குவின்லிஸ்க் என்ற அந்த சின் பீன்வாதி பணத்துக்காகக் கொளின்ஸின் நடவடிக்கைகளைப் பற்றி ஆட்சியினருக்கு அறிவித்தார். ஆனல் இவையனைத்தும் உளவுத் திணைக்களத்திலிருந்த நண்பர்கள் மூலம் கொளின்ஸுக்குத்

கொன்றனர். இக் கொலை பற்றி விசாரணை நடாத்திய நடுவர்கள் இது பொலீஸாரால் ஆட்சியினரின் ஒத்துழைப்புடன் நடாத்திய கொலை எனத் தீர்மானித்ததுடன் இக் கொலைக்கு இங்கிலாந்தின் பிரதமர் லொயிட் ஜோஜ், அயர் நாட்டு இராணுவ மாதளபதி பிரெஞ்சு பிரபு, இன்னும் பொலீஸ் இன்ஸ்பெக்ரர்கள் சிலரே காரணகர்த்தாக்கள் என்றும் முடிவு செய்தனர். இன்ஸ்பெக்ரர்களில் ஒருவரைத் தொண்டர்கள் கண்காணித்து வந்ததை ஆட்சியினர் அறிந்தனர்; அவரை அள்ஸ்ரர் மாகாணத்திற்கு மாற்றஞ் செய்தனர். ஆனல்

(13-ம் பக்கம் பார்க்க)

## மாநகரசபைத் தேர்தல்களில் விடுதலை இயக்கத்திற்கு மாபெரும் வெற்றி

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஜூலை மாதம் 21-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# கண்துடைப்பு பிரசங்கம்!

மலையைக் கிள்ளி எலியைப் பிடித்ததாக ஒரு கதை உண்டு. சிறிமா பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் நான்காவது பிரசங்கமும் இந்தக் கதையைப் போலாகி விட்டது.

இதற்கு முந்திய மூன்று பிரசங்கங்களிலும் ஏதோ சில வாக்குறுதிகளையாவது அளித்தனர். இந்தப் பிரசங்கமோ எதையும் திட்டவட்டமாகக் கூறுமல் எல்லாவற்றையும் மழுப்பி விட்டது. யாருக்கும் இதில் எதுவுமில்லை!

சிம்மாசனப் பிரசங்கத்தில் மொழியுரிமை பற்றி ஏதேதோ கூறப்போவதாகச் சிலர் கனவு கண்டனர். தமிழ்ப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்ட சில உதிரிகள் போட்டிபோட்டுக் கொண்டு பிரதமருடன் மொழி பற்றி மூச்சுவிடாமல் பேசினர். தமிழ் மொழிக்கும் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் பிரதமர் ஏதோ சாதிக்கப் போவதாகவும் பறைசாற்றினர். சிம்மாசனப் பிரசங்கத்தில் அவை அறிவிக்கப்படுமென்றும் நம்பிக்கை யூட்டினர். ஆயினும் சிம்மாசனப் பிரசங்கத்தில் மொழியுரிமைபற்றி ஒரு சொல் கூடக் குறிப்பிடவில்லை.

காரணமென்ன? மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதா? இல்லை என்பதை ஆட்சியாளரே ஏற்றுக் கொண்டுள்ளனர். 1964ம் ஆண்டு தொடக்கம் மொழிப் பிரச்சினை முழு உருவத்துடன் பேயாட்டம் ஆடப் போகிறதே! அடுத்த ஆண்டில் சிங்களச் சட்டம் தீவிரமாக்கப்படும்போது தமிழ் மொழியின் நிலை என்ன?

இதுபற்றி சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடத் தவறியது திட்டமிட்டு வேண்டுமென்றே செய்யப்பட்டதாகும். இதன் விளைவாக ஒரு நெருக்கடி உருவாகும் என்பதை ஏனே அவர்கள் உணரவில்லை?

"நாடற்றவர்" பிரச்சினை, தோட்டப் பகுதியில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை அமைத்தல், தொழில்களை இலங்கையர் (சிங்கள) மயமாக்குதல், ஏற்றுமதி இறக்குமதியையும் வர்த்தகத்தையும் சிங்களவர்கள் கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், இலங்கையரல்லாதோர் காணி வாங்குவதைத் தடை செய்தல் ஆகியவை சிம்மாசனப் பிரசங்கத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன. இவைகள் அனைத்தும், இலங்கை வாழ் இந்தியர்களுக்கும், இந்திய வம்சாவளியினருக்கும் எதிரான நடவடிக்கைகள் என்பது கண்கூடு. இவ்வாறு இலங்கை — இந்தியர் பற்றிய பிரச்சினைகளைப் பிரமாதப்படுத்தியிருப்பதில் ஓர் உள்நோக்கம் உண்டு. இந்திய வம்சாவளியினருக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதின் மூலம் மொழிப் பிரச்சினையை மூடி மறைத்து அதன் முக்கியத்துவத்தை இழக்கச் செய்வதே அந்த நோக்கம்.

அதன்மூலம் சிங்களத் திணிப்பை இலகுவாக்க வாய்ப்பு கிடைக்குமென்பது ஆட்சியாளரின் எண்ணம். ஒரு பக்கத்தில் சிங்களத் திணிப்பைத் தீவிரப்படுத்திக்கொள்வதுடன், மறுபக்கத்தில் இந்திய வம்சாவளியினருக்கு எதிரான நடவடிக்கையில் தீவிரமாக இறங்கவும் இடமேற்படும்.

மாவட்டசபை பற்றிய பிரச்சினை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாகிவிட்டது. காலஞ்சென்ற பிரதமரின் பிராந்திய சபை பற்றிய மசோதா சின்னுபின்னமாகச் சிதைக்கப்பட்டு. "பிராந்திய சபை" என்பது மாவட்ட சபையாக மாறியதுடன், அதுபற்றி பலத்த பிரசாரமும் செய்யப்பட்டது. கடைசியில், "மாவட்ட சபை அமைப்பு பற்றி ஆலோசிக்கப்படும்" என்பது மட்டும் சிம்மாசனப் பிரசங்கத்தில் ஒரே வரியில் குறிப்பிட்டிருந்ததைக் கண்டதும் எதிர்பார்த்தோர் ஏமாந்தனர்,

மாவட்டசபை அமைக்கப்படும் என்பதற்கு எதுவித உத்தரவாதமும் அளிக்கப்படவில்லை. அதனை அமைப்பதற்கான மசோதா கொண்டுவரப்படும் என்பதைக்கூட பிரசங்கத்தில் கூறவில்லை. மாவட்ட சபை விஷயம் வெறும் ஆலோசனையோடு நின்று விடும் என்பது இதினின்று தெளிவு.

மாவட்ட சபை அமைத்து, அவற்றின் அலுவல்களைப் பிராந்திய மொழியில் நடத்த அனுமதித்தால் தமிழ் மொழிக்கு ஓர் அந்தஸ்து கிடைக்குமென்பது ஆட்சியாளரின் கருத்து. அதைச் செய்யக்கூட அவர்கள் தயாரில்லை என்பதையே சிம்மாசனப் பிரசங்கம் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறது.

நியாயமான தமிழ் உபயோக மசோதாவை அமுல் நடத்துவது குறித்து சிம்மாசனப் பிரசங்கம் மூச்சுவிடவில்லை.

"பிரசங்கத்தில் அதைக் கூறுவிட்டாலும், அரசாங்கம் அந்த முயற்சியில் ஈடுபடும்" என்று செனேட்டர் நடேசபிள்ளை செனட் சபையில் கூறினர். அந்த நோக்கம் இருப்பின், அரசாங்கம் அதனைச் சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்குமல்லவா, என்று செனட்டர் நடேசபிள்ளையைக் கேட்கின்றோம்—பதில் கூறட்டும்.

அடிப்படை உரிமை மசோதா வரப்போவதாக அரசாங்கத்தின் கைக்குருவிகளான எட்டப்பர் கூட்டம் கும்மாளம் அடித்து எகிறிக் குதித்தது. ஆனல் அதுபற்றி ஒரு சொல்கூட சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம்பெறவில்லை. அடிப்படை உரிமைகள் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு மாறுனவை என்பது அரசாங்கத்தின் கருத்து. அதனை இக் கைக் குருவிகள் இன்றுவது உணர்வது நன்று.

சிறுபான்மையோரின் சட்ட பூர்வமான உரிமைகளை வழங்குவது பற்றி சிம்மாசனப் பிரசங்கத்தில் ஒரெழுத்துக் கூடக் கிடையாது இப்பிரசங்கம் சிறுபான்மையோரை முற்றுகப் புறக்கணித்து விட்டது. இதில் அவர்களுக்குப் பெரும் ஏமாற்றமே.

1960, 1961, 1962 ம் ஆண்டு சிம்மாசனப் பிரசங்கங்களில் இலங்கையைக் குடியரசாக்கப் போவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்தது. 1963ம் ஆண்டுப் பிரசங்கத்திலோ அது பற்றிய பேச்சே கிடையாது. நிறைவேற்ற முடியாத வாக்குறுதியை மூன்றுண்டுகளாக அளித்துவிட்டு, இப்பொழுது வெற்றிகரமாகப் பின்வாங்கியுள்ளனர் ஆட்சியாளர்.

நாடற்றவர் பிரச்சினை பற்றி இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகக் கடந்த மூன்று பிரசங்கங்களிலும் தொடர்ந்து குறிப்பிடப்பட்டது. ஆயினும் இதுவரை ஆக்கபூர்வமாக எதுவும் நடைபெறவில்லை. இப்பிரச்சினை இவ்வாண்டிலும், அடுத்தாண்டிலும் இப்படியே இழுத்தடிக்கப்பட்டு, பின்னர் வரும் பொதுத் தேர்தலில், வாக்கு வேட்டையாடும் கருவியாக உபயோகிக்கப்படும். கடந்த காலத்திலும் அதைத்தானே செய்தனர் ஆட்சியாளர்!

தோட்ட மக்கள் இப்பிரச்சினையில் நேரடியாக இறங்கினலன்றி, இதனைத் தீர்க்கவே முடியாதென நாம் பன்முறை சுட்டிக் காட்டியுள்ளோம்.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காகக் கடந்த ஒவ்வொரு சிம்மாசனப் பிரசங்கத்திலும் வாக்குறுதி அளித்து வந்தனர். ஆனல் வாழ்க்கைச் செலவோ உயர்ந்து கொண்டேதான் இருக்கிறது. இவ்வாண்டுச் சிம்மாசனப் பிரசங்கத்திலும் அதே வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. இதுவும் வெறும் வாக்குறுதியாகவே இருக்கும். வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் ஆற்றல் இந்த அரசாங்கத்துக்கு அடியோடு கிடையாது.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையைச் செனட் சபையில் பிரேரிக்க ஒரு தமிழர் கிடைத்துவிட்டார் என்பதால் தமிழ் பேசும் மக்கள் இதனை ஆதரிப்பார்களென்பது ஆட்சியாளரின் கருத்து. இதில் அவர்கள் நிச்சயம் ஏமாந்து போவார்கள்.

சுருங்கக்கூறின், இந்தச் சிம்மாசனப் பிரசங்கம் எதையும் தீர்க்காமல் விடுவது நல்லது என்ற கருத்தில் தயாரிக்கப் பட்டதாகும். இது ஒரு கண்துடைப்புப் பிரசங்கம், சிறுபான்மையோருக்கு ஏமாற்றமளிக்கும் பிரசங்கம், யாருக்கும் எதற்கும் பயன்படாத உதவாக்கரைப் பிரசங்கம், எல்லோரையும் ஏமாற்ற முயலும் ஒரு மழுப்பல் பிரசங்கம்!

# உரிமைப்போரை நசுக்க உதிரிகள் போர்க் கோலம்

## கிழக்கிலங்கையில் ஒரு முன்னணி வட இலங்கையில் ஒரு காங்கிரஸ்

### மக்கள் மனேநிலை தெரியாதோரின் மதியீனம்

எத்தர் கூட்டத்துக்கு மக்கள் மத்தியில் என்றுமே இடமில்லை. ஏமாற்றுப் பேச்சைக் கேட்டு, மக்கள் இளிச்சவாயர்களாகி விடத் தயாராயில்லை.

கட்சி என்று ஒன்று இருந்தால், அதற்கு ஒரு நோக்கம்—கொள்கை வேண்டும். இது முதல் தேவை. எது வரினும் கொள்கை பிறழாத உறுதி வேண்டும். அது இல்லாதவர்கள் செல்லாக் காசுகள், உருட்டித் தள்ளப்படுவார்கள்—விரட்டி அடிக்கப்படுவார்கள்.

#### துரத்தியடிக்கப் பட்டவர்கள்

கிழக்கிலங்கையில், கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணி என்ற பெயரில் ஒரு இயக்கம் இதன் தலைவர் அரசியல் அரங்கில் அடி எடுத்து வைத்த பொழுதே மக்களால் எட்டி உதைக்கப் பட்டவர். இதன் இதர உறுப்பினர்கள் அரசியல் அரங்கிலிருந்து துரத்தியடிக் கப்பட்டவர்கள்.

இந்த அபிவிருத்தி முன்னணியிடம் ஆக்கத் திட்டம் இல்லை என்றுலும் அழிக்கும் திட்டம் அந்தரங்கத்தில் அல்ல அம்பலத்தில் உண்டு.

#### பிரிவினை வாதம்

தமிழ் பேசும் மக்களைப் பிரதேசவாரியாகப் பிளவுபடுத்தி, உரிமைப் போரை உருக்குலைத்து, சிங்கள மக்களுக்குச் செந் தமிழ் இனத்தை அடிமை ஆக்குவதே இவர்களின் திட்டம். இதற்கு ஒரே வழி இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் போர்க்கோலம் பூணுவதும்-அலரிமாளிகையில் உள்ள ஆளவந்தாருக்கு அடிவருடுவதுமேயாகும்.

இதனைக் குறைவின்றி நிறைவேற்ற முயலுகிறுர்கள், முயற்சி எடுக்கிறுர்கள் ஆனல் முடியவில்லை.

கடந்த சில மாதங்களாக மொழிப்பிரச்சினைக்கு முடிவு காணப் போவதாகப் பிதற்றித் திரிந்தார்கள். பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக அறிக்கைகள் வெளியிட்டார்கள். முடியிழந்த மன்னர்களுக்கும், பச்சோந்திகளுக்கும் நேசக் கரம் நீட்டினுர்கள்—அலரி மாளிகைக்கு ஆலவட்டம் தூக்கினுர்கள்-அமைதியாகி விட்டார்கள். காரணம் கூறத் தேவையில்லை; மக்கள் தெரிந்ததே.

#### ஓய்ந்தது

மொழிப் பிரச்சினைக்கு முழுக்குப் போடுவோம், தமிழ் மொழிக்கு உரிமை பெற்றுத் தருவோம் என்ற காட்டுக் கூச்சல் ஓய்ந்துவிட்டது.

இன்று புதிய உருவில் புறப்பட்டிருக்கிறுர்கள். கிழக்கு மாகாணப் பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமாக, தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களைத் தவிர்ந்த அம்மாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் முக்கியஸ்தர்களும் பிரதமரைச் சந்தித்துப் பேசவிருக்கிறுர்களாம். முக்கியஸ்தர்கள் என்ற வரிசையில் திருமலை வீரர் குமாரசாமியும், எட்டப்பர் எதிர்மனசிங்கமும், நல்லையாவும் உள்ளனர்.

#### சேவை தேவையில்லை

இவர்கள் யார்? கடந்த காலங்களில் மக்களால் தூக்கியெறியப் பட்டவர்கள். இவர்களின் சேவை நமக்குத் தேவையில்லை என்பதை மக்கள் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டியுள்ளார்கள், கடந்த தேர்தலின்போது. மீண்டும் இவர்கள் மக்கள் மீது உரிமை பாராட்டக் காரணம் யாது?

அடுத்து தமிழரசுக் கட்சியைச் சேராத கிழக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யார்? இவர்கள் தமிழரசுக் கட்சியின் அனுதாபத்தைப் பெற்றே கடந்த தேர்தலில் வெற்றி பெற்றுர்கள் என்பது நாடறிந்த உண்மை. இப்படி இருந்தும் தமிழரசுக் கட்சியுடன் போர்க் கொடி உயர்த்தி விம்பு பேசும் இந்த வீரர்கள் எதற்காகத் தமிழரசுக் கட்சி அனுதாபம் பெற்றவர்களையும் துணைக்கு அழைக்க வேண்டும்?

#### தீர்க்கதரிசனம் போலும்

அடுத்து இந்த முக்கியஸ்தர்களான மூவரும் மக்களின் ஆதரவு சிறிதும் அற்றவர்கள். இதைத் தெரிந்தும் கூட இதர பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்களுடன் இணைந்து செயல்பட முனைவது வேடிக்கையாக உள்ளது. இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் எதிர்காலத்தைத் தெரிந்துகொள்ளும் தீர்க்கதரிசனம் உடையவர்கள் போலும். நாளை தங்கள் நிலையும் முக்கியஸ்தர்கள் என்ற அளவுக்கு வந்துவிடும் என்பதை முன் கூட்டியே அறிந்துதான் செயல்படுகிறுர்கள் போலும்.

#### மதிப்பில்லை

மேலும் இந்த முக்கியஸ்தர்கள் ஆளும் கட்சி அங்கத்தவர்களாக இருந்து கொண்டே ஆளும் கட்சியிடம் தூது செல்வது என்றுல் அர்த்தம் தான் என்ன? இது அவர்கள் அங்கத்துவம் வகிக்கும் கட்சியில், அவர்கள் சொல்லுக்கு மதிப்பில்லை, அது செல்லாக் காசு என்பதையே காட்டுகிறது.

கிழக்கிலங்கையில் ஒரு அபிவிருத்தி முன்னணியென்றுல் வட இலங்கையில் ஒரு தமிழ்க் காங்கிரஸ். இவர்களும் சளைத்தவர்கள் அல்லர். எட்டிக்குப் போட்டியாக, அவர்கள் தூது செல்வது என்று அறிக்கை விடுத்தால் இவர்கள் வட்ட மேஜை மாநாடு என்று அறிக்கை விடுவார்கள். முடிவு இரு பகுதியினரதும் ஒன்றுகவே இருக்கும். ஒரே ஒரு வேறுபாடு. பதவியும் பட்டமும் பறிகொடுத்தவர் அனைவரும் முன்னணியாக உள்ளனர். பின்னது தனி நபர் இயக்கம் - இவர்களது நோக்கம் மட்டும் ஒன்றேயாகும். தமிழினத்தின் உரிமைப் போரை எதுவிதத்திலும் நசுக்கி விடுவதாகும்.

#### இடைத்தேர்தல்

பின்னவர்கள் வட்ட மேசை மாநாட்டை மறந்து, இப்பொழுது ஊர்காவற்றுறை இடைத் தேர்தலில் கவனம் செலுத்தி உள்ளார்கள். தினம் தினம் பத்திரிகைகளில் அறிக்கைவிட்டு மனச்சாந்தி பெற்றுக் கொள்கிறுர்கள்.

எத்தனை தூரம் இந்த முன்னணிகளும் காங்கிரஸ் கட்சியும் மக்களை மயக்க முற்பட்டாலும், மக்கள் நிலைமையை நன்றுகத் தெரிந்து வைத்திருக்கிறுர்கள். தமிழினத்தின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் தகுதி உடையவர்கள் யார் என்பதை ஆட்சியாளருக்கும் உலகுக்கும் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

# சிம்மாசனப் பிரசங்கம் வெறும் ஏமாற்று

—எஸ். ஜே. வி.

## ஆட்சியின் ஞானசூனியம் அம்பலமாகிறது

—இராசமாணிக்கம்

இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினர் விடயத்தில் இந்த அரசாங்கம் மனிதாபிமானமற்ற வகையில் நடந்து வருகிறது. பிரதேசசபைகளைநிறுவுவதாகக்காலஞ்சென்ற பிரதமர் வாக்குறுதி அளித்தார். அதை மாற்றி இனிமேல்தான் மாவட்டசபையை யிட்டுப் பரிசிலனை செய்யப்போகின்றனராம். சிங்கள மொழித் திணிப்பால் அல்லலுறும் தமிழ் பேசும் மக்களுக்கு ஆறுதலும் கிடையாது. இவற்றையெல்லாம் பார்க்குமிடத்து சிம்மாசனப் பிரசங்கம் ஒரு 'வெட்புலுடா'வாக இருக்கிறது.

சிம்மாசனப் பிரசங்கம் பற்றி தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், சுதந்திரன் நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

இலங்கையின் விசேட பிரச்சினை 12 இலட்சம் இந்திய வம்சாவளி மக்களைப் பற்றியதே. இது ஒரு மனித இனப் பிரச்சினை.

1948ம் ஆண்டு தொடக்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, ஒவ்வொரு அரசாங்கமும் வெறும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனவே தவிர இதைத் தீர்ப்பதில் ஒருவித அக்கறையும் காட்ட முன்வரவில்லை. இம்முறை சிம்மாசனப் பிரசங்கத்தில் சொல்லப் பட்டிருப்பதும் இதே பாணியில்தான். அன்றியும் இந்தப் பேச்சுவார்த்தைதானும் முடிவடைய முன்னரே அவசரமாகத் தொழில் துறையில் இலங்கையருக்கு முதன்மை அளிக்கும் மசோதா ஒன்றைச் சமர்ப்பிக்க விருக்கிறது இவ்வரசாங்கம்.

### உறுதிகள் எங்கே?

அடுத்தது, சிம்மாசனப் பிரசங்கத்தில் மாவட்ட சபைகள் அமைப்பதுபற்றி கூறப்பட்டது யாதெனில் "கச்சேரிகளுக்குப் பதிலாக மாவட்ட சபைகளைத் ஸ்தாபிக்கும் விஷயம் விரைவில் பரிசிலனை செய்யப்படும்" என்பதே. 1957ம் ஆண்டு ஜூலை மாதம் காலஞ்சென்ற பிரதமர் பிரதேச சபைகளை நிறுவுவதாக எமக்கு எம்முடன் செய்த ஒப்பந்தம் மூலம் உறுதி அளித்தார். 1960ம் ஆண்டில் இதே அரசாங்கம் மாவட்ட சபைகளை நிறுவுவதற்கு சட்டம் கொண்டுவரப்படும் என்று உறுதியளித்தது. ஆனல், மூன்றுவருடங்களுக்குப்பின், இது விஷயத்தைப் பரிசிலனை செய்யப் போகிறதாகக் கூறுகிறது!

மொழி விஷயத்தில் தமிழ் பேசும் மக்கள் நாளுக்கு நாள் சிங்களத் திணிப்பால் இம்சிக்கப் படுகிறார்கள். சிம்மாசனப் பிரசங்கம் இவ்விதமான இம்சையிலிருந்து ஒருவிதமான ஆறுதலும் தமிழ் பேசும் மக்களுக்கு அளிப்பதாக வில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் நமது நிருபரிடம் கூறியதாவது:-

சிம்மாசனப் பிரசங்கம், ஆட்சியில் ஓர் ஸ்தம்பித்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் காட்டுகிறது. எவ்விதமான பிரச்சினையும் இல்லாததோர் சிம்மாசனப் பிரசங்கத்தைத் தயாரிக்க முயன்ற அரசாங்கம், தங்கள் அரசியல் ஞான சூனியத்தைக் காண்பித்திருக்கின்றனர்.

### பொதுச் செயலாளர்

இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் நல்லூர்ப் பிரதிநிதியுமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் நமது நிருபரிடம் கூறியதாவது:-

இந்த அரசாங்கம் முன்பு நிகழ்த்திய மூன்று சிம்மாசனப் பிரசங்கங்களைப் பார்த்தால், அவற்றுக்கும் இப்பொழுது வாசிக்கப்பட்டுள்ள பிரசங்கத்துக்கும் வித்தியாசம் கண்டு பிடிப்பது கடினம். பழைய பல்லவியே திரும்பவும் பாடப்பட்டிருக்கிறது. நாட்டுக்குத் தேவையான நல்லவற்றைக் கூருது, வெறும் வாய்ப்பந்தல் போடப்பட்டிருக்கிறது.

### தொழிலாளர் கழகம்

இலங்கைத் தொழிலாளர் கழகத் துணைத் தலைவர்களில் ஒருவரான திரு. ஆர். எம். இராமையா நமது நிருபரிடம் கூறியதாவது:

இன்றைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் நடைபெற்ற நான்கு சிம்மாசனப் பிரசங்கங்களிலும் இலங்கை இந்தியர் பிரச்சினை பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை. இப்பிரச்சினை சம்பந்தமாகப் பாரத அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்று ஒவ்வொரு தடவையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனல் பலன் எதுவும் ஏற்படவில்லை.

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

அரசாங்க எழுது வினைஞர் சங்கப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியதாவது:-

தமது பிரச்சினைகள் நீதி நியாயம் என்ற அடிப்படையில் தீர்க்கப்படும் வகையில் தம்மைப் பற்றியும் ஏதும் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம் பெறும் என்று எதிர்பார்த்த பல தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு இது ஒரே ஏமாற்றம். ஆனல் சங்கம் இதுபற்றி ஆச்சரியப் படுவதற்கில்லை.

மேலும் அவர் கூறியதாவது:-

இதுவரைகாலமும் கண்துடைப்புக்காகவாவது தமிழைப்பற்றி ஏதேனும் கூறிவந்த அரசாங்கம் இம்முறை தனது முழு உருவத்தையும் வெளிக்காட்டிவிட்டிருப்பது தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களை மட்டுமல்லாது தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் இனியாவது கண் திறக்கச் செய்யுமென்றே எதிர்பார்க்கிறோம்.

## நிழல்கள்

நிழல்கள் தொடர் கதை இடமின்மையால் இவ்வாரம் வெளிவரவில்லை. அடுத்த வாரம் முதல் தொடர்ந்து வெளிவரும்.

ஆ—ர்.

## சுவாமி சிவாநந்தர் மறைவு

நன்னெறி தழைத்தோங்கத் தன்னையே அர்ப்பணித்து அயராது அரும்பாடுபட்டு வந்த தவக்கொழுந்து, ஞானச் சுடரொளியான சுவாமி சிவாநந்தா கடந்த 14ம் திகதி இரவு மறைந்தார் என்ற செய்தி கேட்டு உலகனைத்திலுமுள்ள அவரது பக்தர்கள் கலங்கி நிற்கின்றனர்.

திருநெல்வேலி மாவட்டத்திலே பிறந்த இப்பெரியார் ஆரம்பத்தில் டாக்டராகப் பணி புரிந்தார். மலாயாவில் மக்கள் படும் இன்னலைத் துடைக்க மலாயா சென்று ஏழைத் தொழிலாளர்களுக்கு இலவச மருத்துவப் பணி புரிந்தார். அதன்பின், இல்வாழ்வைத்துறந்து துறவியாகி இமயத்தின் அடிவாரத்திலுள்ள ரிஷிகேசம் சென்று அங்கு தபோவனம் ஒன்றை ஏற்படுத்தி உலகினுக்கே ஆத்மீக ஒளியைப் பரப்பினார். 200 க்கும் அதிகமான புத்தகங்களை எழுதி உலகெங்கும் பரவச் செய்தார்.

ஞானச்சுடர் பரப்பிக் கொண்டிருந்த தூய ஒளி விளக்கு இன்று மறைந்துவிட்டது எனினும் அவருடைய கருத்துக்கள் உலகமெங்கும் மென்மேலும் பரவும் என்பது திண்ணம்.

## இன வெறியைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிப் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ள சங்கமயவின் சுவரொட்டிகளில் காணப்படும் சுலோகங்களிற் சில பின்வருமாறு:

"அரசாங்க அலுவல்களைச் சிங்களத்தில் செய்யாமை தேசத் துரோகமாகும்."

"அரசாங்கத்துடன் உங்கள் தொடர்புகளைத் துரிதப்படுத்தவேண்டுமானுல் சிங்களத்தில் மட்டுமே எழுதுக."

"அரசாங்க மொழியின் எதிரிகளைத் தூக்கி எறியுங்கள்!"

"அரச கரும மொழியில் வேலை செய்க; அல்லது வீடு செல்க."

இச்சுலோகங்களுடன், சிங்கள மொழியில் அரசாங்க அலுவல்களை நடாத்துவதற்கான ஒரு பிரச்சாரக் கூட்டம் இவ்வாரம் நடைபெறுமென்றும், அதில் பத்தேகம விமலவன்ஸ, நிஸங்க விஜயரத்தின ஆகியோரும் பங்குபற்றுவரென்றும் அறிவிக்கும் செய்தியும் சுவரொட்டிகளில் காணப்பட்டது.

## இலங்கைத்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் கபளீகரம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தி அபகரிக்கப்பட்ட உரிமைகளை மீட்க வேண்டும்."

## சிம்மாசனப் பிரசங்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிம்மாசனப் பிரசங்கத்தின் போது சிங்களம் மட்டுமே தேசிய மொழியாகப் பிரகடனப் படுத்தப்படவிருக்கிறது என்றும், காலஞ்சென்ற பண்டாரநாயக்காவினுல் உருவாக்கப்படவிருந்த பிரதேச சபைகள் மசோதா, சிதைக்கப்பட்டு, உருமாற்றப்பட்டுவிடும் முறையில் சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம் பெறலாம் என்றும் கடந்த வாரம் (14-7-63) வெளியான சுதந்திரன் முதல் பக்கத்துத் தலைப்புச் செய்தி கூறியிருந்தது.

'சுதந்திரன்' செய்தியின் மொழி பெயர்ப்பை எடுத்துக்கொண்டு சில 'தமிழர்'கள் அலரி மாளிகைக்குச் சென்று 'இது உண்மையானுல் எங்களைக் காப்பாற்றுங்கள்' என்று பாத பூஜை செய்ததாகவும் கூறப்படுகிறது.

### நமது செய்தி ஊர்ஜிதம்

'பிராந்திய சபைகள்' மாவட்ட சபைகளாக மாறி முண்டமாய் வெளிவருவதாகச் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தோம். சிம்மாசனப் பிரசங்கம் நாம் தெரிவித்ததிலும் பார்க்க இன்னும் மோசமான ஒன்றை அறிவித்திருப்பது நமது செய்திக்கு இன்னும் ஊர்ஜிதமளிக்கிறது.

### மனமுடைந்தாரா? இல்லையா?

பழி கிடந்து பலனடைவதற்காகச் சென்ற வாரத்தில் அலரி மாளிகைக்குச் சென்ற திரு. நடேசபிள்ளையைக்கூட பிரதமர் ஏமாற்றிவிட்டதாகவும் இதனுல் திரு. நடேசபிள்ளை மனமுடைந்தும் உடையாதவர் போல நடந்து கொள்கிருர் எனவும் நம்பப்படுகிறது.

மாவட்டக் கமிட்டிகள் நிறுவுவது பற்றி மசோதாவே கொண்டுவரப்போவதாகப் பிரதமர் கூறிவிட்டு, இறுதியில் அதுபற்றியோசிக்கப்படும் என்று மாத்திரம் கூறியிருப்பதே இதற்குக் காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## இனத்தை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் திடீரென்று ஏன் நமக்கு சிங்கள மொழி கற்பிக்க முயல வேண்டும் என்பதையும் சிறிது சிந்திக்க வேண்டும்.

இன்று ஒரு பாடத்தை சிங்களத்தில் கற்பிப்பவர்கள் சில ஆண்டுகளின் பின்னர் எமது மாணவர்கள் பலருக்கு சிங்களம் தெரியும் என்ற காரணத்தைக் காட்டி சிங்களத்தையே போதன மொழியாக மாற்றிவிடுவார்கள். நமது தமிழ் மொழியைக் கற்பதற்கு வாய்ப்புக்களை மறுக்கவும் கூடும்.

இவ்வாறு மொழியிழந்து உரிமையற்று அடிமை மக்களாய் வாழுகின்ற அவமானம் நம்மினத்தைச் சாரவேண்டாம் என்ற ஒரேயொரு காரணத்தோடு நாங்கள் இந்தப் பணிவான வேண்டுகோளை விடுக்கின்றோம்.

## சிங்கள அமுலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளிருக்கும் தேர்தல் தொகுதி ஒன்றில் இரகசியக் கூட்டமொன்று நடைபெற்றதாம். இக் கூட்டத்தில் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவுடைய இனபந்துக்கள் சிலர் கலந்துகொண்டனர் என்ற செய்தி இப்பொழுது கிடைத்திருக்கிறது.

### மன மாற்றம்

தமிழ் எழுதுவினைஞர் சங்கத்தை வகுப்புவாதச் சங்கமென்று மகுடாபிஷேகம் செய்த அரசாங்க குமாஸ்தாக்கள்சங்கத்தைச்சேர்ந்தவர்களில் அனேகர், இப்பொழுது எழுதுவினைஞர் சங்கத்தில் கண்ணேட்டம் செலுத்தியுள்ளார்கள்.

சோதனையில் சித்தி பெறவும், படித்த, பாடங்கள் மனதில் இருக்கவும் லேசான வழி உண்டு.

உடன் எழுதுங்கள்

பி. எம். திசாநாயக

கம்பளை.

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-25

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

# பாவலரும் நாவலரும் போற்றிய பேரறிஞன்

## பல்துறையில் பயின்று பண்தமிழை வளர்த்தோன்

## அமரன் விபுலாநந்தன் அவனியில் நீடு வாழ்க

"அறிஞர் விபுலாநந்த அடிகள் இயல்பால் அறவர்; உணர்வால் உண்மைத் தமிழ்த் துறவி; அவர் மறைவு தமிழ்க் கிழவு...இகலறியா இன்ப உறவி வர் இயல்பு. எல்லார்க்கும் இன் சொல்லர்.

"எப்போதும் நகை அரும்பும் அருள் முகத்தவர். யார் மாட்டும் பகைமை இலர்.

"சினம் விளையா மனப் பாங்கும் வினைத் திறமும் ஒருங்குடையார்.

"நடுநிசியில் தன் அறிவால் எப்பொருளும் யாரியல்பும் தானளந்து காணும் இயல் பேணுபவர்.

"நன்கன்றித் தீதறியாப் பெருமையோடுநெஞ்சறிந்த உண்மைகளை அஞ்சாமல் ஓம்பும் உள உரனுடையார்.

"கண்ணோட்டம் மிக்குடையார்;என்ருலும் யார் சொல்லினும் நேர்மை தவிராத மனத் திண்மையினர்.

"கலைக் கடல் நீர் குடைவதிலே களிப்புடையார்.

"ஆங்கிலத்திலும் தமிழினிலும் அகன்ருழ்ந்த புலமையொடு, ஆரியமும் பயின்ருன்ற சான்ருேரவர்.

"முத்தமிழ் வித்தகர்...... சில சொல்லிப் பல தேரச் செய்யும் அரும் திறலமைந்த நாவலர்; உளம் குளிர உணர்வொளிர வளம் பொலி தீஞ்சுவை மலியும் கவிகள் தரும் பாவலர்.

"அருளே போல தெருளறிவுச் சிறப்பு மிகு சிந்தைச் செல்வர்.

அறவாழி அந்தணன்தாள் மறவாத வாழ்க்கையினர்.

"அனவரதம் தனை மறந்து பிறர்க்கருளும் பெருமிதத்தில் திளைத்துவப்பர்.

"பாசம் அறுத்தநன் ஆற்றும் அசையினல் பிறர்க் குழைக்கத் துறவு பூண்டார் ........" என்று நெஞ்சம் நெகிழ்ந்து உருகும் முறையில் தாயகத்துத் தமிழ் அறிஞர் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் விபுலாநந்த அடிகள் மறைந்த அன்று கூறிய இரங்கல் உரையே வீறு புகழ் விபுலாநந்தரின் பல்துறைப் பெருமையை இப் பேருலகுக்கு எடுத்துக் காட்டப் போதிய சான்ருய் அமையும்.

### மட்டுநகர் தந்த மாணிக்கம்

பாரீந்த ஈழத்தின் திசை கிழக்கில் மீன் பாடும் மீன் உலவும் மட்டக்களப்பில் சீரார்ந்த காரதீவில் 29-3-1892ல் சான்ருேர் சாமித் தம்பியாருக்கும், அன்னுர் கற்புடை மனைவி கண்ணம்மையாருக்கும் மகவாய்ப் பிறந்து மயில்வாகனம்எனப் பெயரும் சூட்டப்பட்டார். இவர் பிறந்த இதேஆண்டில்தான் தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாத ஐயரும் தமிழ் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை அச்சுவாகனம் ஏற்றினுர். காலப் போக்கில் விபுலாநந்தராக மாறிய மயில்வாகனருக்கு மங்காப் புகழ் அளித்து நிற்பது அவரின் யாழ் நூலே. அவர் யாத்த யாழ் நூலிற்குப் பொன்ருப் பெருந்துணையாய் விளங்கியது இளங்கோ அடிகளின் சிலம்பு. அத்துடன் சிலம்பில் சிறப்போடு வாழ்த்தி வழுத்தப்படும் கண்ணகி என்னும் பத்தினித்தெய்வத்திற்குப் பழம் பெரும் கோயிலும் இவர் பிறந்த ஊரில் சிறப்புறத்திகழ்கிறது என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய இந் நிகழ்ச்சிகளும் விபுலானந்தரின் சிந்தையை சிலம்பின் பால் ஈர்க்கக் காரணமாய் அமைந்தது என்று கூறின் தவருகாது. ஏன், விபுலாநந்த அடிகள் கூட சிலப்பதிகாரத்தினுல் ஆட்கொள்ளப்பட்டு "அவர் ஒரு அடிகள் எழுதி வைத்தார். நான் ஒரு அடிகள் அதை விளக்குவேன்" என அடிக்கடி கூறியதில் இருந்து அறியக்கிடக்கிறது.

### இளங்கோ — விபுலாநந்த அடிகள் ஒற்றுமை

இளங்கோ அடிகள் அரசியல் வாழ்வை, உலகியல் இன்பத்தைத் துறந்தார். ஆனுல் அருந்தமிழைத் துறக்க முடியவில்லை. காரணம் பற்றற்ற துறவியையும் பைந்தமிழ் பற்றிக்கொண்டு விட்டது. அந்தப் பற்று நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை எமக்கு அளித்தது. அதனுல் இளங்கோவும் எம் இதயத்தில் நீங்கா இடம் பெற்று விட்டார். நம் மயில்வாகனருைம் மண்ணைத் துறந்து பெண்ணைத் துறந்து, பொன்னைத் துறந்து, 1922-ல் மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் துறவியாகி விபுலாநந்த அடிகளாக மாறினுர். பற்றற்ருன் பற்றினை பற்றி நின்ற இத் தூய துறவியையும் தமிழ் தாவி அணைத்துக் கொண்டது. தாவி அணைத்த தமிழுக்கு தலை தாழ்த்திய துறவி 'யாழ் நூல்', 'மதங்க சூளாமணி' என்ற மதிக்கமுடியா அணிகலன்களையும் மற்றும் ஏனைய நன் மணிகளையும் அணிவித்து தமிழ் நங்கையின் எழில் உருவில் சொக்கித் திளைத்தார். சுருங்கக் கூறின், அடிகளின் துறவறம் தமிழ் காக்கும் நல்லறமாக மாறியது தமிழ் இனம் செய்த தவப்பயன் என்றே கூறியாக வேண்டும்.

**ஈழவேந்தன்**

### பலதுறைப் பணி

விபுலாநந்த அடிகளை எண்ணும் போது எம் நினைவலைகளில் மோதும் முதல் எண்ணம் அவர் யாத்த யாழ் நூலே. காரணம், அவர் புகழ் நிலமிசை நீடு வாழ வழிவகுத்தது அவர் யாழ் நூலே. எனினும் இவ் ஏது கொண்டு, இவர் பணி யாழ்நூல் யாத்ததோடு முடிவடைந்தது என்று கருதுவது தவறு. அவரின் உள்ளம் பரந்து விரிந்த உள்ளம். தொண்டாற்றத் துடித்த தூய உள்ளம். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் அருள் மொழிக்கு தன் உள்ளத்தை பறிகொடுத்த விபுலாநந்தரின் பணி, பல் துறையில் பரவி பைந்தமிழருக்கும், நல்வாழ்வை அளித்து நின்றது.

### பாரதி பக்தி

பாட்டுக்கொரு புலவர் பாரதியிடம் அடிகளுக்கு நாட்டம் மிகுதி. அதனுல் தான் பாரதியைப் போற்ற பல பண்டிதர்கள் தயங்கிய காலத்திலேயே அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கிய விபுலாந்த அடிகள் பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்த பாரதியின் பல்துறைப் பாவின் நலத்தினை நற்றமிழர் கேட்டு நலிவு நீங்க நயம்பட விரிவுரைகள் நிகழ்த்தினுர். பாரதியின் ஒவ்வொரு பாடலும் இவரின் வாழ்விற்கு வளம் ஊட்டியது. அவற்றுள் ஒன்று தான்,

> 'இன்னருங் கனிச் சோலைகள் செய்தல்
> இனிய நீர்த்தண் சுனைகளி யற்றல்
> அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
> ஆலயம் பதினுயிரம் நாட்டல்
> பின்னருள்ள தருமங்கள் யாவும்
> பெயர் விளங்கியொளிற நிறுத்தல்
> அன்னயாவினும் புண்ணியங் கோடி
> ஆங்கோரேழைக்கு எழுத் தறிவித்தல்'

என்ற பா. இப் பாவில் பகர்ந்தமைக்கமைய இந்தியாவில் இவர் வாழும் பொழுது சேரி வாழ் தீண்டத் தகாதோர் எனப்பட்ட எல்லோரையும் அன்போடு அணைத்து "சிவனடியார்" எனப் பெயரும் சூட்டி, தீந்தமிழ் உணவு ஊட்டி, அவர்கள் வாழ்வை வளம் பெறச் செய்தார். அத்தோடு பெருமக்களின் துணை கொண்டு காரைதீவில் (மட்டுநகர்) 'சாரதா' கல்லூரி, கல்லடி உப்போடையில் 'சிவானந்த வித்தியாலயம்', திருமலையில் 'இந்து ஆங்கிலக் கல்லூரி' ஆகியவற்றைத் தோற்றுவித்து தமிழினத்தின் அறிவுப் பசி தீர்க்கப் பெரும் முயற்சி செய்தார். மற்றும் ஈழத்தின் பல்வேறு கல்லூரிகளின் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பணி சொல்லில் அடங்கா.

இன்று உலகிடை வாழும் மக்களும் சரி, எம் தமிழினமும் சரி மற்றவர்களுக்கு அறிவுரை கூறி வாழ்வதில் அக்கறை கொள்கிருேமே அன்றி யாம் வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கு முயல்கிருேம் இல்லை. இதனுல் எம்மிடையும், உலக மக்களிடையும் வெறுப்பும், கசப்பும், பிணக்கும், பூசலும், போர் வெறியும் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன. இந்நிலை மாற வேண்டும் என்பது விபுலானந்தரின் விருப்பு. அதற்கு அவர் கொடுக்கும் மருந்து பின்வரும் கவிதை உருவில் வெளிப்படுகிறது. இதோ அவர் கவிதை:-

> 'தான் திருந்தத் தாரணி
> தானே திருந்துலால்,
> வான் பொருந்துங் கீர்த்தி
> வலியவருந்—தேன் பாங்காய்,
> இல்லந் திருந்த
> இராச்சிய மேதிருந்தி,
> அல்லலிலாத் தேவருலகாம்'

எனக் கூறும் அவர் போதனையை விட்டு நீ சாதனையைச் செய்திடுக ஏதமாற நற்பயன் ஏற்படும் இம்மேதினியில் என மேலும் அறவுரை நல்குகிருர். இவ் அறவுரைக்கமைய அவர் வாழ்வும் அமைந்திருந்த தென்பது ஈண்டு வலியுறுத்தற்குரியது.

### அடிகளார் மறைவு

பல்துறையில் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும், தமிழகத்திற்கும் பணியாற்றி உலகில் எமக்குத் தனி இடம் பெற்றுத் தந்த விபுலானந்தஅடிகள் எம்மை எல்லாம் ஆற்ருெண்ணுத் துயரில் ஆழ்த்தி 19-7-47ல் தன் இன்னுயிர்நீத்து, இறையோடு இந்தமிழ் இசைமீட்

(13-ம் பக்கம் பார்க்க)

## விகர் பில்ஸ்



இளமையிலேயே நரம்புத் தளர்ச்சியினாலும் மற்றும் ஆண்மையின்மை ஏற்படுவதால் வெட்கப்படும் வாழ்க்கையில் வெறுப்புற்றும் கழியும் வாலிபர்களுக்கும் வயதானவர்களுக்கும் இழந்த வாலிபத்தன்மை திரும்பவும்பெற இம்மருந்தை ஒரு மாதம் சாப்பிட்டால் போதுமானது. மூத்திரக்கோளாறுகள் வெள்ளை ஸ்கலிதம், மூலம் பவுத்திரம், பசியின்மை, மாதவிடாய்க் கோளாறுகள் வெள்ளைபாடு காமாலை பாண்டு, மூச்சு முட்டு, மலச்சிக்கல், முதலிய வியாதிகளை குணப்படுத்தி நிரந்தரமான ஆரோக்கியத்தை அளிக்கும் திறமையும் இம்மருந்துக்கிருக்கிறது

விலை 30 மாத்திரைகள் ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீவா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ். 208. வார்ட் பிளேஸ், பொரளை.

## மக்கள் குரல்

# பொதுவுடைமைப் பித்தலாட்டம்

## 'சுதந்திரன்' கூற்று உண்மையானது

இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும், தொழிற் சங்க சம்மேளனத்தின் காரியதரிசியுமான திரு. என். சண்முகதாசன் இந்திய—சீன எல்லைப் போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது, சீனத் தூதுவராலயத்துக்குச் சென்று, அந்தரங்கமான மாநாட்டில் கலந்து கொண்டார் என்பதை 11-11-62ல் வெளியான 'சுதந்திரன்' முன் பக்கச் செய்தி அம்பலப்படுத்தியது. அத்துடன் இந்தியக் கொம்யூனிஸ்டுக் கட்சிப் பிரமுகர்கள் சிலர் இலங்கைக்கு வந்து இந்தியாவின் பாதுகாப்பு, யுத்த ஆயத்தம் சம்பந்தமான தகவல்களை இலங்கையிலிருந்து அனுப்பிவருவதாகவும், இந்தியா பற்றிய உளவு வேலைகளை அறிய இலங்கையை சீனர்கள் ஒரு கேந்திர ஸ்தானமாக அமைக்க முனைவதையும் அவ்வப்போது 'சுதந்திரன்' பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டியது.

இந்த உண்மைகளைச் சுதந்திரன் துணிந்து வெளியிட்ட போது இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிப் பிரசார ஏடுகள் 'சுதந்திரன் கூற்று முற்றிலும் பொய்யானது' என்று கூறி வசை புராணமும் பாட ஆரம்பித்தன.

இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் சீனுவை ஆதரிக்கும் கோஷ்டியில் திரு. சண்முகதாசன் முன்னணியில் திகழுகிருர் என்பது இப்பொழுது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. சீன அரசாங்கத்துடனும், இங்குள்ள சீனத் தூதுவராலயத்துடனும் திரு. சண்முகதாசன். தலைமையிலுள்ள சீனத்தை ஆதரிக்கும் கோஷ்டி மிக நெருங்கிய தொடர்பு வைத்துள்ளதென்று இப்பொழுது அறியப்படுகிறது. இப்படியிருக்கையில் கொம்யூனிஸ்ட் பிரசார ஏடுகள் 'சுதந்திரன்' வெளியிட்ட உண்மைச் செய்திகளை முன்பு மூடி மறைக்க முன் வந்தது வெட்கங் கெட்ட செயலாகும்.

கடந்த 4 வருடங்களாக நான் ஒரு கொம்யூனிஸ்ட் கட்சி அனுதாபியாகவே இருந்து வந்தேன். பொதுவுடைமைமுன்னணியாளர்களுடன் நெருங்கித் தொடர்பு கொண்டிருந்தேன். தாங்களாகவே எதையும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க முடியாத—தெம்பற்ற - சுயபுத்தியற்ற இவர்களை எங்ஙனம் நம்ப முடியும்? சீனுவில் உருவாகும் திட்டங்களை ஒரு சாராரும், ருஷ்யாவில் தயாராகும் சட்டங்களை மறு சாராரும் தலைமேல் தூக்கி வைத்துக் கூத்தடிக்கும் இவர்களை எள்ளளவும் நம்புவதில் எந்த வித பயனும் கிடைக்கப் போவதில்லை என்பதைத் தெளிவாக அறிந்த பின்னரே எனது கருத்தை வெளியிடுகிறேன்.

பொதுவுடைமை என்னும் புதுக் கரடியை அவிழ்த்து விட்டு ஒரு சிலர் தங்களுக்குச் சாதகமாக மக்களை வர்க்க ரீதியில் பிரித்து அன்பு, நன்றி உணர்வு, சுகவாழ்வு சகோதரத்துவம் முதலியவற்றை அழித்து விட்டு, பேதமை, சிந்தனைத் தணிக்கை, மானிட சுதந்திர மறுப்பு, உறவுமுறிவு, விரோதம், பொய்ப்பித்தலாட்டம் போன்றவற்றைப் பரப்பவுமே வழிகோலும் இவர்களிடம் மக்கள் ஏமாருதிருக்கவேண்டும் என்பதே எமது பேராசையாகும்.

—சி. வ.

புறக்கோட்டை

# செயலாண்மை மிக்க அருளாளன்

## யாழ் நூல் தந்த வித்தகன்

## பிற சமய விரோதிகளுக்கு அவர் கூற்று ஒளி விளக்காகும்

விபுலாநந்த அடிகள் வாழ்ந்தார்கள் என்பதும் நமக்குத் தெரியும்—வளர்ப்பும் வாழ்வும் நமக்குத் தெரியும். ஆனால் அவர் வாழ்வு ஏனைய மனிதர்கள் வாழ்வுக்குப் புறம்பானதால் தான் இன்றும் அவரைப் பற்றி நாம் சிந்திக்கின்றோம்—அவர் வாழ்வை உற்று நோக்குகின்றோம். அவர், மறைந்தும் மறையாது நமது சிந்தனைகளைத் தூண்டிக் கொண்டிருக்கின்றார். "புகழில்லாத ஒரு யுக வாழ்வைவிட புகழ்கொண்ட ஒரு கண வாழ்வு மேலானது" என்று அறிஞர்கள் கூறுவர். இதைத்தான் வள்ளுவனும்—

"தோன்றிற் புகழோடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை
நன்று"

என்றும்,

"தக்கார் தகவிலர்
என்பதெல்லாம் அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

என்றும் புகழ் பூண்ட வாழ்க்கையைப் பற்றிப் பாராட்டிக் கூறினான். இந்த வரைவிலக்கணத்துக்கு அமையவே விபுலாநந்த அடிகளின் வாழ்வு அமைந்திருந்தது.

### மதங்க சூளாமணி

விபுலாநந்த அடிகள் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழிக்குப் புது மெருகு ஏற்றப்பட்ட காலம். அடிகள் உலக வாழ்வைத் துறந்த பொழுதிலும் தமிழ் மொழியைத் துறக்க முடியாது விடுதலறியாப் பற்றுதலுடன் இருந்தார். அவர் செகசிற்பியரின் நாடகங்களில் மிகுந்த ஈடுபாடு உடையவர். அந்த நாடகங்களைப் படித்ததும் நாடக ஆர்வத்தால் உந்தப்பட்டார். தமிழில் நாடக நூல்கள் பற்றாக்குறை இருப்பதை அறிந்தார். இந்த ஆர்வம் அவரை நாடகம் எழுதத் தூண்டியது. முயற்சி செய்தார்—அதன் பெறு பேறாக "மதங்க சூளாமணி" என்னும் அரிய நாடகம் உருவாகியது.

### யாழ் நூல்

அடிகள் சிலப்பதிகாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அதில் அளவுக்கு மீறி ஈடுபட்டு அவற்றை நுணுகி ஆராய முற்பட்டார். கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகள் வரையில் சிலப்பதிகாரத்தையும், பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை முதலிய ஆற்றுப்படைகளையும், சிந்தாமணி, உதயண காவியம், புறநானூறு, பரிபாடல் முதலிய பண்டைப் பனுவல்கள் முதலியவற்றை நுணுகி ஆராய்ந்தார். அவற்றுள் இசையின் முன்னைய நிலையைக் கண்டார்; அதன் பின்னணியில் அன்றைய இன்றைய நிலையையும் எண்ணினார். தமிழிசைக்குப் புது மெருகு கொடுக்க ஆவலுடன் விழைந்தார். இந்த ஆராய்ச்சிப் பின்னணியைக் கொண்டு மேலும் முயற்சி செய்தார்—அதன் முடிவு தான் "யாழ் நூல்" என்ற இசையமுதம். அடிகளார் இதைப் பற்றிக் கூறுகையில்—

"இவ்வாராய்ச்சியினை யான் எழுதத் துணிந்தது பொய்யில் காட்சிப் புலமையினோராகிய இளங்கோவடிகள் தமிழ் தெய்வத்தின் திருவடிகளுக்கு அணியாகப் புனைந்தருளிய தெய்வமாக் காவியமாகிய சிலப்பதிகாரத்தின் மாட்சியினை என்னாலியன்ற வரை உலகிற்குத் தெரிவிக்கும் பெருவிருப்பினாலேயாம்"

**ஆ. தேவராசன்**

என்று கூறினார். சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில் வரும் சில அடிகள் யாழ் நூலின் அடித்தளமாக அமைந்த தென்றால் மிகையாகாது.

"ஈரேழ் தொடுத்த செம்முறைக்கேள்வியின் ஒரேழ் பாலை நிறுத்தல் வேண்டி வன்மையிற் கிடந்த தாரபாகமும் மென்மையிற் கிடந்த குரலின் பாகமும் மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக் கைக்கிளையொழிந்த பாகமும் பொற்புடைத் தளராத் தாரம் விளரிக் கீத்துக் கிளை வழிப்பட்டனளாங்கே கிளையுந் தன்கிளை கிளை யழிவு கண்டவள் வயிற்சேர ஏனை மகளிருங் கிளை வழிச் சேர மேல துழையினி கீழது கைக்கிளை வம்புறு மரயிற் செம்பாலை யாயது இறுதி யாதியாக வாங்கவை பெறுமுறை வந்த பெற்றி நீங்காது படுமலை செவ்வழி பகரும் பாலையெனக்குரல் தரலாகத் தற் கிழமை திரிந்தவின் முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்கு இனிமுதலாகிய ஏர்படு கிழமையுங் கோடி விளரி மேற் செம் பாலையென நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையின் இணை ரம்புடையென வணைவுறக் கொண்டாங்கு யாழ் மேற் பாலை யிட முறை மெலியக் குழன் மேற் கோடி வல முறை வலிய வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம் பொலியக் கோத்த புலமையோன்"...—

என்ற அடிகளே இங்கு குறிப்பிடத்தக்கவை. இவற்றிடை நுணுகிச் சென்ற அடிகளின் நுண்மாண் நுழைபுலம்தான் 'யாழ் நூலை' ஈந்தது என்பதில் வியப்பில்லை. இந்த 'யாழ் நூல்' அரங்கேற்று விழா 20-6-47ல் சென்னையில் திருக்கொள்ளம்புத்தூர் ஆளுடைப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சர் (அக்கால) திரு. திரு. சு. அவினாசிலிங்கம் செட்டியார் தலைமையில் விழா நடந்தது. பல்வேறு தமிழ்த் துறைகளிலும் பாண்டித்தியமும் ஆழ்ந்த புலமையும் கொண்ட அறிஞர்கள் விழாவில் கலந்து கொண்டனர். இசைப் புலவர்களும் கலந்து கொண்டு விழாவில் அடிகளாரின் இசை நுணுக்கங்களைப் பாடி விளக்கிக் காட்டியது சிறப்பு நிகழ்ச்சியாகும்.

### அறியாமை

அடிகளார் இராம கிருட்டின மிசனில் சேர்ந்து துறவறத்தை மேற்கொண்டார். அவர் காலத்தில் ஆறுமுக நாவலரும் வாழ்ந்திருந்தார். அவர் நட்பும் உறவும் அடிகளுக்கு ஏற்பட்டது. மிசனில் உள்ள வாழ்வும், ஆறுமுக நாவலர் செயற்திறமும் அடிகளை ஆட்கொண்டன. அடிகள் இலங்கைக்கு வந்திருந்த காலை சாரதா வித்தியாலயம், சிவானந்த வித்தியாலயம் முதலான கல்விக் கூடங்களை ஆக்கித் தந்தார்—அறிவியல் வளர்ச்சிக்குப் பணி புரிந்தார். அடிகள் தன் சமயத்தில் மீளாத பற்றுக் கொண்டிருந்தாலும், வேற்றுச் சமயங்களையோ, சமயிகளையோ தூற்றவில்லை—தூற்றுதல் அறியாமை என்று அவர் எடுத்துக் காட்டினார்.

"நீ ஒரு சைவ சமயத்தவன். மற்றச் சமயங்களை இகழாதிருத்தலே சைவ சமயத்தின் கொள்கை. சைவ சமயத்தின் பெருமையை மற்றச் சமயத்தவர்கள் தாமாக உணர வேண்டும். ஆகையால் மற்றைய சமயம் எதையாவது நீ இகழ்ந்து பேசுவையாகில் நீ சைவ சமயத்தின் முதலாவது எதிரியாகக் கருதப்படுவாய். ஆகையால் நீ உண்மைச் சமயப்பற்று உள்ளவனாயிருந்தால் இன்று தொடக்கம் மற்றைய சமயங்களை இகழ்ந்து பேசுவதை விட்டுவிட வேண்டும்" என்று ஒரு இடத்தில் பிற சமயிகளை இகழும் அறிவீனர்களுக்குப் புத்தி புகட்டுகின்றார். இந்தக் கருத்து இன்று சமய வெறியைக் கிளற முற்படும் ஒரு சில அறிவிலிகளுக்கு, சமய விரோதிகளுக்கு, சமயத்தின் உட்கருத்தை உன்னி அறியாதவர்களுக்கு ஒரு ஒளிவிளக்காக அமையும்.

மேலும் அடிகள் சமூகப் பிரச்சினைகளில் ஈடுபாடு கொள்ளாமல் இல்லை. அவற்றையும் ஆய்ந்து தன் உள்ளத்தில் எழுந்த தெள்ளத் தெளிந்த அறிவுரைகளை வழங்கத் தவறவில்லை. அடிகள் மனித வாழ்வில் மனச்சாட்சி முதலிடம் பெற வேண்டும் என்பதை நன்குணர்ந்தார். அடிகள் அது பற்றி ஒரு இடத்தில் கூறும் கருத்துரை மிக அழகும் ஆழமும் வாய்ந்ததாகும்.

"மனச்சாட்சியிடத்தே மனத்தை ஒப்படைக்காதவன் தன்னை இறைவனிடத்தே ஒப்படைப்பதில்லை. நிலக்கரி நெருக்கப்படுவதாலே விலையுயர்ந்த வைரமாகி ஒளிவிடுகிறது. மனமும் (மனச்சாட்சியால்) நெருக்கப்பட்டு, உறுதியும் ஒளியும் உடையதாக மாறி விடுகிறது. அது தன் ஒளியினாலே தான் சென்ற விடத்துள்ள பொருள்களையும் எளிதிற் காணவல்லதாகும். அவ்வொளியே வாழ்க்கையின் இருளைப் போக்கி வழிகாட்டும். மனச்சாட்சியின் தலைமையில் வாழ்க்கை திகழ வேண்டும் மனச்சாட்சி வழி ஒழுகுவார் வாழ்க்கை காலத்தாலும் தேயத்தாலும் வெகு தூரத்தே இருப்பினும், ஒரே மாதிரியாகவே இருக்கும்."

அடிகள் தமிழில் இந்த அளவு புலமை பெற்றிருந்தாலும், அவர் வாழ்க்கை விஞ்ஞான ஆசிரியராகவே தொடங்கிற்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் 'பிரபுத்த பாரத' என்ற ஆங்கில ஏட்டுக்கும், 'ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்' என்ற தமிழ் ஏட்டிற்கும் ஆசிரியராக இருந்து பல நல்ல கருத்துக்களைப் பரப்பினார். பல அரிய விஞ்ஞானக் கட்டுரைகளை அவ்வப்போது தமிழில் மொழி பெயர்த்துப் பல பத்திரிகைகளில் வெளியிட்டார். தானாகவே பல விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். அவர் 'சொல்லாக் குழுவின்' தலைவராகவும், தமிழாராய்வுக் குழுவின் உறுப்பினராகவும் இருந்த பல கலைச் சொற்களை ஆக்கியும், ஆய்வுக் கருத்துக்கள் வழங்கியும் தமிழுக்குப் பணி செய்தார். விஞ்ஞானத்தைத் தமிழில் போதிக்க தமிழ் ஏற்ற மொழியா? என்று ஏமாற்றக் கூச்சலிடும் தமிழ்த்தகுதியற்ற எங்கள் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு அடிகள் ஒரு கலங்கரை விளக்கமாவார்.

ஆகவே, அடிகள்—வாழ்விலே எதிர்ப்பட்ட பல பிரச்சினைகளைப் பற்றி எண்ணினார்—ஆராய்ந்தார்—முடிவு செய்தார்—செயற்பட்டார்-நிறைவேற்றினார். அடிகள் வாழ்வு இந்த நிலையில் செயலாண்மை மிக்க அருளாட்சி கொண்ட வாழ்வு என்பதில் சந்தேகமில்லை. அவர் வாழ்வு குப்பலில் கோவிந்தா போடும் இன்றைய தமிழர்கட்கு ஒரு உறைப்பான பாடமாகும்.

# போருக்குப் புறப்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பின் முடிபு மனிதனுக்கு மரணமாயிற்றே. அந்த வகையிலே அடிகளாரது மரணம் ஈடுசெய்ய முடியாத நட்டமாக இருந்தாலும், மனித இனம் தாங்கிக் கொள்ளத்தானே வேண்டும். நியதியும் அதுவாயிற்றே.

விபுலாநந்த இலக்கியம் படைத்த அடிகளார் மறைந்து பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இன்று அடிகளார் மறைந்து 16வது ஞாபகார்த்த நன்னாளாகும். இந்தப் புனிதமான ஞாபகார்த்த நாளிலே விபுலாநந்த இலக்கியத்திலே பிறந்த விபுலாநந்த வெள்ளத்திலிருந்து ஒருசிறு பகுதியினைத் தந்து தமிழை வளர்த்த அடிகளாரை நினைவுகூர முனைந்தேன்... இதோ! விபுலாநந்த வெள்ளத்திலிருந்து ஓர் சிறு அலை!......

கிரேக்க தேசத்து அறிஞர் பிளேட்டோ என்பவர் இயற்றிய "விருந்து" என்னும் கட்டுரையைத் தழுவியெழுந்த பாவலர் விருந்து நாடகத்திலே, நன்மாறன் என்னும் மன்னவன் தமிழ்க் கவிஞர்களுடன் அன்பினைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கையிலே சாத்தனார் அன்பின் வரன் முறைமையினை எடுத்து விளக்கினார். அவரது உரையைக் கேட்டவண்ணம் தெருத்திண்ணையிலிருந்த இளமாணியார் அறிவுடையரனார் சிந்திக்கத் தொடங்கினார். அவரது சிந்தனை கவிதையாக மலர்கிறது. இதோ கவிதை:

குணதிசையிற் பரிதியெழக்
கமலமல
ரகநெகிழ்ந்த குறிப்புக்
கண்டேன்
மணவணிநாள் விரவிவர
மணமகளின்
முககமல மலரக் கண்டேன்
இணையனாக வுவகையின்ற
குதுகலிக்கும்
பெண்புறவி னியல்பு
கண்டேன்,
அனைவர் தனித் துணைவரெனி
கைநெகிழ்ந்த
லன்பாமென் றறிந்தேன்
யானே

சூரியன் உதிக்கத் தாமரை உளநெகிழ்ந்து நின்ற குறிப்பினைக் கண்டேன். திருமணத்து நாள் சமீபித்து விட்டதனால், நாயகனையடையப் போகிற நாயகி உவகையினால் முகமலர்ந்து நின்ற மணமகளைக் கண்டேன். ஆண்புறா திரும்பி வர அதனைக் கண்ட பெண்புறா நெருங்கிச் செல்கிற குறுகுறுப்பைக் கண்டேன். இவைகளினால் அன்பின் திறத்தை அறிந்து கொண்டேனென்று பாடிய அடிகளார், மேலும்

அணியிரவி கடலில்விழ
அரவிந்தஞ்
சேர்ந்துவிழு மல்லல்
கண்டேன்
இணைபிரிந்த விளம்பறவை
சிறையடித்து
நனிவருந்து மின்னல்
கண்டேன்
கணவனுடல் பதறிவிழக்
கதறியழு
மடமகளின் கவற்சி கண்டேன்
துணைவர்பிரித் தேகுள்காற்
றுயறுத
லன் பென்னத் துணிந்தேன்
யானே

இந்த வகையிலே விபுலாநந்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. கலைச் சொல்லாக்கம் தொடக்கம் சிந்தனை மொழி உரை பரந்து கிடக்கும் விபுலாநந்த வெள்ளத்திலே நாம் அனைவரும் நீந்திச் சென்று மகிழ்வதே தமிழ் வளர்த்த அடிகளாருக்காக நாம் செய்யும் பணியாகும்.


**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# நடிகைகளுக்குள் மோதல்

## படப்பிடிப்பின் போது கலைஞர்களின் திண்டாட்டம்

**சினிமாப் படங்களில் சகோதரிகளாகவோ, சினேகிதிகளாகவோ தோன்றும் பல நடிகைகளிடம் ஒற்றுமையோ உறவோ இருப்பதில்லை. இவர்கள் நிஜவாழ்க்கையில் எதிரும் புதிருமாகவே இருப்பார்கள்.**

ஒருவரை ஒருவர் வெறுக்கும் இரு நடிகைகளை ஒரே படத்தில் புகுத்தி நடிக்க ஒப்பந்தம் செய்ய ஒரு தயாரிப்பாளர் பெரும் பாடுபட்டார்.

தனித்தனியாக இவ்விருவரும் தோன்றும் காட்சிகளைத் தயாரிப்பாளர் எவ்வித சங்கடமுமின்றிப் படமாக்கி விட்டார். இவ்விருவரும் ஒரே சமயத்தில் தோன்றும் கட்டங்களைப் படமாக்கத் தொடங்கியதும் தயாரிப்பாளர், டைரக்டர் உட்பட சகல கலைஞர்களும் திக்குமுக்காட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

**நமது சென்னை நிருபர்**

சென்னையிலுள்ள ஒரு ஸ்டூடியோவில் அண்மையில் நடந்த படப்பிடிப்பின் போது மேற்படி இரண்டு நடிகைகளும் ஒரே இடத்தில் சந்தித்தனர். ஒப்பனைகளை முடித்துக் கொண்டு இருவரும் வந்து படப்பிடிப்புக்காகக் காத்திருந்தனர். முதலாவது ஒத்திகையும் நடைபெற்றது. ஒளி, ஒலிப் பதிவு முதலியவற்றை ஒழுங்கு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட இடைவேளையில் ஒரு நடிகை மின்சார விசிறியை ஓட விடும்படி கோரிக்கை விடுத்தார். "இப்பொழுது காற்று இல்லாவிட்டால் நான் இறந்துவிடப் போகிறேன்," என்று சப்தம் போட்டார். விசிறி வேலை செய்ய ஆரம்பமாகும் அதே வேளையில், மற்ற நடிகை "ஐயையோ 'ஃபானை'ப் போடாதே. காற்று வந்தால் நான் இறந்து விடுவேன்," என்று கூறினார். செய்வதறியாத ஏவலாளி தயாரிப்பாளரை அணுகினார். தயாரிப்பாளர் நிலைமையைப் புரிந்து கொண்டு, தமாஷாக, "முதலில் காற்றை வீச விடு. ஒருவர் இறந்து விடுவார். பின்னர் காற்றை நிறுத்திவிடு. மற்றவரும் இறந்துவிடுவார். பிரச்சினை தீர்ந்து விடும்," என்றார்.

## இலங்கையில் கால்பிரெய்த்

சர்வதேசப் புகழ் பெற்ற பொருளாதார அறிஞரான பேராசிரியரும் இந்தியாவில் அமெரிக்கத் தூதுவருமாகவுள்ள திரு. ஜோண் கென்னத் கால்பிரெய்த் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்கிறார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கும், கைத்தொழிற்துறை முன்னேற்றத்துக்கும் திரு. கால்பிரெய்த் பெரும் உதவி செய்துள்ளதாக இந்தியப் பிரதமர் பண்டிதர் நேரு பாராட்டியுள்ளார். அமெரிக்கப் பொருளாதாரத் துறையையிட்டுப் பல புத்தகங்களை எழுதியிருக்கும் திரு. கால்பிரெய்த், அமெரிக்க வாழ்க்கையில் பொருளாதாரமும் அரசியலும் இணைந்திருக்க வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டுள்ளார். இவர் ஒரு அரசியல்வாதியாக விருந்த போதும் 1961-ம் ஆண்டு வரை ஹார்வாட் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகக் கடமை பார்த்து வந்துள்ளார்.

## தளபதி

இளங்கோ கலை அரங்கத்தினர் இரா. தணலன் எழுதிய 'தளபதி' என்ற நாடகத்தை முதன் முதலில் தயாரித்து மேடையேற்றுவதென முடிவு செய்துள்ளனர். இந் நாடகத்தின் டைரக்ஷன் பொறுப்பை திரு. அன்பரசன், திரு. மோசஸ் ஆகியோர் ஏற்றுள்ளனர்.



குளிரூட்டும் கண்களினால், குவலயத்தை ஆளவந்த குமரி இவள் கருத்தெங்கே செல்கிறதோ தெரியவில்லையே! சிலோன் எண்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளுக்கு வரும் சித்தூர் ராணி பத்மினி விடை கூறுவார்.

## நாகராஜனின் 'நவராத்திரி'

### சிவாஜி-சாவித்திரி ஜோடி

அழகான ஒரு இள மங்கை ஒரு நாள் மனம் உடைந்து தன் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு தனிக் குணமும் பண்பும் அமைந்த ஒவ்வொருவனைச் சந்திக்கிறாள். இப்படி ஒன்பது நாட்கள் ஒன்பது பேரைக் காண்கிறாள். இந்த விசித்திர அனுபவத்தை மையமாக வைத்து ஏ. பி. நாகராஜன் ஒரு கதையை அமைத்திருக்கிறார். விஜயலட்சுமி பிலிம் சாருக்காக இப் படத்தை நாகராஜனே டைரக்ட் செய்கிறார். கவிஞர் கண்ணதாசன் இப் படத்துக்கான பாடல்களை எழுதியுள்ளார்.

அழகு மாதர் ஒன்று கூடி  
ஆடிப்பாடும் ராத்திரி  
காதலர்கள் ஒன்று கூடி  
சந்திப்பதும் ராத்திரி  
கவிஞருக்குக் கற்பனைகள்  
தோன்றுவதும் ராத்திரி  
கலைஞர்கள் ஒன்று கூடி  
ஆடுவதும் ராத்திரி  
அனைத்திலும் சிறந்தது  
நவ ராத்திரி.

இப்படி ஒரு பாட்டை நவ ராத்திரிக்காகக் கவிஞர் எழுதியிருக்கிறார்.

இப் படத்தில் ஒன்பது வித்தியாசமான பாத்திரங்களைத் தாங்கி சிவாஜி கணேசன் தோன்றுகிறார். பெண் பாத்திரத்தில் சாவித்திரி நடிக்கிறார்.



தேவிகாவையும், வசந்தியையும் இரு கோணங்கி மாப்பிள்ளைகளான சிவாஜியும், பாலாஜியும் திணறித் திண்டாடவைப்பது, பத்மினி பிக்சர்ஸ் சாரின் 'பலே பாண்டியா'வுக்காகத்தான்.

## திருமலை வேந்தன்

"உறங்கிக்கிடக்கும் தமிழ் பேசும் மக்களைத் தட்டி எழுப்பித் தம் நிலையறிந்து செயலாற்ற ஏதுவாக அமைந்துள்ள இந்நாடகங்கள் இந் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்றால் தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு ஏற்படும்" என்று திருமலை ஜோசப் கல்லூரி மண்டபத்தில் 14-7-63-ல் நடைபெற்ற "திருமலை வேந்தன்" என்ற நாடகத்துக்குத் தலைமை தாங்கிய திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. என். ஆர். இராசவரோதயம் கூறினார்.

## டெக்னிக்கலர் பிலிம் தொழிற்சாலை

'டெக்னிக்கலர்' கச்சா பிலிம் உற்பத்தி செய்வதற்கான ஒழுங்குகள் மைசூரில் நடைபெறுகிறது என்று தெரிகிறது. ஜப்பானிய பிலிம் கம்பெனி ஒன்றின் கூட்டு முயற்சியுடன் இத் தொழிற்சாலை இயக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## 'அருந்ததி' 'பெண் மன' மானாள்

மேல் நாடு சென்று பட்டம் பெற்றுத் திரும்பிய டாக்டர் அவன். தமிழ் நாட்டின் சேரிகளிலே ஒரு முத்தைக் கண்டு மோகித்தான். அவனிடம் அந்த முத்து நெருங்கமுடியவில்லை. சமூகம் விட்டுக் கொடுத்து விடுமா என்ன?

'பிளேக்' நோயின் கொடுமை ஊரெல்லாம் பரவுகிறது. ஓடித் தவித்து உதவி புரியும் டாக்டருக்கு உறுதுணை புரிய ஓடோடி வருகிறாள் அந்தத் தெய்வ மங்கை.

அப்பொழுதும் அவர்களிடையே வளர்ந்த காதலை அவன் ஏற்க முடியவில்லை. அவளும் அவனை ஏற்க மறுக்கிறாள். தன்னுடன் பிறந்த தங்கைக்காக மீண்டும் அவளைத் தொடர வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்படுகிறது. ஓடுகிறான்; அவளைக் காணவில்லை. வேறு ஒரு பெண் அவன் வாழ்வில் பிணைக்கப்படுகிறாள்.

இதுதான் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு வரும் 'பெண் மனம்' என்ற படத்தின் கதைக் கருவூலம். டாக்டராக நாகேஸ்வரராவும், தெய்வ மங்கை என வர்ணிக்கப்படும் வகையில் அஞ்சலிதேவியும், வேறு சௌகார் ஜானகி, பேபி காஞ்சனா, சோக்கிரட்டீஸ் தங்கராஜ், எஸ். பாலச்சந்தர் போன்றோரும் நடிக்கின்றனர். பல வருடங்கள் முயன்று மோட்சேஷ் சித்திரா நிறுவனத்தினர் தயாரித்த இப்படத்தை கே. சோமு டைரக்ட் செய்துள்ளார்.

'அருந்ததி' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப் படம், 'தெய்வ மங்கை'யாக வளர்ந்து இறுதியில் 'பெண் மனம்' என்ற பெயரில் வெளியாகியிருக்கிறது.



'பள்ளிகள் தோறும் பாரதிக்குச் சிலை சமைப்பேன்' என்ற குறிக்கோளுடன் சிற்ப சாஸ்திரத்தைப் பயின்று வரும் புல்லுமலையைச் சேர்ந்த திரு. அ. பெ. நல்லரெத்தினம் அவர்கள் தன் குடும்பத்தாருடனும், பாரதி சிலையுடனும் காணப்படுகிறார். இந்த பாரதி சிலை மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகத்தின் முகாமையிலுள்ள சிறுவர் பூங்காவில் விரைவில் நிறுவப்படவிருக்கின்றது.

கடந்த நாலரை வருடங்களாக திரு. நல்லரெத்தினம் சிற்பக் கலையில் தேர்ச்சி பெற்று வருகிறார். கொழும்பு விவேகாநந்த சபை மண்டபத்தில் இவரால் செய்யப்பட்ட சுவாமி விவேகாநந்தரின் முழு உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

28—7—63ல் கொழும்புத் தமிழ் எழுத்தாளர் மன்றம் நடாத்தவிருக்கும் விபுலாநந்த விழாவில் சுவாமி விபுலாநந்தரின் மாதிரி உருவ அமைப்பினை திரு. நல்லரெத்தினம் செய்து வைக்க விருக்கிறார்.

இப்படத்தில் செல்வி நவினி, திரு. நல்லரெத்தினம், செல்வி மாலினி, திருமதி மகேஸ்வரி நல்லரெத்தினம், குழந்தை தேவகி ஆகியோரைக் காணலாம்.

# காவியுடையில் புகுந்து கல்விப்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காய கால் கோள் விழாவை நிகழ்த்தினர், அன்று அடிகளார்.

### சுவாமியின் நன் முயற்சி

சுவாமி அவர்களின் முயற்சியால் சில ஆண்டுகளின் பின் அக் காணியில் இராமகிருஷ்ண சங்க வித்தியாலயம் ஒன்று உருவானது. திரு. வே. மயில்வாகனம், ஆசிரியர், இக் கட்டடத்தைக் கட்டித் தமிழ்த் தொண்டாக அன்னார்க்கு உவந்தளித்தளம ஈண்டு உணரத்தக்கது. போற்றத் தக்கது. சுவாமி அவர்களை இதற்குப் பின் பல ஆண்டுகளாக நான் சந்திக்க முடியவில்லை.

பயிற்சிக் கலாசாலையில் படிக்கும் காலை உதயதாரகையில் சுவாமி அவர்களின் பாடல் ஒன்றைப் படிக்க நேர்ந்தது. அன்று தொடக்கம் சுவாமி அவர்களைக்காண வேண்டுமென ஆசை கொண்டேன். அவரால் எழுதப் பெற்ற கட்டுரைகளைப் பல முறை படித்து மகிழ்ச்சி அடைந்தேன்.

எமது தந்தையாரின் மாதுலரான வித்துவான் ச. பொன்னம்பல பிள்ளை அவர்கள் எமக்கு இலக்கிய இலக்கணம் கற்பித்த ஒரு சில மாதங்களில் மட்டக்களப்புத் தமிழகத்து அறிஞர்களைப் பற்றிக் குறிப்பிட்ட போது, புலவர் வரிசையில் விபுலாநந்தர் அழகுத்தமிழ் பேசும் அறிஞர் என வாழ்த்தினர்.

இது எமக்குப் பெருமிதத்தைக் கொடுத்தது. இஃது இவ்வாறாக—சில ஆண்டுகள் உருண்டோடின. இவ்வேளையில் குருதேவர் காட்டிய வழியில் ஒழுகும் துறவியாக—கலைவளம் சான்ற அறிஞராக—சிந்தனைச் செம்மலாக பாரத நாட்டிலும்—ஈழவள நாட்டிலும் பல்வகையானும் பணிபல புரிந்து வரும் அடிகளாரை என் வாழ்க்கையில் காணவும் உரையாடவும் வாய்ப்புக் கிடையாது போய் விடுமோ என்று ஏங்கிய நாட்களும் உண்டு.

### அவருடன் உரையாடும் இன்பம்

ஒருநாள் இறைவன் திருவருள், அவர்பால் எம்மைக் கூட்டி வைத்தது. கல்லடி உப்போடையில் சிவபுரியில் அடிகளாரைக் கண்டேன். யாரோ ஒருவருடன் சல்லாபித்துக் கொண்டிருந்தார். ஆசிரியரின் மரபு பற்றி, எடுத்துக்காட்டுக்களோடு விரித்துக் காட்டினர். அவர் பேச்சு முடியும்வரை நானும் சிறுபிள்ளை போலக் கேட்டுக் கொண்டு நின்றேன்.

தமிழ் மொழியில் சிறப்பெழுத்துக்கள் ஐந்து என்பதை நாம் அறிவோம். அவற்றுள் ழகரத்தை விபுலாநந்த அடிகளார் எவ்வளவு அழகாகச் சொற்களோடு தொடர்பு படுத்தி உச்சரித்தார் என்பதை அன்று நான், நன்கு காண முடிந்தது—நான் பழக முடிந்தது. படித்தவர்களில் பலர் ழகரத்தை முறையாக உச்சரிக்க வகை தெரியாது திண்டாடுவதை நாம் இன்னும் காண்கிறோம். சங்கிலிக் கோவை போல அன்று இலக்கிய இலக்கணங்களை மேலும் விளக்கி எம்மை இன்ப புரிக்கு இழுத்துச் சென்றார் அடிகளார்.

### முத்தமிழுக்கு அத்தனையும் அர்ப்பணித்தார்

முத்தமிழுக்கும் உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒருங்கே அர்ப்பணித்த அடிகளார் இன்று அமரரானர். இவர் இயற்றிய பாடல்கள்-ஆக்கிய கட்டுரைகள்-பேசிய சொற்பொழிவுகள் சிறப்பாக தமிழ் வளம் சான்ற மக்கட் கூட்டத்தை ஆற்றுப் படை செய்வனவாகும்.

குருதேவர் வாய் மொழியை பாவடிவாகத். தந்து தாய் நாடும் சேய் நாடும் ஆன்ம ஈடேற்றமடைய வகை செய்துள்ளார். அவற்றுள் ஒன்று வருமாறு:—

“பூவிலைபகர் வோனில்லம்
புகுந்தவோர் வலைச்சியாங்கு
மேவிய நறுமணத்தால்
விழிதுயில் கொள்ளாளாகித்
தாவுமீன் கூடை யொன்றைத்
தன்னருகமைத்துத் தூங்கும்
பூவுலகினிற் பட்டோர்கள்
புன்மையின் வகையதாமே”

இத்தகைய எத்தனையோ பாடல்கள் அறிவுக் களஞ்சியமாக—வாழ்க்கையின் விளக்கமாகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன.

மதங்க சூளாமணி, யாழ் நூல் இவை இரண்டும் விபுலாநந்த அடிகளார் தமிழ் மக்கள் பெருமை அடையத் தந்த கருவூலங்கள் என்ப.

# பாவலரும்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கச் சென்றுவிட்டார். அவர் மறைந்து இன்று ஏறக்குறைய பதினறு ஆண்டுகள் ஆகின்றன. ஆண்டுகள் பல ஓடினும் அவர் நினைவு எம் நெஞ்சத்தில் இருந்து அகல மறுக்கிறது. இதனுற்றான் நம் மெய்யின்ப (சுத்தானந்த) அடிகளும்

'சங்க மணங் கமழு கின்ற
தனித்தமிழின் மணிமொழியும்
சிங்கமெனத் தமிழர் குலம்
திண்மையுறத் தலை நிமிர,
துலங்கமிகு பொது நலமும்
துறவறத்தின் ஒளிநலமும்,
தங்கு விபுலானந்தர்
தமிழிசைபோல் வாழியவே'

என அவர் பெயரை நெஞ்சில் நிறுத்தி வாழ்த்துகிறார். நாமும் அவர் வழி நின்று விபுலானந்தரின் வீறு புகழ் நிலமிசை நீடு வாழ்க என வாழ்த்துவோமாக.

# அரசாங்க எம். பி.கள் மீது....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுக்கு அனுப்பும் வரை 2 ஆண்டுகளும் 3 மாதங்களும் அவர்கள் முன் மாதிரியே இலங்கையில் வசிக்க அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறின், இந்தியர்களைப் பிரதானமாகக் கொண்ட இலங்கையரல்லாதோரால் இந்நாட்டின் பொருளாதார, சமூக வாழ்வு எவ்வளவு தூரம் சீர்குலைந்திருக்கிறதென்பதை அரசாங்கம் சரிவர உணர்ந்திருக்குமாயின், இம்மாதிரிக் கோழைத்தனமான, அசைந்தாடும் திட்டத்தை உருவாக்கியிருக்காது.

இந்தியாவுடன் ஒப்பிடும் போது நாம் சிறுபான்மையோரே! இந்தியா பெரியது, வலுவுள்ளது — நாம் சிறியவர்கள், பலவீனமானவர் என்றெல்லாம் நாம் அஞ்சுவதற்குக் காரணம். கிடையாது. தோட்டப் பகுதிகளில் வசிக்கும் இலட்சக்கணக்கான கள்ளத்தோணிகளுக்கும் தலைநகரையும், மற்றும் சில பிரதேசங்களையும் அப்படியே கைப்பற்றிக்கொண்டிருக்கும் இன்னும் இலட்சக்கணக்கான இந்தியர்களுக்குமிடையே சிங்கள இனத்தின் சுதந்திரம் சிக்கிக் கொண்டிருக்கிறது.

அரசாங்கம் இனி மேலும் அசைந்தாடிக் கொண்டிராமல், இலங்கையரல்லாதோரை வீட்டுக்கு அனுப்பும் கொள்கையை வரலாற்றில் இடம் பெறக் கூடியதாக அமுல் செய்ய சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும்.”

“சிங்கள நாட்டில் சிங்களப் பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் சிங்களத்திலேயே இருக்கவேண்டும். சிங்களப்பிள்ளைக்குத் தமிழிலேயோ, எதிர்காலத்தில் அவர்களைத் தமிழர்களெனக் கருதுவதற்கு ஆக்கமளிக்கக் கூடியதாகவோ பிறப்புப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தால், அது பாரதூரமான செயலாகும்”. என்று உள் நாட்டு விவகார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா கூறியதாக ஒரு செய்தியை 15-7-63ம் திகதி “தவஸ” பத்திரிகை பிரசுரித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 4000 சிங்களப் பிள்ளைகளின் பிறப்பு தமிழில் பதிவு செய்யப்பட்டிருப்பதால், எதிர் காலத்தில் அவர்களின் இனத்தைப் பற்றி சந்தேகம் ஏற்பட இடமுண்டு என்றும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை சிங்களப் பிள்ளைகளுக்கு 1000க்கு மேலதிகமான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழில் வழங்கப்பட்டிருக்கிறதென்றும் 10-7-63 திகதி “லவஸ” (மாலைத் தினசரி) ஒரு செய்தியை வெளியிட்டதையொட்டியே மந்திரி ஜயசூரியா மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளாராம்.

# ஊரடங்குச்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கோக் மாவட்டத் தொண்டர்கள் அங்கு சென்று 22-8-1920ல் அந்த இன்ஸ்பெக்ரரைக் கொன்று தீர்த்தனர்.

மக்கேட்டனின் மரணத்தைத் தொடர்ந்து தெரன்ஸ் மக்ஸ்வினி, ஒருமுகமாக மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார். கோக் மாவட்டத்தின் தொண்டர் படையின் தளபதியாக இருந்தவர் மக்கேட்டன். அவருக்கு உதவியாக இருந்தவர் மக்ஸ்வினி. அதே போல் துணை மாநகர முதல்வராகவும் இருந்தார். மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டபின் நிகழ்த்திய உரையில் மக்ஸ்வினி கூறுகிறார்—

“......எமது போராட்டம் பழிக்குப் பழிவாங்கும் ஒரு போட்டி யல்ல. துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தியில் தங்கியுள்ள போராட்டம்தான் அது. அதிக இன்னலை விளைவிக்கக்கூடியவர்களல்ல, அதிக இன்னலைத் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களே இறுதியில் வெற்றியடைவார்கள்......”

(வளரும்)




வலியால் அவஸ்தைப்படுவானேன்?

டிஸ்பிரின்

வலியை உடனே நிவாரணிக்கின்றது



டிஸ்பிரின் பரிபூரணமாகக் கரைந்து, உடனடியாகச் செயலாற்றுவதால் துரித நிவாரணம் ஏற்படுகின்றது.

தடிமன், சளிச்சுரம், தசை மற்றும் நரம்பு வலிகள் நோவுகள், பல்வலி மற்றும் மாதரின் சூதக வலிகளுக்கு உடனடி நிவாரணம் காண டிஸ்பிரினை எப்பொழுதும் கைவசம் வைத்திருங்கள்.




டிஸ்பிரின் உங்கள் டாக்டரால் சிபார்சு செய்யப்படுகின்றது.

டிஸ்பிரின்

பரிபூரணமாகக் கரைகின்றது.

டிஸ்பிரினில் பினசெட்டின் கலப்பு கிடையாது.

ரெக்கிட் அன் கொல்மன் ஆப் சிலோன் லிமிட்டெட்.
ஏஜண்டுகள்: ஈ. பி. கிரீஸி அன் கம்பெனி லிமிட்டெட்
DSC/JWT/5 55/57, இராணி வீதி, கொழும்பு 1.




# யாழ் 'நூல்' தந்த நீரர மகளிர் நிலத்தவன்

## முத்தமிழ் வித்தகன் விவுலாநந்தன்

—'துறவி'—

ஈழத்திருநாடு அன்று தரம்குன்றி நின்றது. அதோடல்லாமல் தமிழர் பண்பாடும், தமிழ் மொழியும் அழிந்தொழிந்து போகும் தறுவாயில் இருந்தது. இந்தச் சமயத்தில் தான் தமிழுக்கும் தமிழகத்துக்கும் புத்துயிர் ஊட்டப் பிறந்தார் ஒரு பெருந்தகை வள்ளல். அவர்தான் நாம் இன்று போற்றும் அரும் தவப் புதல்வர், முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார். இந்தத் தருணத்தில் அடிகளார் ஆற்றிய அரும் பெரும் சேவைகளைப் பற்றிச் சிறிது ஆராய்ந்தறிந்து அவைகளை மனதிற்கொண்டு அன்னாருக்கு நன்றி செலுத்துவோமாக.

சகல கலைகளையும் கசடறக் கற்று விளங்கிய அடிகளார் தாம் பிறந்த நாட்டில் தமிழ் மொழியைப் போதிக்க சிறந்த ஆசிரியர்கள் இல்லையே என்று மனம் வருந்தினர். இதை நிவர்த்தி செய்து வைக்க வேண்டும் என்ற அவாவினுல் உந்தப்பட்டு அல்லும் பகலும் இடைவிடாது பல் அறிஞர்களின் துணை கொண்டு பல நாள் முழு மூச்சுடன் உழைத்தார்கள். இதன் பயனாக யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் பிறந்தது. இச் சங்கம் தனது இடைவிடா முயற்சியினுல் இற்றைவரையில் எத்தனையோ பிரவேச பண்டிதர்களையும், பால பண்டிதர்களையும், பண்டிதர்களையும் ஈழத்திருநாட்டுக்கு அளித்துப் பெருமை கொண்டுள்ளது.

### பிற மொழிப்பற்றும் பரந்த மனமும்

அடிகளார் சில காலம் இராமக்கிருஷ்ண மடத்தில் 'பிரபோதசைதன்யராக' இருந்தார். இக்காலத்தில் அம்மடத்தின் வாயிலாக வெளிவந்த திங்கள் ஏடுகளான ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், வேதாந்த கேசரி ஆகிய தமிழ் ஏடுகளுக்கு ஆசிரியராகப் பணி புரிந்து தமிழ் மொழிக்கு அரும் பெரும் சேவைகள் புரிந்தார். அடியார்க்கு வேற்று மொழிகள் மீதும் அளவு கடந்த பிரியம் உண்டு. தாய் மொழியை வளர்க்கவேண்டுமானுல் வேற்றுமொழிகளையும், அவற்றிலுள்ள சிறந்த நூல்களையும் தெளிவுறக் கற்றறிதல் வேண்டும் என்பதை அவர் அறிவார். தமக்கென வாழாது பிறருக்காக உழைக்கும் பரந்த மனப்பான்மை கொண்டவர் அடிகளார்.

தமிழ் மக்கள் பிறமொழிகளையும் அவற்றிலுள்ள சிறந்த நூல்களையும் கற்றறிந்து முன்னேற வேண்டும் என்பதற்காக ஆங்கில வாணி, பூஞ்சோலைக் காவலன் என்னும் இலக்கியப் புதையல்களைத் தோற்றுவித்து அளவிலா மகிழ்ச்சி அடைந்தார். இடை இடையே பல கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் சந்தர்ப்பம் அடிகளாருக்கு ஏற்பட்டது. இச்சமயத்திலெல்லாம் கூட்டங்களில் பங்கு பற்றிக்கொண்டு சிறப்புற நடத்தியுள்ளார். அன்ெருரு நாள் அடிகளாருக்கு "நாடகத் தமிழ்" என்னும் பொருள் பற்றிப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. பேச்சின் திறமையை அறிந்த திரு. டி. சி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் அப் பேச்சை ஒரு நூல் வடிவமாக்கித் தரும்படி அடிகளாரைக் கேட்டுக் கொண்டார்கள். அவரின் விருப்பத்தை ஏற்றுக் கொண்ட அடிகளார் அதை நிறைவேற்றும் பொருட்டு செகப்பிரியரின் நாடகங்களையும், தனஞ்சயரின் தசரூபத்தையும் உறுதுணையாகக்கொண்டு,மதங்க சூளாமணி என்ற பெயரில் அந் நூலைத் தோற்றுவித்து, மதுரைத் தமிழ் சங்கத்து வாயிலாக அந்நூலை வெளியிட்டு அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். அடிகளார் தமிழ்த் தாய்க்குச் செய்த இந்தத் தொண்டினுல் அவர் பல்லோராலும் போற்றிப் புகழப்பட்டார்.

### கல்வித் துறையில் அவரின் பணி

துறவியான அடியார்க்கு ஸ்ரீ இராமக்கிருஷ்ண சங்க முகாமைக்காரராகப் பணியாற்றும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தினுல் அடிகளாருக்கு ஈழத்தின் கல்வி வளர்ச்சியைப் பற்றியும் சமய வளர்ச்சியைப் பற்றியும் சிந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தச் சிந்தனையின் எழுச்சியாக அடிகளார் பல புதிய கல்விக் கூடங்களை நிறுவியதோடல்லாமல், சைவ நெறியினைத் தழைத்தோங்கவும் செய்தார். அடிகளார் நிறுவிய கல்விக் கூடங்களில் காரை தீவைச் சேர்ந்த சாரதா வித்தியாலயமும், கல்லடி உப்போடையைச் சேர்ந்த சிவானந்த வித்தியாலயமும், மட்டக்களப்பைச் சேர்ந்த ஆனைப்பந்தி உயர்தர பெண்கள் பாடசாலையும், திருகோணமலையைச் சேர்ந்த இந்துக் கல்லூரியும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியேஸ்வர வித்தியாலயமும் போற்றுவதற்குரியன. அடிகளாரின் இச் சேவைகளினுல் ஈழத்தில் கல்வியும், சைவநெறியும் தழைத்தோங்கின. சேவை செய்து வாழ்வதையே தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட அடிகளார், சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என்று முதல் உரைத்ததோடல்லாமல் அங்கு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமையையும் தமதாக்கிக் கொண்டார். இங்கேயே தமிழ் பேராசிரியர் பணியினை ஏற்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் அடிகளாருக்குக் கிடைத்தது. தமிழ்த் தாய் மீது கொண்ட பற்றினுல் அந்த வேண்டுகோளை மறுக்காது ஏற்றுக் கொண்டார் அடிகள் அவர்கள்.

### யாழின் மீது கவனம்

இந்த நேரத்தில்தான் பண்டைத் தமிழர் கையாண்டு மறைந்த யாழ்களைத் திரும்பவும் தமிழ் மக்களுக்கு மீட்டுக் கொடுக்க வேண்டும் என்ற அவா ஏற்பட அவை பற்றி ஆராய்வதில் பூரண கவனம் செலுத்தி வந்தார். இவ் ஆராய்ச்சிக்கு இடையூருய் இருந்த தமிழ்ப் பேராசிரியர் பணியினையும் துறந்தார்.

பிற மொழிகளை மொழிபெயர்ப்பு செய்தலிலே தேர்ச்சி பெற்று விளங்கிய அடிகளார், விவேகாநந்த ஞானதீபம், கர்மயோகம், ஞானயோகம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகாநந்த சம்பாஷணைகள் ஆகிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து இராமக்கிருஷ்ண மடாலயம் வாயிலாக வெளியிட்டார். அடிகளார் சிலகாலம் சில பத்திரிகைகளுக்கு ஆசிரியராகப் பணி புரிந்து அப் பத்திரிகைகளை மேலோங்கச் செய்தார். 'பிரபுத்த பாரதா' என்ற ஆங்கிலத் திங்கள் ஏட்டுக்கு ஆசிரியராய் இருந்த காலத்தில் தான் அடிகளாருக்கு யாழ் நூல் சம்பந்தமான பூரண ஆராய்ச்சியில் ஈடுபடச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட அடிகளார் அவ் ஆராய்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்த ஆசிரியர் பணியினைத் துறந்தார்.

இலங்கைக் கல்வித் திட்டத்திலே சங்கீதத்துக்கு இடம் அளியாமை கண்டு மனம் வருந்திய அடிகளார் அரும் பாடுபட்டு சங்கீதத்துக்கான ஒரு பாடத்திட்டத்தையும், சமயத்துக்கான ஒரு பாடத்திட்டத்தையும் வகுத்துக் கொடுத்து சங்கீதமும் சமயமும் முன்னேற வகை செய்தார். இராப் பகல் என்றும் இன்பதுன்பமென்றும் பாராமல் பத்து வருட காலமாக ஆராய்ந்து இயற்றிய இசை நூலாம் 'யாழ் நூல்' தன்னைத் தமிழ்த் தாயிடம் சமர்ப்பித்துவிட்டுச் சிறிது காலம் ஓய்வு எடுத்துக் கொண்டார். இந் நூலின் சிறப்பினுல் அடிகளாரை அகில உலகமே அறியும் வாய்ப்பேற்பட்டது. 'யாழ் நூல்' அரங்கேற்றிய சில நாட்களில் அடிகளார் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

ஈழத்தாய் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வன் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தரின் நினைவு நாளாகிய இந் நன்னளில் அடிகளார் ஆற்றிய சேவைகளைப்பற்றி ஆராய்ந்து அறிந்து அன்னருக்கு ஒருசில நிமிட நேரம் அஞ்சலி செலுத்தி வணங்குவோமாக.

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 4

பெயர்______________________

பாடசாலை______________________

விலாசம்______________________

______________________

______________________ ______________________

பெற்றேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

---

## என்ன குருவி தெரியுமா?

—ஜெயராணி சபாபதிப்பிள்ளை—

வட்ட வட்ட(க்) குருவி
வால் இல்லாத குருவி
தட்டில் அமரும் குருவி
தட்டையான குருவி.

பட்டுப் போன்ற குருவி
பள பளக்கும் குருவி
வெள்ளை நிறக் குருவி
நெருப்பில் வேகும் குருவி

சுட்டுத்தின்னும் குருவி
ஜோராய் இருக்கும் குருவி
என்ன குருவி தெரியுமா?
சொன்னபிறகு புரியுமா?

விடை : அப்பளம்

---

## ஏன் பெய்தாய்?

—இன்பவண்ணன், கோயம்புத்தூர்—

சின்ன சின்ன முத்துக்களைச்
சேர்த்தி ருந்தாயா?—அதைச்
சிதற விட்டு வேடிக்கையே
பார்த்தி ருந்தாயோ?
என்னத் துக்காய்ப் பெய்கிருயோ
சின்ன மழையே—வானம்
இறக்கி விட்டு உயரத்திலே
ஏறிக் கொண்டதோ?

மின்ன லென்னும் உந்தன்நகை
மீதில் வெறுப்பா? – இல்லை
மேக மாகித் திரிவதிலே
மிக்க கசப்பா?
என்னத் துக்காய்ப் பெய்கிருயோ
சின்ன மழையே—வானம்
இடித்துத் தள்ளித் துரத்தியதோ
சின்ன மழையே!

தூறித் தூறிச் சொட்டுகிருய்
சின்ன மழையே—உந்தன்
தூறல் தன்னில் வானவில்லின்
சாயல் கண்டேனே!
சிறிச் சிறித் தூறினுலும்
சின்ன மழையே—கூடச்
சேர்ந்து நின்று அருவியாடத்
தினமும் ஆசையே!

---

## பொன் மொழிகள்

### அன்பு

பகைமை இவ்வுலகிலே ஒருபோதும் பகைமையால் ஒழிவதில்லை. அன்பினுலே தான் அது ஒழியும். இது பழைமையான நியதி.

—புத்தர்

### தர்மம்

கடலே ஆறுகள் அனைத்திற்கும், மேகங்களினின்று விழும் மழை நீருக்கும் முடிவிடமாகும். ஆயினும் அது ஒரு காலும் ததும்பி வழிவதுமில்லை. ஒரு காலும் வரண்டு போவதும் இல்லை. அதுபோல் கோடிக்கணக்கான மக்களால் தர்மம் தழுவப்படினும், அது வளர்வதுமில்லை; தேய்வதுமில்லை.

—புத்த[ர்]

### கஷ்டம்

கஷ்டம் என்னும் தீயில் குளித்துப் பரிசுத்தமடையாமல் எந்த நாடும்முன்னேற்றமடைந்தது கிடையாது. தனது குழந்தை வாழவேண்டுமென்பதற்காகத் தாய் கஷ்டமடைகிருள். கோதுமை விதை அழிவதன் மூலம்தான் உயிர் விளைகிறது. மரணத்திலிருந்தே உயிர் பிறக்கிறது.

—காந்திஜி

### அச்சம்

பட்டம், பதவி சொத்து ஆகியவைகளை இழப்பது, சிறைவாசத்தை ஏற்பது,உடலில் காயமடைவது, உயிரை இழப்பது, ஆகியவைகளுக்காக அச்சம் அடையாமலிருப்பதுதான் விடுதலைக்காகப் போராடும் நாடு கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களிலொன்று.

—காந்திஜி

### வெற்றி

தன்னை வென்றவன், தன்னிலும் ஆயிரம் மடங்கு பெருவலியுற்ற ஓராயிரம் பகைவர்களை வென்றும் தனது உணர்ச்சிப் பகுதிக்கு அடிமையாக இருப்பவனைக் காட்டிலும், மெய்யாகவே வெற்றி மிக்க வீரனுவான்.

—புத்தர்

சேகரித்தவர்:
"தாமரையாள்"
ஏழாலை.

# கழகச் செய்திகள்

## பதவியிலிருந்து விலக வேண்டாம்

### அரசாங்க ஊழியருக்கு சங்கச் செயலாளர் வேண்டுகோள்

**ஆட்சியாளரின் தமிழ் ஒழிப்பு முயற்சியை முறியடிக்க தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு வழிதானுண்டு. எத்துறையிலும் உள்ள அரசாங்க ஊழியர்கள் எக்காரணம் கொண்டும் சிங்களம் படிக்கவும் கூடாது; சேவையிலிருந்து விலகவும் கூடாது.**

யாழ். நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி. பாலசுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- சிங்களம் படிக்கக் கூடாது என்பதும் சேவையிலிருந்து வெளியேறக் கூடாது என்பதும் பழைய சேவையாளர்களுக்கு மட்டுமல்ல புதிய சேவையாளருக்கும் பொருந்தும். புதிய சேவையாளர் சிங்களம் கற்போம் என்ற நிபந்தனையின் பேரில் சேவையில் சேர்ந்த போதிலும் இப்போது அவர்கள் சிங்களம் கற்க மறுப்பதில் தவறு ஏதும் இல்லை.

ஒரு சிங்களம் பேசும் ஊழியர் தனது தாய் மொழியறிவுடன் மட்டும் சேவை செய்து முன்னேற்றமடைகிறார். ஆனால் தமிழ் ஊழியர் ஒருவர் தாய் மொழி மூலம் சேவையில் சேர்ந்தாலும் வேறு மொழி கற்றால் தான் முன்னேற்றம் உண்டு. இது பாரபட்சமானது. இதைஎதிர்ப்பது ஒவ்வொரு தொழிற்சங்கத்தினதும் கடமையாகும்.

இதனைப் பெறுவதற்கு நமது சங்கம் சட்டநடவடிக்கையில் இறங்கியுள்ளது. வேறு போராட்டம்நடாத்த வேண்டிய சூழ்நிலை உருவானால் நாம் அதற்கும் தயங்க மாட்டோம்.

சிங்களம் படிப்பவர்கள் தமது உரிமைகளை இழப்பதுடன் அரசாங்கம் தமிழர்களை வெளியேற்றவும் உடந்தையாகவுளர்.

அஞ்சல் எழுது வினைஞர் சங்கத் துணைச் செயலாளர் திரு. த. சோமசுந்தரம் பேசுகையில் கூறியதாவது:- சிங்களப் பரீட்சைக்குத் தோன்றும் ஒவ்வொருவரும் சிங்களச் சட்டத்தின் மூலம் உருவான ஏனைய சட்டங்களையும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது அர்த்தமாகும். அவ்வாறாயின் அஞ்சல் நிலைய அதிபர்களுக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலை ஏற்படும். இந்த நிலையில் எந்த சக்தியும் கை கொடுக்கமுடியாது சட்டமும் அரசாங்கத்திற்கே சாதகமாக இருக்கும்.

திரு. புதுமைலோலன் பேசுகையில் கூறியதாவது:- தமிழ் ஊழியர்களுக்கு ஆளவந்தார் செய்யும் கொடுமைகளுக்கு உருப்படியான எதிர் நடவடிக்கை எடுக்கும் ஒரே தொழிற் சங்கம் அரசாங்க எழுது வினைஞர் சங்கமாகும். எனவே நாம் இச் சங்கத்திற்கு என்றும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்றார்.

திருவாளர்கள் பி. வித்தியானந்த சர்மா, க. கந்தசாமி ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். 'அன்பை அழிக்காதே' என்ற நாடகமும் நடைபெற்றது.

—

### தூய மரியாவின் பழைய மாணவர் சங்கம்

'இலக்கியப் பசி, கலைப் பசி, அறிவுப் பசி, பதவிப் பசி, வயிற்றுப் பசி முதலிய பசிகள் வெறியாக மாறி விடுவதுண்டு. இதில் கலை வெறி இருக்கிறதே அது மிக மிகப் பயங்கரமானதொன்று. சங்க காலந்தொட்டு தமிழினம், மொழியுடன் கலையையும் இணைத்து வளர்த்து வந்துள்ளது. இந்தப் பழைய மாணவர் சங்கம் மீண்டும் நல்ல பல நாடகங்களை அரங்கேற்றி நாடகக் கலையை வளர்க்கவேண்டும்.'

இவ்வாறு ஞாயிற்றுக் கிழமை (16-6-63) அன்று 11 மணிக்கு அர்ச். மரியாவின் பழைய மாணவர் சங்கம் அண்மையில் நடத்திய 'கலை விழா' வில் பங்கு பற்றிய கலைஞர்களைப் பாராட்டும் விழாவில் திரு. அந்தனி ஜீவா குறிப்பிட்டார். மேலும் பீட்டர் முத்தையா, திருமதி மரியாம் பிள்ளை, செல்வி மேரி மில்லி, டேவிற் ராசையா, பிரான்சிஸ், என்சலம் டேவிட், ராஜா, ஜெகநாதன் முதலியோர் பேசினார்கள். இறுதியில் தேநீர் விருந்தும், இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றன.

### ஆலய புனர் நிர்மாணக் குழு அமைப்புக் கூட்டம்

அக்கரைப் பற்றில் ஆலய புனர் நிர்மாணக் குழு, அதிகார சபை ஆகியவற்றின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 5-ந் திகதி அக்கரைப் பற்று சித்திவிநாயகர் ஆலய வீதியில், தமிழரசுக் கட்சித் தலைவர் (அக்கரைப்பற்றுக் கிளை) திரு. த. சம்புநாதன் அவர்களைத் தற்காலிக தலைவராகக் கொண்டு நடைபெற்றது.

ஆலய புனர் நிர்மாணக் குழுவினதும், ஆலய புனர் நிர்மாண அதிகார சபையினதும் உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. எஸ். மாணுகப் போடி, உபதலைவர்: திரு. வே. கந்தப்போடி, பொருளாளர்: திரு. கே. வி. சோமசுந்தரம், காரியதரிசி: திரு. நவரெத்தினம், உப காரியதரிசி: திரு. வி. ஞான மாணிக்கம், போஷகர்: திரு. த. சம்புநாதன்.

ஒன்பது பேர் கொண்ட அதிகார சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் திரு. கே. பி. வடிவேல், திரு. மா. கனகரெத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். காரியதரிசி திரு. கே. நவரெத்தினம் நன்றியுரை கூறினார்.

### திரு. கந்தையாவுக்கு அனுதாபம்

சென்ற 6-7-63ல் நடைபெற்ற நாரந்தனை ஐக்கிய கத்தோலிக்கர் சமூக முன்னேற்றச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில், ஊர்காவற்றுறைத் தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு. வே. அ. கந்தையா அவர்களின் மறைவை நினைத்து சபையோர் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌனம் அனுட்டித்தனர். தலைவர் அன்னாரின் மறுவற்ற சேவையை விளக்கிப் பேசியதுடன், அனுதாபத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

'எல்லோரும் வாழவேண்டும்' என்ற தூய சிந்தனையினாலும், மறுவற்ற சேவையினாலும், எல்லோருடைய, குறிப்பாக அவரது எதிரிகளினுடைய அன்பையும் சம்பாதித்துக் கொண்ட ஒரு உத்தமரை இழந்து விட்டோம். தன்னலம் கருதாத் தலைவர்கள் நமக்குண்டு என்று இறுமாந்திருந்த தமிழ் பெருங்குடி மக்களுக்கு அமரர் கந்தையா அவர்களின் பிரிவு ஒரு பேரிடியாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக. அன்னாரின் குடும்பத்திற்கு எங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

—

### விபுலாநந்த கழகம் ஆண்டுக் கூட்டம்

திருகோணமலை விபுலாநந்தர் கழக 6-வது ஆண்டு நிறைவுக் கூட்டம் தமிழ் ஆசிரிய சங்க திருமலைக் கிளைத் தலைவரும் முன்னாள் நகராண்மைக் கழக உறுப்பினருமான திரு. த. இரத்தினவேல் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

தலைமையுரையில் திரு. த இரத்தினவேல் அவர்கள் குறிப்பிட்டதாவது: ஈழத் திருநாடு தந்த பேரறிஞர்களில் முதன்மையுடையவர் சுவாமி விபுலாநந்தர். தமிழகம் வள்ளுவனைப் போற்றுவதைப் போல் சுவாமி விபுலாநந்தரையும் போற்றியே ஆகவேண்டும். தமிழ்க் கலைக்கும் மொழிக்கும் இருபதாம் நூற்றாண்டின் புதிய நூல் கண்டவர்—விபுலாநந்தர் என்றால் மிகையாகாது.

அடுத்துப் பேசிய கழகச் செயலாளரும் தமிழரசுக் கட்சியின் திருமலைக் கிளைத் தலைவரும் நகராண்மைக் கழக உறுப்பினருமான திரு. இ. சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதாவது: "தமிழை வளர்க்க வேண்டியே சுவாமி விபுலாநந்தரைப் போல் ஏராளமான தமிழ்க்காவலர்கள் நம் நாட்டிற்குத் தேவை. ஒவ்வொரு தமிழ் அறிஞனையும் விழா எடுத்துப் போற்றுதல் தமிழ் வளர உதவும்."

புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்:

போஷகர்: திரு. மு. கோ. செல்லராசா, வழக்கறிஞர், தலைவர்: திரு. த. இரத்தினவேல், ஆசிரியர், துணைத்தலைவர்: திரு. சி. பத்மநாதன், இணைச் செயலாளர்: திரு. இ. சோமசுந்தரம், திரு. சி. குருநாதன், பொருளாளர்: திரு. ஜ. இராஜரெட்னம். கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது:

திரு. கந்தையா அவர்களது மறைவு குறித்து வருந்தும தமிழ் மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

### சுவாமி விவேகாநந்தர் நூற்றாண்டு விழா

கல்லடி உப்போடை, இ. கி. ச. பெண்கள் பாடசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்கத்தினரால் சுவாமி விவேகாநந்தரின் நூற்றாண்டு விழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஊர்வலத்தைத் தொடர்ந்து, திறந்த வெளியரங்கில் நடந்த இவ்விழாவுக்கு சுவாமி நடராஜானந்தஜீ தலைமை தாங்கினார். அவர் தமது தலைமையுரையின் போது "ஸ்ரீ ராமக்கிருஷ்ணர் விதைத்த விதையை நீரூற்றி உலகெலாம் ஓங்கி வளரச் செய்து, இனியகனிகளைக் கொடுக்கச் செய்த உத்தமத் துறவி, மாபெரும் தியாகி, வீரஞானி சுவாமி விவேகாநந்தர் தான். சுவாமிகள் பாரத நாட்டில் பிறந்தாலும் அவர் சேவை பார் முழுதும் பரந்து கிடந்தது. அவர் அமெரிக்காவைச் சேர்ந்த சிக்காக்கோவில் நடந்தேறிய சர்வமத மாநாட்டில் ஆற்றிய உரை எத்தனையோ ஆயிரம் உள்ளங்களை ஆட்டிவைத்தது. இந்து மதம் எல்லோருக்கும் ஏற்றமதம் என்பதை எடுத்துக் காட்டினார். சுவாமிகளின் பரந்த ஞானம், உயர்ந்த சமய அறிவு, அழகிய தோற்றம் என்பன அவருடைய அனுகூலத்துக்குதவி புரிந்தன" என்று குறிப்பிட்டார். மேலும் மட்டக்களப்புத் தெற்கு வட்டார வித்தியாதரிசி திரு. பொ. சின்னத்துரை, கல்லடி உப்போடை, மகளிர் முன்னணித் தலைவி திருமதி தெ. தங்கத்துரை, செல்விகள் வீ. வாலாம்பிகை, வ. யோகேஸ்வரி ஆகியோரும் பேசினர். செல்விகள் புவியோகராணி வைரமுத்து, வசந்தகோலம் அழகரெத்தினம் என்போரதும் நடன ஆசிரியர் ம. கைலாயபிள்ளை அவர்களின் மாணவிகளதும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நகைச்சுவைக் குமரன் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தது. செல்வி நா. அருட்சோதியும் விவேகாநந்த வித்தியாலய மாணவிகளும் இசை விருந்தளித்தார்கள்.

தலைமை ஆசிரியை செல்வி க. அருணாசலம் நன்றியுரை கூறினார். மங்கள கீதத்துடன் விழா முடிவுற்றது.

—

### வழியனுப்பு விழா

எம். ஜி. ஆர். மன்றத்தின் செயற்குழு உறுப்பினரான தோழர் முருகேசன் அவர்கள் தமிழகம் செல்வதை முன்னிட்டு அவருக்கு வழியனுப்பு விழா வொன்று எம். ஜி. ஆர். மன்றத்தின் சார்பாக நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் பி. எம். ஜலால் அவர்கள் தலைமை வகித்தார். மன்றச் செயலாளர் தோழர் சுப. இராமசாமி அவர்கள் வரவேற்புரையின் பின் தோழர் கம்பனதாசன் அவர்களும் மற்றும்பலரும் பேசினர்.

### திருவள்ளுவர் விழா

மடுவக்கொல்லையைச் சேர்ந்த மாவுசா கீழ்ப்பிரிவு திருவள்ளுவர் மன்ற ஆதரவில் வத்துகாம கிறிஸ்தவ தேவாலய கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. வெ. சபாநாயகம் அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தலைவர் தமது முன்னுரையில் திருக்குறளின் சிறப்பைப்பற்றி "சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்" என்னும் அழகுக் கிளையைப் பேசினார். திரு. இரா. பொன்னையா அவர்கள் அறிக்கை வாசித்தார். பொதுச் செயலாளர் திரு. ஏ. பி. வீரன் என்பவர் வரவேற்புரை நிகழ்த்தினார். மன்றத் தலைவர் திரு வே. பெருமாள் தேசிய கீதம் பாடினார். வத்துகாம வட்டார தோட்ட ஆசிரிய சங்கத் தலைவர் திரு. பொ. இராசையா. மாவுசா கீழ்ப்பிரிவு கணக்கப்பிள்ளை, திரு. ஆர். பெரியசாமி, கலாபோக் வேலு, திரு. கே. என். குமாரவேலு, திரு. இரா. பொன்னையா உற்பட பலர் பேசினர். மன்ற அங்கத்தினரால் 'மலராத வாழ்வு' என்ற நாடகமும் திறம்பட நடிக்கப்பட்டது. கீழ்ப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சுப் போட்டி, குறள் போட்டி நடாத்தப்பட்டது. திரு. வெ. சபாநாயகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். ஆசிரியர் திரு. வி. மாணிக்கவாசகர் பரிசில்கள் வழங்கினார்.

பரிசு பெற்றோர் விபரம்:- பேச்சுப்போட்டி:- ஆண்:- (1) அ. செல்லமுத்து, (2) சே. கோபால், பெண்; (1) மா. பத்மினி. குறள் போட்டி:- (1) சோதியம்மா, (2) கண்ணியம்மா, (3) குருநாதன்.

### பாரதி கண்ட...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொய் என்று வழங்கும் வேதாந்த மருள் இல்லாதவர். பழைய வேதாந்தத்தைப் புதிய தேசியத்துடன் கலந்து பாடி எல்லா மனிதரும் சமமென்ற கொள்கையை நிலைநாட்ட விரும்பினார். இவ்விருப்பமே எல்லோரும் சமானம், அண்ணன் தம்பி போல் என்ற புத்தியுடன் செல்வர்கள் ஏழைகளைக் காப்பாற்ற வேண்டும் என்றும் அது முடியாவிட்டால் நிலத்தை எல்லோருக்கும் பொதுவென்று சமதர்ம முறையில் அரசாங்கம் செய்ய வேண்டும் என்றும், ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை இந்தியாவில் என்றும், "வேதாந்த லௌகிகமான அனுஷ்டானம்" பேசவைத்தது. இதை விளங்கிக் கொண்டால் பாரதியை முதலாளித்துவவாதி என்றோ, கம்யூனிஸ்ட் என்றோ சமதர்மவாதி என்றோ பேசுவது தப்பிதம் என்பது புலனாகும்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத், தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

சுதந்திரன் அச்சகம்,
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.
தந்தி : சுதந்திரன். போன் : 3411.

## வெள்ளி 26 முதல்!

செல்லமஹால்
(கொட்டாஞ்சேனே)

ஏ. நாகேஸ்வரராவ்,
எம். ஆர். ராதா, ஏ. கருணாநிதி,
எஸ் பாலச்சந்தர், லட்சுமிராஜம்,
சௌகார் ஜானகி, பேபி காஞ்சனா
நடிக்கும்





மோகேஷ்ஸ்வர் சித்ராவின்

# பெண்மனம்



பாடல்கள்:
கண்ணதாசன், மருதகாசி,
தஞ்சாவூர் ராமையாதாஸ்
பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா,
சுசிலா, ஜமுனாராணி, ஜிக்கி.

## 4-வது வாரம்!

கெயிட்டி
(கொட்டாஞ்சேனே)

ராஜசுலோசனா,
முத்துக்கிருஷ்ணன்,
விஜயலட்சுமி, மனோரமா
நடிக்கும்

# பொன்னித் திருநாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால்


எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி,
பானுமதி, (காலஞ் சென்ற) என். எஸ்.
கிருஷ்ணன், மதுரம்
நடித்த

# மதுரை வீரன்

## 6வது வெற்றி வாரம்!

செண்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை)

மற்றும் 4 திரைகளில்!



விசாலாட்சி பிலிம்சாரின்

# சுமைதாங்கி

(ஆயிரம் வாசல் இதயம்)

திரைக் கதை—வசனம்—டைரக்ஷன்

—ஸ்ரீதர்—

ஜெமினிகணேசன் (சுமைதாங்கியில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்த நடிகர் எனப் பாராட்டுப் பெற்றவர்) தேவிகா
முத்துராமன், சாரங்கபாணி, நாகேஷ், விஜயலக்ஷ்மி
முதலியோர் நடித்தது

பாடல்கள் : கண்ணதாசன் இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி

நடனம்:
குமாரி கமலா

## 3வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் 5 திரைகளில்!



சி. எல். ஆனந்தன்
சி. எஸ். புஷ்பலதா
எம். ஆர். ராதா
ராஜ்ஸ்ரீ
டி. ஆர். நடராஜன்
ஆர். பக்கிரிசாமி
எஸ். கலாவதி
வி. கே. ராமசாமி
முத்துலட்சுமி
மற்றும் பலர்
நடிக்கும்

# செங்கமல தீவு

கண்டு களிக்க வேண்டிய கலைப் படைப்பு!
விரைவில் எதிர்பாருங்கள்!!

சினிமாஸ் ஸ்தாபனத்தாரின் திரைகளில்



நாடும், ஏடும், நற்றமிழர் வீடும் போற்றிப் புகழும் குடும்பச் சித்திரம்!

தென்னகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய, இந்திய ஜனதிபதியின் பரிசு பெற்றதமிழ்ப் படம்.

பி. பானுமதி — எஸ். வி. ரங்கராவ் — டி. எஸ். முத்தையா—சௌகார் ஜானகி
சந்திரபாபு—பி. டி. சம்பந்தம்—குமாரி சரசுவதி—ஆர். பாலசுப்பிரமணியம்
மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். புரொடக்ஷன்

# அன்னை

டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜூலை மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.